# தமிழ்த் தென்றல் வாசகம்

மூன்றாம் படிவம்

[illegible]தப் பகுதி

611

611/154




TB
031(8)
N54
136188

[illegible] பப்ளிஷிங் ஹவுஸ்

[illegible]பகோணம்

# தமிழ்த் தென்றல் வாசகம்

## மூன்றும் படிவம்—பொதுப் பகுதி

611
1-84

★

[புதிய பாடத்திட்டத்தைத் தழுவி எழுதப்பட்டுள்ளது]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
31 MAR 1954

ஆசிரியர்:

மேரி மாசிலாமணி, M. A., L. T.,
தமிழ் விரிவுரையாளர்,
பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரி, சென்னை

&

பண்டித நா. கனகராஜய்யர், M. A.

★

ஸி. வி. கே. பப்ளிஷிங் ஹவுஸ்
33, பச்சையப்ப முதலித் தெரு,
கும்பகோணம்

பதிப்புரிமை]

[விலை ரூ. 1

to
031(8)
N56

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-60
136188

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்.

# முகவுரை

சென்ற இருபதாண்டுகளில் நமது மாகாணக் கல்வித் திட்டத்தில் எத்தனையோ மாறுதல்கள் அலையெழுச்சிபோல ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி வந்துள்ளன. அவற்றிற்கேற்பப் புதிது புதிதாகப் பாடத் திட்டங்களும் அவ்வப்போது உருப்பெற்றெழுந்துள்ளன. தமிழ்ப்பாட நூல்களில் கதைகள் மட்டுமே இடம் பெற்ற காலமொன்றுண்டு. வெறுங் கதைகளால் மட்டும் மாணவர் அறிவு விரிவதில்லை என்ற கருத்துத் தோன்றியபோது, தமிழ்ப்பாட புத்தகங்கள் பொது அறிவை வளர்த்தற்குரிய பல்வகைப் பொருள்களையும் பெற்றிருத்தல் வேண்டுமென்னும் முறை தோன்றியது. அதனால், தமிழ்ப்பாட நூல்கள் விஞ்ஞான நூல்களாயமைந்தமை கண்ட கல்வித்துறையில் ஆராய்ச்சியும் அனுபவமுமிக்க அறிஞர்களின் கருத்துக்கிணங்கத் தமிழ்ப்பாட நூல்கள் அவற்றைப் பயிலும் இளைஞர்களுக்குத் தமிழ் இலக்கிய அறிவையூட்ட வல்லவையாயிருத்தலோடு, மொழிப்பயிற்சியும் அளிக்கத் தக்கவையாயுமிருத்தல் இன்றியமையாதது என்னும் சீரிய நோக்கத்துடன் அண்மையில் அரசியலார் புதிய பாடத்திட்டத்தை வெளியிட்டனர்.

**தமிழ்த் தென்றல் வாசகம்** என்னும் பெயரிய இத் தமிழ்ப்பாட புத்தக வரிசை இப்புதிய பாடத் திட்டத்தையொட்டி, இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பெற்றுள்ளது. நம் இன்றமிழ் இலக்கியங்களில் காணப்பெறும் மன்னர், புலவர், நூல்கள்,

நாடுகள், நகரங்கள், தொழில்கள்போன்ற சிறப்புற்ற பொருள்களை விளக்கும் பாடங்களே இதன்கண் இடம் பெற்றுள்ளன.

தமிழ்மொழிப் பயிற்சிக்கு இன்றியமையாத இலக்கணக் குறிப்புக்களும், பல்வகைப் பயிற்சிகளும் ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் தரப்பட்டுள்ளன.

இப்புத்தகங்களைப் பயிலும் மாணவ மாணவிகள் புதிய பாடத்திட்டத்தின் நோக்கத்திற்கிணங்கத் தமிழ் மொழியில் பெரிதும் தேர்ச்சியுறுவார்கள் என்பது ஒரு தலை. தமிழாசிரியர்களும், தலைமையாசிரியர்களும் இப்புத்தகங்களை ஆதரித்து எங்கள் முயற்சியை நன்முயற்சியாக்குமாறு வேண்டுகிறோம்.

பதிப்பாளர்

# பொருளடக்கம்

## உரை நடைப்பகுதி


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | புகார் நகரம் | 1 |
| 2. | பண்டித குடும்பம் | 10 |
| 3. | இந்திரவிழா | 20 |
| 4. | காகிதம் செய்தல் | 26 |
| 5. | மலையமான் மக்கள் | 34 |
| 6. | புத்தபிரான் | 42 |
| 7. | புலவர் புண்ணியம் | 54 |
| 8. | மாம்பழத்தால் நேர்ந்த தீமைகள் | 62 |
| 9. | வீட்டுத் தோட்டம் | 69 |
| 10. | குருவும் சீடரும் | 75 |
| 11. | மானமே பெரிது | 84 |
| 12 | விஞ்ஞான உலகம் | 91 |
| 13. | நாட்டுக்கு உழைத்த நல்லார் | 98 |
| 14. | உணவுக்கு உறுதொழில் | 110 |


## செய்யுட்பகுதி

### I. நீதிச்செய்யுள்


| | | |
|---|---|---|
| 1. | திருக்குறள் | 118 |
| 2. | நாலடியார் | 128 |

3. பழமொழி 129
4. அறநெறிச்சாரம் 130
5. நீதிநெறி விளக்கம் 130

II. கதைச் செய்யுள்

1. கண்ணனும் சகதேவனும் 132

III. சதகச் செய்யுள்

1. அறப்பளீசுர சதகம் 137
2. குமரேச சதகம் 138

IV. சுதந்திரோதயம் 141


P.G.K.

# தமிழ்த் தென்றல் வாசகம்

## மூன்றும் புத்தகம்

---

## 1. புகார் நகரம்

1. முத்தமிழ் நாடுகளுள் ஒன்றாகிய சோழவள நாட்டின் தலைநகராய் விளங்கியது புகார் நகர். இந்நகரத்தின் சிறப்புக்களை யறிந்துகொள்வதற்கு நமக்குச் சாதனமாயிருப்பன சங்ககாலத் தமிழ் நூல்களாகிய மணிமேகலை, சிலப்பதிகாரம், பட்டினப்பாலை முதலியனவே. 'புனல் பரந்து பொன் கொழிக்கும்' என்றும், 'வான் பொய்ப்பினும் தான் பொய்யாது,' என்றும் பாராட்டப்பெற்ற காவிரியாறு கடலுடன் கலக்குமிடத்தில் அமைந்தது இந்நகர். பூம்புகார் என்றும், காவிரிப்பூம்பட்டினம் என்றும், காகந்தி என்றும் இந்நகருக்கு அக்காலத்தில் பெயர்கள் வழங்கி வந்தன. 'நெஞ்சை அள்ளும்' சிலப்பதிகாரத்தில், புகார்க்காண்டம் எனும் பகுதியில், கோவலன் கண்ணகியை மணம் புரிந்துகொண்டதும், பின்னர் அவன் மாதவியை அடைந்த வரலாறும், பின் மாதவியைத் துறந்து கண்ணகியை அடைந்து அவளுடன் புகார் நகரை நீத்து மதுரையை நோக்கிச் சென்ற வரலாறும் கூறப்பட்டுள்ளன. மணிமேகலை கதையில், புகார் நகரில் நடந்தனவாகச் சில பகுதிகள் கூறப்பட்டுள்ளன. மணிமேகலை, தன் தாயாகப் போற்றி வந்த கண்ணகிக்கும், அவள் தந்தையாகிய கோவலனுக்கும் நேர்ந்த துன்பத்தை

யறிந்து வருந்தியதும், பின் அவள் சுதமதியுடன் உவவனம் சென்றதும், சோழவரசன் மகன் உதயகுமரன் அவளை அடைய விரும்பியதுமாகிய இவ்வரலாறுகள் கூறப்பட்டுள்ளன.

2. சிலப்பதிகாரம் முதலிய நூல்கள், பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டின் கண்ணிருந்த நகரங்களின் அமைப்பை நன்கு வருணிக்கின்றன. அந்நூல்களிற் கண்டபடி, புகார் நகர் இரு பெரும்பகுதிகள் கொண்டது. அவை **மருவூர்ப் பாக்கம், பட்டினப் பாக்கம்** என்பன. மருவூர்ப் பாக்கத்தில் யவனரிருக்கைகள் அமைந்திருந்தன. எகிப்து, கிரீசு, பினீசியா முதலிய அயல் நாடுகளிலிருந்து வந்த வணிகர், தொழிலாளர் முதலியவர் யவனர் என்று வழங்கப்பட்டனர். வாணிகத்தின்பொருட்டும், தொழிற்செய்து பிழைக்கும் பொருட்டும், அநேக யவனர் புகாரில் வந்து குழுமினர். அவர்கள், அலங்காரமான பெரிய பண்டசாலைகளும், அகன்ற நிலா முற்றங்களும் அங்கு அமைத்தார்கள். கடல் வாணிகத்தால் பொருளீட்டவந்த பல தேசத்தார் அவ்விடத்து ஒன்று சேர்ந்து, ஒரு தேசத்தார் போல வாழ்ந்தனர்.

3. மருவூர்ப் பாக்கத்தில், பல்வகைப் பண்டங்களை விற்பவர் கூடியிருந்தனர். சந்தனம், பூ, சுண்ணம், அகில் முதலிய வாசனைப்பொருள்களை வீதிதோறும் விற்றுத் திரிந்தவர் அங்கிருந்தனர். பற்பல வகைத் தொழிலாளர் அங்கே குடியிருந்தனர். பட்டு நூலாலும், பருத்தி நூலாலும், உரோமத்தாலும் நுட்பமான வேலைப்பாடுகளைப் பட்டுச் சாலியர் செய்து வந்தனர். வெண்கல வேலை செய்யும் கன்னார், செப்புப் பாத்திரம் செய்யும் கன்னார், மரவேலை செய்யும் தச்சர், கொல்லர், சித்திரம்

வரைபவர், சிற்பியர், பொன்னுல் வேலை செய்யும் உருக்குத் தட்டார், இரத்தின அணிகலன் செய்யும் தட்டார், தையற்காரர், தோலில் வேலை செய்யும் செம்மார் ஆகிய பற்பல தொழில் வல்லார் அங்கு வசித்து வந்தனர். வீதிகளில் பட்டும், பவளமும், சந்தனமும், அகிலும், முத்தும், மணியும் பொன்னும் காணப் பட்டன. இக்குறிப்புகளைக்கொண்டு புகார் நகருக் கிருந்த செல்வச் சிறப்பை அறிந்து கொள்ளலாம்.

4. அங்குக் கூலம் குவித்த **கூலவீதி**யிருந்தது. கூலம் என்பது தானியம். தானியங்கள் பதினெட்டு வகைப்படும். அவை: நெல், கம்பு, வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி, எள், கொள், பயறு; உழுந்து, அவரை, துவரை, கடலை, மொச்சை, மூங்கில் நெல், காராமணி ஆகியவையே. அத்தானியங்களைத் தனித் தனியே குவித்து வைத்து விற்பனை செய்தனர். இக்காலத் தைப்போலவே, அக்காலத்திலும், ஒரு நகரின் சுற்றுப் புறத்தில் உற்பத்தி செய்யப்படும் தானியங்களும், விளை பொருள்களும், நகரத்திலே வந்து குவிந்தன என்பது தெரிய வருகிறது. தானியங்கள் விற்ற வீதிக்குக் கூலவீதி யென்றே பெயர் வழங்கியது. பிட்டு வாணிகர், அப்பம் சுடுபவர், கள் விற்கும் பெண்டிர், மீன் விற்கும் பரதவர், உப்பு விற்கும் உமணர், எண்ணெய் வாணிகர், ஊன் விற்பவர் ஆகிய யாவரும் அங்கு நெருங்கி வாழ்ந்து வந்தனர். பாணர் முதலியவரும், குற்றேவல் புரிவாரும் அங்கே வாழ்ந்து வந்தனர்.

5. பட்டினப்பாக்கம் என்னும் பகுதி அகநகர் என்றும் வழங்கப்பெற்றது. அங்குச் செல்வரும், உயர்ந்தாருமே வாழ்ந்து வந்தனர். அங்குப் பெரிய

இராசவீதிகளிருந்தன. கொடிகள் கட்டப்பட்ட தேர்கள் காட்சியளிக்கும் அகன்ற தேர் வீதிகளிருந்தன. தென்னிந்தியாவில் மதத்தொடர்பால் பெருமையுற்றிருந்த நகர்களிலெல்லாம் தேர்கள் ஓடுவதற்கெனவே அகன்ற வீதிகளிருந்தன. காஞ்சீபுரம் முதலிய இடங்களில் காணப்படும் தேர் வீதிகளின் அகற்சி நம்மை வியப் படையச் செய்கிறது.

6. பட்டினப்பாக்கத்தில் பெரிய கடைத்தெருக்கள் இருந்தன. செல்வராகிய வணிகர் ஒரு புறம் வாழ்ந்த னர். வேதியர் ஒரு புறம் வாழ்ந்தனர். உழவர் ஒரு புறம் வதிந்தனர். மருத்துவ நூலார் ஒருபுறம் குடி யிருந்தனர். சோதிடர் ஒரு புறம் தங்கியிருந்தனர். ஒரு புறத்தே முத்துக் கோப்பாரும், சங்குகளையறுத்து வளை யல்கள் செய்வாரும் வசித்தனர். அரசனை நின்று போற்றும் சூதரும், இருந்து ஏத்தும் மாகதரும், அரச னுக்கு நாழிகையறிந்து கூறும் நாழிகைக் கணக்கரும், கூத்தர், வாத்தியக்காரர், தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவிகளில் வல்லார்களான குயிலுவரும், விதூஷகர், தேர்ப்பாகர், யானைப்பாகர், குதிரைப்பாகர், காலாட்படையினர் ஆகியவரும் வாழ்ந்து வந்தனர்.

7. மருவூர்ப்பாக்கத்துக்கும் பட்டினப்பாக்கத் துக்குமிடையே ஒரு பொது நிலமிருந்தது. இரு பெரும் பகையரசர் தங்கிய பாசறைகளுக்கு இடைப்பட்ட பொதுநிலமாகிய போர்க்களம்போல, இருபகுதிகட்கும் பொது நிலமாய் இருந்தது அது. அங்கு **நாளங்காடி** (காலைக்கடை) கூடியதால் எப்பொழுதும் பேரொலி கேட்டுக்கொண்டேயிருந்தது. அங்கு வாங்குவார் விற்பார் சத்தம் மிகுந்திருந்தது. அக்காலத்தில் காலைக்

கடைத்தெருவை நாளங்காடியென்றும், மாலைக்கடைத் தெருவை **அல்லங்காடி** யென்றும் வழங்கி வந்தனர். இக்காலத்தும், சென்னை நகரின் ஒரு பகுதி அல்லங்காடி (Evening Bazaar) என்று வழங்கப்பெறுகிறது. மாலை வேளையில் அங்குச் சென்றால், கண்ணைக் கவரும் விதவித மான பொருள்கள் விற்பனைக்கு வந்திருப்பதைக் காணலாம்.

8. புகார் நகரில், ஐவகை மன்றங்களிருந்ததாக நூல்கள் கூறுகின்றன. **வெள்ளிடை மண்டபத்தில்** யார் யாருக்குரியவை என்ற அடையாளங்கள் பொறிக்க பெற்ற பல பொதிகள் வைக்கப்பட்டிருக்கும். அங் கிருந்த கதவுக்குத் தாழுமில்லை. அங்குக் காவலாளரு மில்லை. அவற்றைத் திருடுபவரும் எவரும் இல்லை. **இலஞ்சி மன்றத்தில்** ஒரு பொய்கையிருந்தது. அது தூய தன்மையும் நோய் தீர்க்கும் வன்மையும் பெற்றிருந் தது. கூனர், குறளர், செவிடர், ஊமர் ஆகியவர் அதனில் மூழ்கிச் சுகம் பெற்றனர் என்று கூறப்படுகிறது.

9. **நெடுங்கல் நின்ற மன்றத்தில்** ஒரு நீண்ட கல் நின்றது. வஞ்சனையால் விஷம் உட்கொண்டார், பாம்பு தீண்டப் பெற்றார், பேய் பிடிக்கப்பட்டார் முதலியவர், அக்கல்லைச் சுற்றித்தொழுது துன்பம் நீங்கினர் என்று கூறப்படுகிறது. நான்காம் மன்றமாகிய **பூத சதுக்கம்** நாற்சந்தியைக்குறிக்கும். அங்குப் பூதமொன்றிருந்தது. நீதிக்குப் புறம்பாக நடந்தவர்களை அப்பூதம் அறைந்து உண்ணும். ஐவகை மன்றங்களுள், இறுதியாகக் கூறப் படுவது **பாவை மன்றமாகும்.** அங்கு ஒரு பாவை நின்றது. அரசனது செங்கோல் சிறிது வளைந்ததாயினும், தருமாசனத்தார் வழக்குறைக்குங்கால் நடுவு நிலைமை

நீங்கினும், அப்பாவையின் கண்ணிலிருந்து நீர் தாரை தாரையாய் வழியும்.

10. ஐவகை மன்றங்களேயல்லாமல், குயிலின் கீதமும், மயிலின் ஆடலும், நறுமணப் பூக்களும், வான ளாவிய மரங்களும் கொண்ட மலர் வனங்களும் புகாரி லிருந்தன. பகலில் உழைத்துத்தவித்த மக்கள் மாலையில் அவ்வனங்களுக்குச் சென்று அங்குள்ள காட்சிகளைக் கண்டு இன்புறுதற்கென அவை அமைக்கப்பட்டன போலும்! இக்காலத்தில் நாகரிகம் பெற்ற நகரங்களில் மலர்வனங்கள் அமைக்கப் பெற்றிருத்தல்போல அக் காலத்திலுமிருந்தன என்பது பாராட்டுதற்குறியது. பண்டைக்காலத்திலேயே நம்நாடு சிறந்த நாகரிகமுடைய தாய்த் திகழ்ந்ததென்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டு. புகாரில் ஐவகை வனங்களிருந்தனவென்று மணிமேகலை நூல் கூறுகின்றது. அவை, **இலவந்திகை வனம், உய்யான வனம், சம்பாதி வனம், கவேர வனம், உவ வனம்** என்பனவாகும். இலவந்திகையில் ஓர் இயந்திர வாவி இருந்தது. அவ்வாவியில், வேண்டும்பொழுது நீரை நிரப்பவும் போக்கவும் உதவின ஓர் இயந்திரம் அமைக்கப்பட்டிருந்தது. இயந்திரத்தைச் சுற்றி அமைந்த வனமே இலவந்திகை வனமாயிற்று. அங்கு அரசரும் அரசரைச் சார்ந்தவருமே செல்லலாம். உய்யான வனம் என்பது தேவர்களுக்குரிய வனமென் றும், அதனை ஒரு பூதம் காத்து வந்ததென்றும், மக்கள் அங்குச் செல்லலாகாதென்றும் கூறப்படுகிறது. சடாயு வின் உடன் பிறந்தவனை சம்பாதி ஆகாயத்திலிருந்து கீழே விழுந்த இடமே சம்பாதி வனமாயிற்று. சம்பாதி வனத்தையடுத்துக் கூறப்படுவது கவேர வனமாகும்.

அங்கு ஒரு பெண் தெய்வம் காவல் செய்ததாகக் கூறப் படுகிறது. உவவனம் மிகவும் அழகிய வனமாக மணிமேகலை நூலில் கூறப்பட்டுள்ளது. பல வகைப் பறவைகளும், பல வகைப் பூக்களும் அங்கு நிறைந் திருந்தன. அங்கிருந்த பல நிறப்பூக்களுடன் கூடிய பச்சையிலைகள், பல நிறப்பட்ட துகிலொன்றை விரித்தது போலக் காட்சியளித்தன. அங்கு ஒரு பளிக்கறை மண்டபமிருந்தது. அம்மண்டபத்தில் ஒரு தாமரைப் பீடிகையிருந்தது. அதைப் புத்தரின் பாதபீடமென்று வழங்கினர்.

11. சிறந்த அரசர் பலர் புகாரைத் தலை நகராகக் கொண்டு அரசு செலுத்தியிருக்கின்றனர். அவ்வரசர் களுள், **கரிகாற்பெருவளத்தானை** முதன்மைப்படுத்திக் கூறலாம். அவனையும் அந்நகரையும் சிறப்பித்தே கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்ற புலவர் பட்டினப் **பாலை** என்னும் நூலை இயற்றினர். இந்நூல், சங்கநூல் களுள் பத்துப்பாட்டைச் சேர்ந்ததாகும்.

12. அந்நகரில் பல தேவர்களுக்கும் கோவில்கள் அமைந்திருந்தன. புத்த சமண சமயங்கள் உயர்நிலையி லிருந்தன என்பது தெரிகிறது. இவ்வாறு பண்டைக் காலத்தில் பல்வகையானும் சிறப்புற்ற காவிரிப்பூம்பட்டி னத்தை இளங்கோவடிகள், புகார்க்காண்டத்தின் இறுதியில் புகழ்ந்து கூறுகிறர்:

"காலை அரும்பி மலருங் கதிரவனும்
மாலை மதியமும்போல் வாழியரோ—வேலை
அழகால் அமைந்த அவனிக்கு மாலைப்
புகழால் அமைந்த புகார்."

## குறிப்புரை

புனல் - தண்ணீர்; இருக்கை – இருப்பிடம்; குழுமினர் – கூடினர்; அணிகலன் – ஆபரணம்; அகற்சி – அகலம்; நாளங்காடி - காலைக் கடைத்தெரு; மன்றம் – பொதுவான மேடை; பொறிக்கப் பெற்ற – எழுதப்பெற்ற; பாவை – பதுமை; வாவி – குளம்.

## வினாக்கள்

I. விடை தருக :—

1. புகாருக்கு அக்காலத்தில் வழங்கி ய மற்றப்பெயர்கள் எவை?
2. புகாரைப்பற்றி அறிவதற்கு நமக்கு உதவியாயிருக்கும் நூல்கள் எவை?
3. மருவூர்ப்பாக்கம் எப்படிப்பட்டது?
4. நாளங்காடி, அல்லங்காடி என்பவை யாவை?
5. உவவனத்தின் சிறப்பு யாது?
6. புகார் நகர் இருந்த இடத்தை விளக்க ஒரு படம் வரை.

II. கீழ்வருவனவற்றை வாக்கியங்களில் அமை :—

சாதனம், பகுதிகள், வருணிக்கின்றன, குழுவினர், நிலா முற்றம், பொருளீட்ட, அணிகலன், காட்சியளிக்கும்.

## இலக்கணம்

மாணவர்கள் எழுத்துக்களை தெளிவாக உச்சரிக்கவேண்டும். அவ்வாறு உச்சரிக்க எழுத்துக்கள் எங்கெங்கு பிறக்கின்றன என்று அறிதல் வேண்டும்.

உயிர் எழுத்துக்களும், இடையின எழுத்துக்களும் கழுத்தை இடமாகக்கொண்டு பிறக்கும். மெல்லெழுத்துக்கள் மூக்கை இடமாகக்

கொண்டு பிறக்கும். வல்லெழுத்துக்கள் மார்பை இடமாகக்கொண்டு பிறக்கும். ஆய்த எழுத்துத் தலையை இடமாகக்கொண்டு பிறக்கும்.

மேற்கண்டபடி எழுத்துக்களை உச்சரித்துக்காண்க.

## பயிற்சி

1. இப்பாடத்தில் நான்கு வாக்கியங்களை எடுத்து எழுதி, அவற்றில் வல்லினம் முதலிய எழுத்துக்களைத் தனியே பிரித்து எழுதிக்காட்டுக.

2. ஒவ்வொரு இனமாக உச்சரித்து மேற்சொன்னபடி அமைந்து வருகின்றனவா என்று ஆராய்க.

## 2. பண்டித குடும்பம்

1. நாட்டின் விடுதலைக்காக உழைத்த நல்லார் சிலரைப் பற்றி நாம் முன் வகுப்பிற் படித்தோம். இப்பொழுது நாட்டு நலத்துக்காகத் தம்மையே வழங்கிய, ஒரு குடும்பத்தின் பெருமையைச் சிறிது அறிய முயல்வோம். இன்று இந்திய நாட்டில் பிரதம மந்திரியாராய் இருக்கும் **பண்டித ஜவாஹர்லால் நேருவை** உலகம் அறியும். காந்தியடிகளின் தியாக நோக்கங்களை உண்மையாகவே ஏற்றுக்கொண்டு, தமக்கு எவ்வளவோ அரசியலறிவு இருந்தும், அவர் வகுத்த வழியே நடந்த இவர் தந்தையார் பெயர் **பண்டித மோதிலால் நேரு** என்பதாம். அத்தந்தையாரும் புதல்வரும் நம் நாட்டுச் சுதந்தரத்துக்காகச் செய்திருக்கும் தியாகத்தை அளவிட்டுக் கூறுதல் எளிதன்று.

2. பிள்ளைகளாற் பெருமை பெறும் பெற்றோரும் உண்டு; பெற்றோராற் பெருமை பெறும் பிள்ளைகளும் உண்டு. பண்டித குடும்பத்தில் தந்தையாரால் மைந்தருக்குப் பெருமை வந்ததா, மைந்தரால் தந்தையாருக்குப் பெருமை வந்ததா என்பதை எவராலும் கூற இயலாது. மோதிலால்நேரு உத்தமக் குணங்களுக்கெல்லாம் உறைவிடமானவர்; உலகம் புகழும் தம் மைந்தரை இந்தியத் தாய்க்கென்றே அளித்தவர்; அவ்வழியே தந்தையார், மகனருக்கு ஆற்றும் நன்றியை முறைப்படி நிறைவேற்றியிருக்கிறார். மகனார், தந்தையாருக்கு ஆற்றும் உதவியை இன்று ஜவாஹர் வேறு எவரும் இயற்றாத வழியிலே இயற்றி வருகிறார். இப்படி ஒரு குடும்பத்தில் தந்தையாரும் மகனரும் வாய்ப்பது அருமையே.

3. **ஆனந்த பவனம்** என்னும் மாளிகை, இக் குடும்பம் நெடுங்காலம் வாழ்ந்த மாளிகை. இது பாரத்துவாச ஆச்சிரமம் இருந்த புண்ணிய பூமிக்கு அருகில், அலகாபாது நகரத்தில், இன்று கம்பீரமாய் நிற்கிறது. இவ்வீட்டைச் சுற்றிலும் பெரிய சுவர் உண்டு. இச் சுவர்க்குள் நாற்புறமும் தோட்டம் உண்டு. வீட்டின் நாற்புறமும் பெரிய தாழ்வாரங்கள் உண்டு. பொழுதுபோக்க உதவும் புல்தரை ஒரு பக்கம் அழகாய் அமைந்துள்ளது. பின் புறம் பழமரச்சோலை பலவகைப் பழங்களோடு நிறைந்திருக்கிறது. முன் புறம் வசந்த மண்டபம் ஒன்று இருக்கிறது. அம்மண்டபத்தினுள் ஒரு செய்குன்றமும், அக்குன்றத்தின் உச்சியில் அருள் பொழியும் சிவபிரான் திருவுருவமும் உண்டு. குதிரைகளும் வண்டிகளும் மோட்டார் கார்களும் நிற்கும் கூடங்கள் பல உண்டு. வீட்டுக்குள் அழகான சித்திரங்களும் சிற்பங்களும் நிரம்பிய பல பெரிய அறைகள் உண்டு. இப்படி எத்தனையோ நலங்கள் பொருந்திய இம்மாளிகை இன்று நாட்டின் பொது உடைமையாய்த் திகழ்கிறது. இம்மாளிகையில் பண்டித குடும்பம் வாழ்ந்திருந்தபோது எத்தனையோ பெரு மக்களுக்கு விருந்திட்டு விடை கொடுத்திருக்கிறது.

4. ஆனந்த பவனத்தின் தலைவராய் நெடுங்காலம் சிறப்புடன் வாழ்ந்த பண்டித மோதிலால் நேருவை இந்திய மக்கள் நன்கு அறிவார்கள். அவர் நியாயவாதத் தொழில் வாயிலாகப் பெருஞ் செல்வம் திரட்டிப் பெருந் தன்மையோடு வாழ்ந்த பெருமையுடையார்; கோடிக் கணக்கிலே பணம் தேடியும் நாளைக்கு வேண்டுமே என்ற எண்ணம் இன்றித் தாராளமாய் வாரி வாரி வழங்கிய தயாள குணசீலர்; தம் குமாரர் தம்மினும்

சிறப்பும் பெருமையும் புகழும் பெறும் வழியில் நடப்பது கண்டு மனம் மகிழ்ந்த பெருந்தகை; காந்தியடிகள் தூண்டுதலால் அரசியல் துறையில் இறங்கிய பிறகு, தமது ஆடம்பர வாழ்க்கை போயிற்றே என்று சிறிதும் வருந்தாத தீரர்; ஒத்துழையாமை இயக்கத்திற் சேர்ந்த பிறகு அன்பர் வந்து இலட்சக்கணக்கில் பணத்தை முன் வைத்து 'எமக்காகவாவது வழக்கு நடத்த நீதி மன்றத் துக்கு வரவேண்டும்,' என்று வேண்டியபொழுதும் தளராது நின்ற குணநிதி; சிறை வாசத்தைத் தளர்ந்த முதுமைப் பருவத்திலே அநுபவித்து, உடல் கெட்ட போது, மக்களைப் பார்க்க இயலாது அவர் எல்லாரும் சிறையில் இருப்பது அறிந்தும் மனம் உடையாது, நோயோடு போராடிய மாபெரு வீரர்; உயிர் உடலை விட்டுப் பிரியும் வரையில் தம்மால் இயன்ற அளவு பிறர்க்கு உதவி செய்ய வேண்டும், பிறர் உதவியை எதிர் பார்த்து வாழ்வது இழிவாகும் என்ற உணர்ச்சியோடு வாழ்ந்தவர். அப்பெரியாரை இந்தியராகிய நாம் மறக்க முடியுமா?

5. மோதிலால் நேருவின் வாழ்க்கைத் துணைவிய ராய், மூன்று மக்களைப் பெற்ற தாயாராய், ஆனந்த பவனத்தின் தலைவியராய் வாழ்ந்த **ஸ்வரூபராணி** என்ற பெண் தெய்வத்தை நாம் நினையாதிருக்க இயலுமா? அமைந்த பெயருக்கு ஏற்ப அழகிற்சிறந்த அப்பெண்கள் நாயகம், குணத்திலும் மிகச்சிறந்தவராவர்; தாம் பிறந்த குலத்திலே கடைசிக் குழந்தையாதலால் மிகவும் செல்வ மாய் வளர்ந்து, இளமையிலேயே மோதிலால் நேருவை மணம் புரிந்து கொண்டார்; மாமி மெச்சிய மருமகளா ராய்ச் சில காலம் வாழ்ந்து பிறகு தனிக்குடும்பத்திற்குத்

தலைமை பூண்டார்; நாயகர் தமக்கு வேண்டிய எவ்வகை நலத்திலும் குறைசெய்ய மாட்டார் என்பதை உணர்ந்து எப்பொழுதும் அவர் மனம் கோணாத வழியில் நடந்து கொண்டார்; ஒத்துழையாமை இயக்கம் தொடரும்வரை அப்பெண்ணரசியார் துன்பம் ஒன்றும் அறிந்ததில்லை. அறுபது வயதாகிய தலைவரே சிறைக்குச் செல்ல மனம் துணியும்போது, ஐம்பது வயதாகிய தாம் தமது கடமையை இயற்ற வேண்டாவா என்றே எண்ணினார்; உயர்வான விலை மிக்க மெல்லிய புடைவைகளை உடுத்துப் பழகிய உடம்பிலே முரட்டுக் கதராடை கட்ட வெகு விரைவிலே பழகிக்கொண்டார்; நாயகரும், ஏகபுத்திரரும், புதல்வியர் இருவரும் சிறை புகுந்து, தம்மைத் தனியே தவிக்க விட்டபோதும் மனத்தளர்ச்சி வெளிப்படாத முகத்தோற்றத்தோடு இருந்தார்; நாயகரை இழந்ததும் மனம் உடைந்தார்; என்றும் நோயே அறியாத உறுதி யான உடல் படைத்த தம் நாயகரைச் சிறைவாசமே கொன்றது என்று உணர்ந்தும் மனந்தளர்ந்து விடவில்லை. ஐம்பதாண்டுகள் உற்ற துணையாய் நின்ற தலைவரைப் பிரிந்த துயரத்தை அருமந்த மகனார் முகம் பார்த்து ஒருவாறு ஆற்றிக்கொண்டார்; மாளிகைக்கு வெளியே பொது வாழ்க்கையிற் கலவாதிருந்த அவ்வன்னையார், தம் மக்கள் சிறைப்பட்டது கண்டு அரசியற் கூட்டங் களில் தலைமை வகித்துப் பேசி இயக்கத்தை நடத்த முன் வந்தார்; அவ்வன்னையார் தந்த செல்வமன்றோ இன்று நாட்டை ஆள்வது!

6. ஆனந்த பவனத்தின் தலைவர் தலைவியர் என்ற இருவர்க்கும் கண்மணி போன்று விளங்கியவர் ஜவாஹர் லால். இவர் இன்று இருக்கும் நிலையை நாம் அறிவோம்.

பெற்றோர்க்கு இளமையிற் பிறந்த செல்வமகனார் இவர். இவர் பிறந்த பின்பு பத்துப்பதினோராண்டு வரையில் அக்குடும்பத்தில் வேறு குழந்தை பிறக்கவில்லை. அதனால் தாய்தந்தையர் அன்பை முற்றிலும் கவர்ந்தவர் இவரே. இளமைப் பருவத்திற் கலாசாலைக்கும் போகாமல் இவர் தம் வீட்டிலேயே தக்க ஆசிரியரிடம் கல்வி கற்றார். அந்நாளில் இவர்க்கு 'நம் தந்தையாரைப் போலவே நாமும் ஆக வேண்டும்,' என்ற எண்ணமே இருந்தது. பதினைன்காம் வயதில் இங்கிலாந்திலே கல்வி கற்கச் சென்று, கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையிற் கல்விச் செல்வம் தேடிப் பிறகு பாரிஸ்டர் பட்டமும் பெற்றுத் தாய் நாட்டுக்கு மீண்டு வந்தார். காந்தியடிகள் பழக்கத்தால் நாட்டுப் போராட்டத்தில் இறங்கி ஒரு முறை சிறை சென்று, இரும்பு போன்ற வலிமை பெற்ற உடல் தளர்ச்சி அடைந்து வெளி வந்திருக்கிறார். சிறை வாழ்வுக் காலத்தில் இவர் எழுதிய நூல்கள் இன்று உலகம் போற்றும் பெருநூல்களாய் விளங்குகின்றன. தமது இளமகள் பொருட்டுக் கடித உருவமாக இவர் எழுதிய சரித்திரக் குறிப்புக்கள் இவரது பரந்த அறிவை விளக்குகின்றன. இவர், தம் வரலாற்றை அழகிய நடையால் உலகம் புகழ எழுதியுள்ளார். தந்தையாருக்குப் பிறகு மகனார் அவர் செல்வத்துக்கு உரிமை படைப்பது போல, இவர் தம் தந்தையார் தாங்கிய காங்கிரஸ் தலைமைப் பதவியை அடுத்த ஆண்டில் அவரிடமிருந்து பெற்றுக்கொண்டார். இன்று இவர் காங்கிரஸ் சபையில் ஒப்பு உயர்வு அற்ற தலைவராய் விளங்குகிறார். காந்தியடிகள், 'அரசியல் துறையில் ஜவாஹரே என் வழித்தோன்றல்' என்று அடிக்கடிக் கூறுவார். அம்மொழி இன்று உண்மையாய் விளங்கு

கிறது. இவர் மனம் செல்வத்தால் மயங்காதது என்பது உலகம் அறிந்த உண்மை. இவர் தந்தையாருக்கு உத்தமக் குமாரர்; தாயாருக்கு அருமந்த செல்வர்; தங்கைமாருக்கு ஒப்பற்ற தமையனர்; மனைவியாருக்கு உயிர்த்துணைவர்; அருமை மகளுக்கு ஒருமைத் தந்தையார்; நாட்டுக்கு நிகரற்ற தியாகி; ஆட்சிக்கு இணையற்ற வீரர் என்று நம்மாற் போற்றத் தக்கவராவர்.

7. ஜவாஹர் மனைவியரான **கமலா** என்ற பெண்மணி டில்லி நகரத்திலே பெருஞ்செல்வர் குடியிலே பிறந்தவர்; பதினேழாம் வயதில் டில்லி நகரிலே உலகம் புகழும் உத்தமரைக் கணவராக அடைந்தவர்; இளமையில் நல்ல அழகும் உறுதியான உடல் வளமும் பெற்றிருந்தவர்; வயது ஆக ஆக நோயால் உடல் தளர்ந்ததாயினும், இளமையில் இருந்த அழகு சிறிதும் குறையவில்லை. இளந்தம்பதிகள் இருவரும் சிலகாலம் இன்பமாய் வாழ்ந்தனர். மெல்லியல் என்ற பெயர் முற்றிலும் பொருந்த உடலமைந்திருந்த கமலா, அரசியற் போராட்டத்திலே தம் நாயகர்க்குத் துணையாக இறங்கினர். சுயநலத்தை என்றும் எப்பொழுதும் நினையாத வீரப் பெண்மணி கமலா என்பதில் எட்டுணையும் ஐயம் இல்லை. இவர் மனத்தின் வலிமை ஆண் மக்களுக்கும் வாய்ப்பது அருமையாம். உடல் நலம் குன்றியபோதிலும் அதிகாலையில் படுக்கை விட்டு எழுந்து, பெண் தொண்டர் படைக்கும் பயிற்சி அளித்து, மழையும் வெய்யிலும் பனியும் பாராமல், உழைப்பார். யார் தளர்ந்தாலும் இப்பெண்மணி தளர்ந்ததேயில்லை. எண்ணித் துணிந்து ஒரு செயலில் இறங்கிய பின், உடல் நோய் காரணமாகப் பின்வாங்கும் எண்ணம் இவர் மனதில் எழவில்லை. தம் கணவர்

உலகம் புகழும் பெருமகனுராய் விளங்குவது கண்டு இவர் மனம் பூரித்தார். சிறைச்சாலையில் இருந்த தம் நாயகரை பிரிந்து நோயின் பொருட்டு அயல்நாடு போக நேருமே என்று வருந்தியதில்லை. உயிர் பிரியும் தருணத்தில் நாயகர், மகள் இருவரும் தம் அருகில் இருப்பது கண்டு இன்னும் சில நாள் நாட்டுப் பணி புரிய இயலாது போயிற்றே என்று மனம் வருந்தி இளம் பருவத்தில் இறந்தார்.

8. இன்று அமெரிக்காவில் நமது பிரநிதியாக இருக்கும் **விஜயலட்சுமி பண்டிதை** என்ற ஜவாஹர் சகோதரியாரை உலகம் நன்கு அறிந்துள்ளது. ஆசிய தேசமகாநாடுகளில் இந்தியப் பிரதிநிதியாக இவ்வம்மை யார் பேசும் பேச்சுக்களை நாம் அறிவோம். நாட்டுப் பணிக்காக இவர் தம் குழந்தைகளைப் பிரிந்து சிறையிற் புகுந்தார் என்பதை நாம் அறியவேண்டும். இப்பெண்ணரசியார் குழந்தைப் பருவமுதலே நுட்ப அறிவும், அளவற்ற ஆற்றலும் பெற்றிருந்தார்; எதைக் கண்டும் எளிதிலே குழப்பம் அடையாத மனவுறுதி இவருக்கு உண்டு; பிறர் கருத்தை எளிதில் அறிந்து அவரைத் தம் கருத்துக்கிணங்கச் செய்யும் திறமை இளமை முதலே இப்பெண்மணிக்கு உண்டு; இரஞ்சித பண்டிதர் என்ற சிறந்த வித்துவானை உரிய பருவத்தில் மணந்து சில ஆண்டுகள் வாழ்ந்து, இன்று அவரை இழந்து தனிமை பூண்டிருக்கின்ருர்; மூன்று பெண் குழந்தைகளைப் பெற்று வளர்த்து அப்பெண்களுக்குத் தக்க தாயாராய் விளங்குகின்ருர்; அரசியலிலே தம் காலம் எல்லாம் சென்ருலும், குடும்பப் பொறுப்பைச் சிறிதும் வழுவாமல் நடத்தும் திறமை இத்தாயாருக்கு உண்டு.

9. **கிருஷ்ணு ஹுதிசிங்கு** என்ற பெண்மணி ஜவாஹரின் இளைய தங்கையார்; பல வருடங்களுக்குப் பின்னே பிறந்ததால் தமையனுர் அன்புக்குப் பெரிதும் பாத்திரமானவர்; கல்வியில் மிக்க ஊக்கம் கொண்டு இளமையில் தந்தையார் அனுமதியாற் கல்விச் சாலைக்குப் போய்க் கல்வி கற்ருர். சிறையநுபவம், காந்தியடிகள் துணையால் குடும்பத்தோடு இப்பெண்மணிக்கும் வந்தது. இப்பொழுது **குணோத்தம ஹுதிசிங்கு** என்பவர்க்குத் துணைவியராய் இரண்டு மூன்று குழந்தைகளைப் பெற்றுப் பம்பாயிலே அமைதியாய் வாழ்ந்து வருகின்ருர்; தம் நாயகர் காங்கிரஸ் இயக்கத்துக்காகச் சிறை செல்ல நேர்ந்தும், காந்தியடிகள் ஆணையால் மனத்துயர் தாங்கிக் குடும்பப் பொறுப்பில் நின்ருர்; நல்ல எழுத்தாளர் என்ற பெயர் பெறும் நிலைமையில் இன்று விளங்குகிருர்.

10. ஜவாஹரின் ஒரே குமாரியாரின் பெயர் **இந்திரா** என்பதாம். இப்பெண்மணி தந்தையாரைப் போன்றே துணிவு மிக்க மனம் படைத்தவர். இவர், இளம் பருவத்திலே தந்தையார் பெரும்பாலும் சிறைக் கூடத்தில் இருந்ததால், அங்கிருந்து அவர் எழுதிய கடிதங்களைப் படித்தே மனவளர்ச்சி பெற்ருர்; பிறகு இங்கிலாந்திலும், ஐரோப்பாவிலும் கல்வி கற்றுக்கொண்டார். பெரும்போர் மூண்ட காலத்தில் ஸ்விட்ஸர்லாந்து என்ற சிறிய நாட்டிலே நோயால் வருந்தினுர்; இந்தியாவுக்கு எப்படி வருவது என்று தெரியாதிருந்த அந்நிலையிலும் மனம் கலங்கவில்லை. அன்று டேராடூன் சிறையில் இருந்த ஜவாஹர், தம் மகளார் இருந்த நிலைமையை அறிந்து, 'வரும் வழியில் பல விபத்துக்கள் விளைய இடம்

உண்டு; எனினும், அங்கே தனித்திருந்து கலங்குவதைக் காட்டிலும் இடுக்கண்களை எதிர்த்துத் துணிவோடு இங்கு வர நினைப்பதே மேலானது; வர விருப்பமானால் வரலாம். அதனால் வினையும் வினைவுகளையும் அநுபவிக்கவே வேண்டும்', என்று ஒரு கடிதத்தில் எழுதினார். இதற்கிணங்க இப்பெண்மணி எல்லா விபத்துக்களுக்கும் துணிந்து புறப்பட்டு வந்தார். தம் தாயாரைப்போலவே அழகும் உடலமைப்பும், தந்தையாரைப்போலவே மனவுறுதியும் பரோபகார சிந்தையும் கொண்ட இந்திரா, இப்போது தம் மனத்துக்குவந்த அறிஞரை மணந்து, இன்பமாய் வாழ்ந்து வருகின்றார்.

### குறிப்புரை

ஆற்றும் - செய்யும், இயற்றி - செய்து, திகழ்கிறது - விளங்குகிறது. திரட்டி - கூட்டி, பாரிஸ்டர் - வழக்கறிஞர், இணையற்ற - ஒப்பற்ற, தருணம் - சமயம், இணங்க - இசைய, விபத்து - ஆபத்து, பரோபகாரம் - பிறர்க்கு உதவி.

### வினாக்கள்

1. பண்டித குடும்பம் என்றது எவர் குடும்பத்தை ?
2. பண்டித குடும்பத்தில் தந்தையாரும் மைந்தரும் என்ன பெருமை உள்ளவர் ?
3. ஆனந்த பவனம் என்ன அமைப்புகளை உடையது ?

### இலக்கணம்

தமிழ் மொழியில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் உயிரெழுத்துப் பனிரண்டும், உயிர்மெய்யெழுத்துப் பத்தும் ஆக 22 எழுத்துக்கள் வரும்.

உயிரெழுத்துக்களுக்கு உதாரணம் :—

அறம், ஆறு, இடம், ஈடு, உப்பு, ஊண், எண், ஏடு, ஐயம், ஒன்று, ஓணன், ஔவை.

உயிர்மெய்யெழுத்துக்களுக்கு உதாரணம் :—

கண், சங்கு, தலைவன், நகரம், பவளம், மணம், வண்டு, யாறு, ஞமலி, ஙனம்.

மொழிக்கு முதலில் வராதென்று விலக்கிய எழுத்தை முதலில் பெற்றுவரும் சொற்கள் தமிழ்ச் சொற்கள் அல்ல. டப்பி, டமாரம், ரவை, ரம்பம், ரேடியோ, ரோஹிணி, லட்டு, லக்கம் லலிதா—இவை தமிழ்ச் சொற்கள் அல்ல. இவ்வாறு வேறு வருவனவற்றையும் கண்டு அறியலாம்.

## பயிற்சி

காந்தியடிகள், 'ஜவாஹரே அரசியல் துறையில் என் வழித் தோன்றல்' என்று கூறுவார்.

'வழித்தோன்றல்' என்ற தொடர்மொழியை வைத்து வேறு இரண்டு வாக்கியங்கள் எழுதுக.

தந்தை தாயருக்குக் கண்மணி போல்வர் ஜவாஹர்.

'கண்மணி' என்ற தொடர்மொழியை வைத்து வேறு இரண்டு வாக்கியங்கள் எழுதுக.

# 3. இந்திர விழா.

1. பண்டைக்காலத்தில் தமிழ் நாட்டில் கொண்டாடப் பெற்ற விழாக்களுள் **இந்திர விழா** ஒன்றாகும். இது சோணாட்டின் தலைநகராய் விளங்கிய **காவிரிப்பூம் பட்டினத்தில்** ஆண்டுக்கொருமுறை கொண்டாடப் பெற்றது. தமிழர், இந்திரனை மழைக்குரிய கடவுளாக மதித்து, வணங்கி வந்தனர். ஆகையால், காவிரிப்பூம் பட்டினத்தார், மழை வளந் தவறாது இருத்தற்பொருட்டு, அம்மழைக்குரிய கடவுளாகிய இந்திரனுக்கு விழா எடுத்தலை வழக்கமாகக் கொண்டிருந்தனர். மாதம் மும்மாரி பெய்து, நாடு வளம்பெற்று, மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்துவர வேண்டுமென்று, இவ்விழாவை ஆண்டு தோறும், இருபத்தெட்டு நாட்கள் கொண்டாடினார்கள். சித்திரைத் திங்கள் நிறைமதியன்று, இவ்விழா தொடங்கப் பெறும். இவ்விழா தொடங்குமுன், அந்நகர மாந்தர் கூட்டம் கூடுவர். சமயக்கணக்கர், சோதிடர், ஐம்பெருங் குழுவினர், எண்பேராயத்தார், முதலியவர் இக்கூட்டத்திற்குத் தவறாது வருவர். இவர் யாவரும் ஒன்றுசேர்ந்து இந்திர விழாவை எங்ஙனம் நடத்தவேண்டுமென்பதை ஆராய்ந்து, பல திட்டங்கள் வகுப்பர்.

2. புகார் நகரில், இந்திரனது வச்சிரம் நின்ற கோவிலொன்றிருந்தது; அதன் பெயர் **வச்சிரக் கோட்டம்.** வச்சிரக் கோட்டத்திலிருந்த மங்கல முரசை, யானையின் பிடரியிடத்தே ஏற்றுவித்து, அந்த யானையின்மேல் முரசறையும் வள்ளுவன் வீற்றிருப்பான். வள்ளுவன் என்பான் அக்காலத்தில், அரசர் அரண்மனை ஏவலாளருள் ஒருவன்; முரசறைவதே அவன் தொழில். அத்தொழிலைப்

பண்டையார் சிறந்த தொழிலாகவே கருதினர் என்பது நூல்களிலிருந்து தெரிய வருகிறது. வள்ளுவன், யானைமீதமர்ந்து, நகரை வலமாய்வந்து, விழாவின் தொடக்கத்தையும் முடிவையும் சாற்றுவான். அவன் ஆரம்பிக்கும்போது, ''இலக்குமி தங்கும் இம்மூதூர் வாழ்க! மேகம், மாதந்தோறும் தவறாது மும்மாரி பொழிக! அரசன் செங்கோலையுடையவனாகுக!'' என்று கூறிவிட்டுப் பின்னும், ''இவ்விழாவினை நீங்கள் நன்கு கொண்டாடுங்கள். இவ்வூரில் பசியும், நோயும், துன்பமும் நீங்குக! எங்கும் வளம் பெருகுக!'' என்பான். இவ்விதமாய் நகரைப்பற்றிய பொதுவான வாழ்த்துரைகளை வள்ளுவன் முரசறையும்போதெல்லாம் கூறுவது அக்கால வழக்கமாம். பொது வாழ்த்துக் கூறிய பின்னர், இந்திர விழாவை எங்ஙனம் கொண்டாட வேண்டுமென்பதையும், நகர மக்கள் செய்ய வேண்டுபவை இவையென்பதையும் கூறுவான்.

3. இந்திரவிழாக் கொண்டாடப்படும் இருபத்தெட்டு நாட்களிலும், மக்கள், வீதிதோறும் தோரணங்கள் கட்டுவார்கள்; எல்லா இடங்களிலும் பூரண கும்பங்கள், பொற்பாலிகைகள், பாவை விளக்குகள் முதலியவை வைப்பார்கள்; ஆங்காங்கே குலைக்கமுகு, வாழை, வஞ்சிக்கொடி, கரும்பு முதலியவை நட்டு மகிழ்வார்கள்; தூண்தோறும் முத்துமாலைகள் தொங்கவிடுவார்கள்; வீதிகளிலும் மன்றங்களிலும் பழமணலை மாற்றிப் புது மணல் பரப்பி வைப்பார்கள். எங்கு பார்த்தாலும் நல்லுடை நல்லணி அணிந்து, சிறுவர் சிறுமியர் ஆடிப்பாடிக் களித்திருப்பர். நகரம் முழுவதும் ஒரு பெரிய அழகோவியமாய் விளங்கும்.

4. விழாத் தொடங்கும் நாளில், மறக்குடியைச் சேர்ந்த மகளிர் பலர் கூடி, நாளங்காடியை அடைந்து அங்குள்ள பூதத்திற்கு அவரை துவரைப் புழுக்கலும், எள்ளுருண்டையும், சோறும் படைத்து நறும்புகை யெடுப்பர். மருவூர்ப்பாக்கத்து வீரரும், பட்டினப் பாக்கத்து வீரரும் அங்குக் கூடி வணங்குவர். சிலர் தம் உயிரையே பலியாகக் கொடுப்பதுமுண்டு. கற்பகத் தரு நிற்கும் கோவிலின் முன்னர் ஐராவதம் எழுதிய கொடியினை வானிற்பறக்க விடுவர். 'ஐராவதம்' என்பது தேவேந்திரனது யானையின் பெயர். பின்னர், ஐம்பெருங் குழு, எண் பேராயம், அரசகுமரர், வணிககுமரர் ஆகிய பலர், யானைமீதும், குதிரை தேர் முதலியவற்றின் மீதும் ஏறிச் சென்று, இந்திரனது கோவிலையடைவர். பின்பு அக்கோவிலிலிருக்கும் படிமத்தை நீராட்டுவர். திரு விழாத் தொடங்கிய நாள் முதல், அருகர், புத்தர் பள்ளி களிலும், அறம் காக்கும் சாலைகளிலும் ஆன்றோர் தருமம் போதிப்பர். சமயவாதிகள் தத்தம் சமய உண்மைகளை எடுத்துக்கூறி, ஏனைய சமயத்தவருடன் வாதம் புரிவர். அவ்வாதங்களில் பகை ஏற்படுவதில்லை. ஒவ்வொரு சமயத்திலும் சிறப்பாய் காணப்படும் உண்மைகளை, ஏனைய சமயத்தார் அறிவதற்கு அவை மிகவும் பயன்பட்டன. பிற்காலத்தில் தமிழ் நாட்டில், சமயங்காரணமாய் மக்களிடையே பூசலும் மனத் தாங்கலும் ஏற்பட்டு, மக்கள் சமுதாய நிலை சீர்கெட்டுப் போயிற்று. இதை அக்காலத்து எழுதப் பெற்ற தமிழ் நூல்களிலிருந்தே நன்கு அறிந்து கொள்ளலாம். ஆனால், இந்திரவிழாக் கொண்டாடப் பெற்ற அக்காலத்தில், இத்தகைய களைகள் சமயப்பயிரில் காணப்படவில்லை. புலவர் புரியும் பொருள் வாதம் அன்றி அங்கு வேறொரு வாதமும் நடைபெறவில்லை.

5. தெருக்களிலும், மன்றங்களிலும், மக்கள்கூடும் பொது விடங்களிலும், கூத்தர், குழல்வல்லார், யாழ்வல்லார், பாணர் முதலியவர் தத்தம் ஆடல் பாடல்களால் மக்களுக்கு இசை விருந்தளிப்பர். தமிழ் நாட்டில் அக்காலத்தில் இசைக்கலை உச்சநிலையிலிருந்ததென்பதற்கும். நாடகக்கலை மக்களால் பாராட்டப்பெற்று வந்ததென்பதற்கும், ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றும், முத்தமிழ் விரவப் பெற்றதுமான **சிலப்பதிகாரமே** சிறந்த சான்றாகும். அரங்கேற்று காதையில் கூத்து, இசை இவற்றைக் குறித்து கிடைக்கப்பெறும் அரிய செய்திகளும், கானல் வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை முதலிய காதைகளில் கிடைக்கப்பெறும் இசைத் தமிழ் வரிப்பாடல்களும், அக்காலத்திலிருந்த கூத்தர் முதலியவரது வித்தையின் சிறப்பைப் புலப்படுத்துகின்றன. இத்தகைய கூத்தர் பாணர் காட்டும் விநோதக் காட்சிகளைப் பகலிலும் இரவிலும் தெருக்களில் கூடிய மக்கள் கண்டுகளித்தார்கள். இரவு நேரங்களில் வெண்ணிலவின் தண்ணிய ஒளியில் எண்ணற்றவர் குழுமி, விண்ணிலுள்ள விசித்திரங்களையும், மண்ணிலுள்ள மாட்சிகளையும் ஒருவர்க்கொருவர் எடுத்துக் கூறி மகிழ்ந்தனர்.

6. இவ்விதமாய்ச் சித்திராபூரணையன்று தொடங்கிய விழா, இருபத்தெட்டு நாட்கள் நடைபெறும். இத்தனை நாட்களும் கோவில்களில் ஓமம் வளர்க்கப்படும். சிறைபட்டவர் விடுதலை பெறுவர். இருபத்தெட்டு நாட்கள் கடந்தபின், மாந்தரனைவரும் கடற்கரையைச் சேர்வர்; கடல் நீரில் மூழ்கி விளையாடுவர்; ஆடல் பாடல் நிகழ்த்துவர். அங்கு விற்கப்படும் பல்வகையான சிறந்த உணவுப் பொருள்களை மக்கள் வாங்கி, உண்டு களிப்பார்

கள். கடற்கரையில் கடைநாளிற் கொண்டாடப்பட்ட இவ்விழாவை நீராட்டு விழாவென வழங்கி வந்தனர். கோவலன் கண்ணகி சரித்திரத்தில் இந்திர விழாவின் கடைப்பகுதியாகிய கடலாடு விழாவில் நடந்த சம்பவமொன்று கூறப்படுகிறது. கோவலன் மாதவியுடன் கடற்கரையை அடைந்து, ஓரிடத்திலிருந்து வீணையை மீட்டி வாசிக்க, பின்மாதவியும் வீணையை மீட்டி வாசிக்க, இருவரும் ஒருவர்மீதொருவர் சந்தேகம்கொண்டு, மனத்தாங்கலுடன் பிரிந்து செல்கின்றனர்.

7. இவ்வாறு, ஆண்டுதோறும் இந்திர விழாக் கொண்டாடப் பட்டது. பின்பு எக்காரணத்தாலோ, இவ்விழாவை மக்கள் கொண்டாடாது விட்டதால், காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல் கொண்டது என்ற கதை கூறப்பட்டுள்ளது.

## குறிப்புரை

திங்கள் — மாதம், நிறைமதி — பௌர்ணமி, கோட்டம் — கோயில், மூதூர் — பழைய ஊர், கமுகு — பாக்கு, ஓவியம் — சித்திரம், மறக்குடி — வீரக்குடி, பூசல் — போர், குழுமி — கூடி மாட்சி — மேன்மை.

## வினாக்கள்

1. உமது ஊரில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் விழாக்கள் எவை ?
2. 'வள்ளுவன்' என்பவன் செய்த வேலை யாது ?
3. இந்திர விழாக் கொண்டாடப்பட்ட விதத்தைப் பற்றி உன் தந்தையாருக்கு ஒரு கடிதம் எழுதுக.
4. வள்ளுவன் முரசு அறையும்பொழுது கூறுவன யாவை ?

5. முத்தமிழும் கலந்துள்ள நூல் எது ?

6. இந்திர விழா எத்தனை நாட்கள் நடைபெறும் ?

## இலக்கணம்

ஒரு சொல்லில் ஒரு எழுத்து நிற்கவேண்டிய இடத்தில் வேறொரு எழுத்து வந்து நின்றால் **போலி** (போல வருவது) என்று பெயரிட்டழைக்கப்பட்டது. அவ்வாறு வேறு எழுத்துவரினும் பொருள் வேறுபடாது.

(உ–ம்) நாயிறு — ஞாயிறு
மஞ்சு — மைஞ்சு
பசல் — பைசல்

இவை முதலில் வேறு எழுத்து வந்தபடியால் முதற்போலி.

(உ–ம்) அரசன் — அரைசன்
அமச்சன் — அமைச்சன்
நீந்தினான் — நீஞ்சினான்

இவை இடையில் வேறு எழுத்து வந்தபடியால் இடைப்போலி.

(உ–ம்) மரம் — மரன
மதில் — மதிள்
பந்தல் — பந்தர்

இவை இறுதியில் வேறு எழுத்து வந்தபடியால் இறுதிப்போலி.

## பயிற்சி

மூவகைப்போலிகளுக்கும் உங்கள் சொந்த உதாரணந்தருக.

# 4. காகிதம் செய்தல்



கையினுல் காகிதம் செய்தல்

1. பனையூர் என்னும் ஒரு சிற்றூரில் நூறு குடிசைகள் உண்டு. அக் குடிசைகள் எல்லாம் பனை யோலையால் வேயப்பட்டவை. அவ்வூர்ப் பக்கத்தில் உள்ள பனங்காடு ஊராருக்கு பல வகையில் உதவியது. நுங்கு, பனம்பழம், பனங்கிழங்கு எல்லாம் அவர் களுக்கே பயன்படும். அந்த ஊரை ஒட்டி நன்செய் நிலங்கள் இல்லை. காய்கறித் தோட்டங்களும், பருத்திக் கொல்லைகளும், கடலைப் புன்செய்களும் உண்டு. சில கிணறுகள் அங்கங்கே தண்ணீர் உதவி வந்தன. அவ்வூரில் பனையோலைச் சுவடிகள் வெகு காலமாய் இருந்து வந்தன. இப்பொழுதும் எழுத்தாணியால் ஓலை

யில் எழுதத் தெரிந்த பலர் அவ்வூரில் உண்டு. பழைய காலத்தில் தமிழ்ப்புலவர் சிலர் வாழ்ந்த பெருமை அவ்வூருக்கு உண்டு.

2. இத்தனை பெருமையுள்ள பனையூரிலே **கறுப்பன்** என்ற குடியானவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு நான்கு பிள்ளைகள் இருந்தார்கள். அப் பிள்ளைகளை அவன் படிக்க வைக்கவில்லை; தன்னோடு வேலை செய்ய வைத்துக்கொண்டான். ஐந்து வயதுச் சிறுவன் ஆடு மேய்க்கவேண்டும். அவனுக்கு மூத்த பிள்ளைகள் பயிர்செய்யப் போவார்கள். அந்த ஊருக்கு தபாற் காகிதங்கள் வாரம் ஒரு முறை வரும். தந்தி என்பது எப்படி இருக்கும் என்றே அவ்வூரார் அறியார். தபாற் காகிதங்களும் ஒன்றோ இரண்டோதான் வரும். மணியக்காரரே அக்காகிதங்களை வாங்கிப் படித்துச் செய்தி சொல்லுவார்.

3. இங்ஙனம் வெளியுலகத்தை அறியாமல் அமைதியாய் இருந்த பனையூருக்கு ஒரு புது மனிதர் வந்தார். அவர்க்கு ஊர்கள் சுற்றுவதே வேலையாம். ஊர்களில் உள்ள பழைமைகளைப் பார்த்துக்கொண்டே வந்தாராம். பனையூரிலும் ஒரு பழைய கோயில் இருந்தது. அக்கோயில் அப்பொழுது புல்லும் செடியும் புதரும் மண்டி, புகும் வழி தெரியாத நிலையில் இருந்தது. அந்தக் கோயிலில் என்ன இருந்தது என்பது ஊரார்க்கே தெரியாது. எங்கிருந்தோ வந்த அப்புதியவர் அக்கோயிலைச் சுற்றிச் சுற்றி வந்தார்; முதலில் செடிகளையும் புதர் களையும் களைந்து நடக்க வழி செய்தார்; பிறகு உள்ளே போக வழி செய்தார்; அடித்தளத்தில் உள்ள கற்

கட்டடத்தைச் சுற்றியுள்ள மண்மேடுகளை வெட்டி விட்டார். ஊரார் சிலர் அவருக்கு அம்முயற்சியில் உதவியாய் இருந்தனர். மண்மேடு கரைந்ததும் கற் கட்டடம் அழகாய் வெளிப்பட்டது. அக்கட்டடத்தில் பல எழுத்துக்கள் இருப்பதை அவர் அவ்வூராருக்குப் படித்துக் காட்டினார்.

4. புது மனிதர் இத்தனை பாடு படும்போது ஊரார் சும்மா இருப்பார்களா? முதலிற் சிலர், 'இது ஒரு விநோதக் காட்சி!' என்று பார்க்க வந்தனர். பிறகு ஒவ்வொருவராய் அவருக்கு உதவி செய்ய முன் வந்தனர். கோயிலின் உள்ளும் புறமும் சுத்தமாயின. அவர் அடித்தளத்தில உள்ள சுவர்ப்புறத்தில் மை தடவி, அதன் மேல் காகிதத்தை வைத்தழுத்திப் பார்த்து எழுத்துக்களைத் தெளிவாகப் படித்தார். முழுதும் படித்த பிறகு, 'எத்தனையோ தொழிலாளிகள் வாழ்ந்தவூர் இப்படி உறங்கிக் கிடக்கிறதே!' என்று வாய் திறந்து சொன்னார். கூட்டம் மிகுந்துவிட்டது. அவரும் இந்தச் சமயத்தை எதிர்பார்த்தவர். ஆதலால், " அன்புள்ள தோழர்களே, இவ்வூரில் உங்கள் முன்னோர்கள் இந்த அழகிய சிற்பம் அமைந்த கோயிலைக் கட்டினார்கள்; கோயிலுக்குள் அழகிய அமைப்புக்கள் எல்லாம் அமைத்தார்கள். இவ்வூரில் வசூலிக்கப்பட்ட வரிகள் நாற்பது வகைக்குமேல் இருந்தன. ஒவ்வொரு தொழில் செய்த தொழிலாளரும், தம் தொழிலுக்குத் தக்கபடி வரி கொடுத்தார். இப்பொழுது உங்கள் ஊரில் நிலவரி ஒன்றைத் தவிர வேறு வரி செலுத்துவார் ஒருவரும் இல்லை. சிற்பிகள், ஓவியர், புலவர்கள், பொன்பணி செய்பவர், வெள்ளிப்பணி செய்பவர், செம்பு கொட்டு

வார் முதலிய பல தொழிலாளிகள் இங்கே இருந்திருக் கிருர்கள். இப்பொழுது நீங்கள் இப்படித் தூங்குகிறீர் களே!'' என்று கூறினர்.

5. ஊர்க்கிழவர் மெல்ல எழுந்திருந்தார். "இப் பொழுது எங்கள் பனையூர் இருக்கும் நிலையில் நாங்கள் என்ன செய்யலாம்? புன்செய்ப் பயிர் செய்கிருேம்; குளம் வெட்டுகிருேம்; ஒழிந்தபொழுதை உறங்கியும் வம்பு பேசியும் போக்குகிருேம். இந்த நாட்டில் உள்ள பழைய ஏடுகள் எல்லாம், எங்கள் ஊரில் உள்ள பனை மரங்கள் தந்த ஓலையால் அமைந்தவை என்ற பெருமை எங்களுக்கு உண்டு. அந்தப் பெருமையை நினைத்தே இப்பொழுதும் நாங்கள் நிமிர்ந்து நடக்கிருேம். புதுப்பெருமை என்ன தேடுவது என்பது எங்களுக்குத் தெரியவில்லையே!'' என்ருர்.

6. ஊர்களைச் சுற்றிப் பார்க்கும் புதியவர், மெல் லச் சிரித்து, "பெரியவரே. நான் என்ன சொல்வேன்! முன்னுளிலே சங்கப் புலவரும், பிற பெரும் புலவர்களும் பாடிய பாட்டுக்களை எழுத உதவிய ஏடுகள், உங்கள் பனையூர் மரத்திலிருந்து கிடைத்தது உண்மையில் உங்க ளுக்குப் பெருமையே. 'என் அப்பனும் பாட்டனும் பெரும் புலவராய் இருந்தார்களாம். இன்று எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது' என்று ஒருவன் சொல்வது வெட்கக்கேடு அல்லவா? முன்னுளில் உங்களூர், சுவடி எழுத ஓலை கொடுத்தது. இன்று எழுதப் படிக்க உதவு வது ஏடு அல்லவே! இன்று எழுதவும், புத்தகமாக அமைக்கவும் காகிதமன்ருே வேண்டும்? உங்கள் ஓலை யின் பெருமை இப்பொழுது குறைந்து போயிற்றே

என்று வருந்துவதாற்பயன் என்ன? உங்கள் ஊரில் அகப் படக்கூடிய குப்பை கூளங்களைக்கொண்டு, நீங்கள் இன் றும் காகிதம் செய்யலாமே! அன்று ஏடுகளுக்கு ஓலை தந்த கை, இன்று காகிதம் தரக்கூடாதா?'' என்று கேட் டார்.

7. ஊர்க்கிழவர் தலை நடுங்க, வாய் குழற, கைகால் பதற எழுந்தார். "நாங்கள் இன்றளவும் நல்லது பொல் லாது எல்லாம் ஏட்டிலேயே எழுதுகிறோம். எங்களில் பலருக்குக் காகிதத்தில் எழுதிப் பழக்கமே இல்லை. இப் பொழுது இவ்வூரில் படிக்கும் பிள்ளைகளே இல்லை. நாங் கள் காகிதம் செய்து யார்க்குக் கொடுக்கப் போகிறோம்? இப்பொழுது வரும் காகிதங்களைப்போல இவ்வூரில் குப்பை கூளங்களாற் செய்ய முடியுமா? அழகழகான வெள்ளைக் காகிதம் சீமையிலிருந்து வருகிறதாம், குப்பை கூளத்திலிருந்து அத்தகைய காகிதம் உண்டாகுமா? சொல்பவர் சொன்னாலும் கேட்பவர்க்கு மதியில்லையா?'' என்றார்.

8. இதைக் கேட்ட புதியவர் கடகட என்று சிரித் தார். "தாத்தா, ஒரு கேள்வி கேட்.கிறேன். கோபம் வேண்டா. உங்கள் பேரன் பேசினால் நீங்கள் எப்படிக் கேட்பீர்களோ, அப்படியே என் பேச்சைக் கேளுங்கள். இந்த ஊரில் கைராட்டை இருந்தது உங்களுக்கு தெரியாதா? இங்கே கைத்தறி இருந்தது நினைவில்லையா? அவை எல்லாம் இன்று எங்கே போயின? உங்கள் ஊரில் நூற்ற நூலை நீங்களே நெய்து கட்டிக்கொண்டது இப்பொழுது மறந்து போயிற்றே! வேட்டி வேண்டு மென்றால் அயலூருக்குப் போய் மில்லுத்துணியோ,

மல்லுத் துணியோ வாங்கி வரும் வழக்கம் எப்பொழுது உண்டாயிற்று? ஒரு வருடத்துக்கு இரண்டு வேட்டி போதும் என்று இருந்த பழக்கம் போய், ஆறு மாதத்துக்கு நாலு வேட்டி அடுத்தவூரிலே போய் வாங்கிவரும் நிலைமை ஏற்பட்டிருக்கிறதே! தன் கையே தனக்கு உதவி என்ற பழமொழி உங்களுக்குத் தெரியாதா? நமக்கு வேண்டிய காகிதம் குப்பை கூளத்தால் ஆகும் என்று நான் சொன்னாலும் நம்பமாட்டீர்களோ? இவ்வூரிலேயே நான் காகிதம் செய்து காட்டி, உங்களுக்கு ஒரு புதுத் தொழில் அமைக்கவேண்டும் என்ற விருப்பம் இருந்தால், அப்படியே செய்கிறேன்'' என்றார்.

9. ''செய்து காட்டினால் நாங்களும் பழகிக்கொள்கிறோம்'' என்று இளம் பிள்ளைகள் முழக்கம் செய்தார்கள். உடனே புதியவர், "உங்கள் ஊரில் உள்ள கந்தைத் துணிகள், குப்பை கூளம், மூங்கில் இலை, ஓலைக் குப்பை முதலிய எல்லாவற்றையும் கொண்டு வாருங்கள்'' என்றார். அப்படியே பிள்ளைகள் ஊக்கத்தோடு வாரிவந்தார்கள். புதியவர் அவற்றையெல்லாம் தண்ணீரில் ஊற வைத்தார். இரண்டு மூன்று நாட்கள் ஊறவைத்த பிறகு, நான்கு சிறுவர்களின் துணையைக்கொண்டு அதை அரைத்தார். அரைத்த கூழ் பழுப்பாய் இருந்தது. 'இந்தக் கூழா காகிதம் ஆகும்?' என்று ஒவ்வொரு சிறுவனும் கேட்டான். பெரிய கிழவரும் இந்த வம்பை அடிக்கடி வந்து பார்த்தார்.

10. புதியவர் அரைத்த கூழில் உள்ள நீரை மெல்ல மெல்ல வடித்து எடுத்தார்; தண்ணீர்வடிந்த பிறகு அந்தக் கூழை இரண்டு பெரிய மரப்பலகைகளுக்கு நடுவில் வைத்து அழுத்தினார். இளம் பிள்ளைகள் இந்த வேலையில்

அவர்க்கு வேண்டிய உதவிகள் எல்லாம் செய்தார்கள். பலகைகளின் நடுவே நின்ற கூழ் மெல்ல இரண்டு நாளிற் காய்ந்தது. கிழவரும் குமரரும் இளம் பிள்ளைகளும் கூட்டம் கூடி, இந்த வேடிக்கையைப் பார்க்க வந்தார்கள். புதியவர் பலகைகளைப் பிரித்துக் காகிதத்தை எடுத்துக் காட்டினர். பெரிய கிழவரும் சிறு பிள்ளைகளும் அந்தக் காகிதத்தைத் தொட்டுப் பார்த்து, ஆனந்தப் பட்டார்கள்.

## குறிப்புரை

அடித்தளம் — கீழ் இடம், ஓவியர் — சித்திரம் வரைபவர், பணி — வேலை, வம்பு — வீண் பேச்சு, துணை — உதவி, குமரர் — காளைப் பருவமுடையவர்

## வினாக்கள்

1. பனைமரத்தால் உண்டாகும் பயன்கள் எவை ?
2. புதிய மனிதர் கோயிலிலே என்ன கண்டார் ?
3. பனையூரின் பழம் பெருமை என்ன ?
4. முன்னே அவ்வூரில் என்னென்ன தொழிலாளர் இருந்தனர் ?
5. 'தன் கையே தனக்கு உதவி' என்ற பழமொழி இங்கு எதற்காக வந்தது ?
6. காகிதம் செய்யும் வழி யாது ?

## இலக்கணம்

கந்தன் வந்தான்; மரம் விழுந்தது. இந்த வாக்கியங்களில் கந்தன், மரம் என்ற சொற்கள் பெயர்ச் சொற்கள். வந்தான், விழுந்தது என்ற சொற்கள் வினைச் சொற்கள்,

பெயர்ச் சொற்கள் இருவகைப்படும். அவை: இடுகுறிப் பெயர், காரணப் பெயர் என்பன.

(உ—ம்) மரம் — இடுகுறிப் பெயர்.
அணி — காரணப் பெயர்.

இடுகுறிப் பெயர் இரு வகைப்படும். அவை: இடுகுறிப் பொதுப் பெயர், இடுகுறிச் சிறப்புப் பெயர்.

(உ—ம்) மரம் — இடுகுறிப் பொதுப் பெயர்.
வாழை — இடுகுறிச் சிறப்புப் பெயர்.

காரணப் பெயரும் இரு வகைப்படும். அவை: காரணப் பொதுப் பெயர், காரணச் சிறப்புப் பெயர்.

(உ—ம்) அணி — காரணப் பொதுப் பெயர்.
வளை — காரணச் சிறப்புப் பெயர்.

**பயிற்சி**

1. பெயர்ச் சொற்கள் இரண்டைக் குறிப்பிடுக.

2. இடுகுறிப் பொதுப் பெயர்க்கும், காரணச் சிறப்புப் பெயர்க்கும் உதாரணந் தருக.

# 5. மலையமான் மக்கள்

1. சோழநாட்டில் உறையூர் மிகவும் பெருமை பெற்ற அரசிருக்கை நகராகும். உறையூர் நல்ல நிலையில் இருந்தபோதே புகார் நகரம் தோன்றியது. இந்த இரு நகரங்களுக்குப் பிறகு தஞ்சாவூர் சோழர்க்குத் தலைநகரம் ஆயிற்று. சயங்கொண்ட சோழபுரமும், கங்கைகொண்ட சோழபுரமும், இராசராசேச்சுரமும் பெரு நகரங்களாய் அமைந்து, அரசர் வாழ இடந்தந்தமை பிற்காலத்திலேயே தான். ஒரு காலத்தில் திருவாரூரும் சோழர் தலைநகர மாய் இருந்தது. இன்று இந்நகரங்கள் எல்லாம் பழைய நினைவுகளைச் சிறிது சிறிது எழுப்பும் நிலையில் உள்ளன. புகார் நகரமும், உறையூர் நகரமும் தம் பெருமை இழந்து சுருங்கிவிட்டன.

2. மன்னர் பலர் அறநெறி தவறாது அரசு செலுத்திய சோழ நாட்டிலே, உறையூரிலே, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மன்னர் இருந்தார். அவர் பெயர் கிள்ளி வளவர் என்பது. அம்மன்னர் தமிழறிவு மிக்கவர்; தாமே கவிகள் பாடும் திறமை நிரம்பியவர்: புலவரைக் கண்டால் அன்போடு ஆதரிக்கும் அருங் குணம் உள்ளவர்; நல்ல குணம் எங்கே இருந்தாலும் அதனைப் பாராட்டிப் புகழ்ந்துரைக்கும் பெருந்தன்மை உள்ளவர்; குடிகள் அன்பை நிரம்பப் பெற்றவர்; நாட்டின் நலத்திலே இடையறா நாட்டம் உடையவர். கல்வியும் கலையும் தம் ஆட்சியின்கீழ் உள்ள நாட்டில், பிற நாடுகளில் இருத்தலைக் காட்டிலும் சிறப்பாக வளரவே, வழி பல செய்திருந்தார்.

3. அக்காலத்தில் **மலையமான்** என்ற வள்ளல் ஒருவர் இருந்தார். அவர் **காரி** என்றும், **திருமுடிக்காரி** என்றும் வழங்கப்பெற்று வந்தார். அவர் வேளிர் குலத்திற் பிறந்த குறுநிலத்தலைவர். புலவர் கூட்டம் ஓயாமல் அவர் அரசு நடத்திய **திருக்கோவலூர்க்குப்** போவதுண்டு. வள்ளல்கள் எழுவர் என்று புகழப்பட்ட கூட்டத்திற் சேர்ந்த அவர், புலவருக்கு அள்ளிக்கொடுத்த அளவை நாம் அளந்துரைக்க முடியாது. அவர் நாடு சிறியதே ஆயினும், ஆட்சி முறை, அறநெறியில் நீதி வழங்கும் திறம், மக்கள் வாழ்க்கை நலம், தொழில் வளர்ச்சி, வியாபாரப்பெருக்கம் முதலிய பலவகையிலும் சீர்பெற்றிருந்தது. அவர் செல்வமிகுதியால் மன்னரைப் போலவே முடியணிந்து ஆட்சிபுரிந்து வந்தார்; அதனால் திருமுடிக்காரி என்ற பெயர் அவருக்கு வழங்குவதாயிற்று.

4. தமிழகத்திலே சேர சோழ பாண்டியர் என்ற மூன்று குலத்தவர் முடிமன்னராய் விளங்கிய காலம் அது. அக்காலத்தில் வளவன் ஆண்ட சோழநாட்டுக்கு அருகில் இருந்த ஒரு குறுநிலத்தலைவன் மணிமுடி தாங்கிப் பெருமிதம்கொண்டிருப்பது அவருக்கு வெறுப்பு விளைத்தது. அவ்வெறுப்பை வளர்க்க வேறு சில துணைகளும் வந்தன. இருவர் போர்செய்யும்படி தூண்டுவதே தொழிலாய் இருந்த சிலர், "அவனிடம் பெரும் படையுண்டாம்! அவன் அரண், வலிமை மிக்கதாம்! அவன் செல்வச் சிறப்பும் மிக்கவனும்! அதனாலேயே இங்ஙனம் முடி மன்னரான சோழரை மதியாதிருக்கிறான்!" என்று கூறிக் கிள்ளி வளவர் மனத்திலே பகையை மூட்டினர்.

5. சோழ மன்னர் அவரை எதிர்த்துப் படை திரட்டிப் போர் செய்யப்போவது, தமது பெருமைக்குத் தக்க

தாகாது என்று நினைத்தார். மனம் மாறுபட்டிருக்கும் போது உயர்ந்த பண்புகள் வெளிப்பட வழியுண்டாகுமா? நெடுநாள் அவர் தமது நாட்டைச் சுற்றி வரும்போது ஒரு சிற்றூரிலே இரண்டு சிறுவர்கள் வழி தெரியாமல் மருண்டு நிற்பதைப் பார்த்தார். அவ்விருவரும் மலைய மான் மக்களே என்பதை அவர்கள் முகத் தோற்றத்தால் அறிந்தார். அவ்வூர் சோழ நாட்டைச் சேர்ந்ததாயினும், மலையமான் நாட்டுக்கு மிகவும் அருகில் இருப்பதை நினைத்துப் பார்த்தார். தம் பின் வந்த ஏவலரால் இளஞ் சிறுவராகிய அவ்விருவரையும் சிறை செய்வித்து, உறை யூர்க்கு விரைவில் கொண்டு வந்தார்.

6. அவர், 'மலையமான் மதத்தை ஒடுக்க இதுவே வழி!' என்று துணிந்து, அச்சிறுவர் இருவரையும் யானைக் காலின்கீழ் இட்டுக்கொல்ல முடிவுசெய்தார். சிறுவர் இருவரும் தம்மை அயலார் எதற்காகப் பிடித்தனர்; எங்கே கொண்டுபோயினர்; இனி என்ன செய்வர்; தமக்கு என்ன விளைய இருக்கிறது; என்பவற்றுள் ஒன் றையும் அறியாமல், புதிய காட்சிகளையும், முன் என்றும் காணாத புதுமைகளையும் கண்டு, மருண்டு விழித்தனர். கிள்ளி வளவர் அவ்விருவரும் சிறு குழந்தைகளே என் பதையும், அவர் தந்தைக்கும் தமக்கும் பகையுண்டு என் பதை அறியத்தக்க பருவமும் நிரம்பாதவர் என்பதையும் மறந்துவிட்டார். தம்மை அவமதித்ததாகத் தாமே நினைத்த மலையமானை நேரில் அழைத்து, கழுவில் ஏற்ற இடம் கிடைத்தாற் செய்திருப்பார். அது வாய்க்காமை யால் அச்சிறுவரை யானை முன் இடத் துணிந்தார்.

7. யானை மதம் கொண்டிருந்தது, பெரிய மரங் களையும் சாய்த்து அழிக்கத் தக்க கோபத்தோடு நடந்து

வந்தது. குழந்தைகள் யானை வருவது கண்டும் அழத் தெரியாமல் மருண்டு விழித்து நின்றார்கள். கிள்ளி வள




வர் இக்கொடுமை செய்து, பழியடைய அன்று நின்று கொண்டிருந்தார். உறையூர் அரண்மனைக்கு முன்புள்ள பெரிய மன்றத்தில் இக்கொடுமை நிகழ இருந்தது. அவ் வழியில் வந்த மக்கள் இக்கொடுமையைக் காண்பதற்கும் மனம் இல்லாது கண்ணைப் புதைத்து நடந்தார்கள். அரசரை எதிர்த்து அறவுரை கூற மக்கள் துணிவுபெறாத காலம் அது. ஏனோ ஒருவரும் இக்கொடுமையை மாற்ற முன் வரவில்லை.

8. அந்நாளிலே கோவூர் கிழார் என்ற புலவர் ஒருவர் இருந்தார். அவர் சிறந்த நாவன்மை படைத்த வர். தமது வாக்குத் திறத்தையெல்லாம் உலக நலத் துக்கே பயன்படுத்தி வந்தவர்; முடி மன்னர் மூவரும்

மதிக்கும் பெருமையுடையவர்; செல்வத்தைத் துரும்பாக மதித்தவர்; அரசர்க்கும் அறிவு புகட்டும் பெருந்தன்மை உள்ளவர்; எவரையும் அவரிடம் உள்ள சிறந்த குணத்துக்காகவே போற்றும் சீலம் உள்ளவர். அவர் எப்படியோ இச்செய்தியை அறிந்து, உறையூர்க்கு ஓடோடியும் வந்தார். தாம் வருமுன்னே கொடுமை நிகழ்ந்துவிடாதிருக்க வேண்டுமே என்று கடவுளை வேண்டிக்கொண்டே வந்தார்.

9. அவர் உறையூர்ப் பெருந்தெருவில் அரண்மனைக்கு முன்னே விரைந்து வந்தார்; யானைக்கு முன் சிறுவர் நடுங்கி நிற்கும் காட்சியைக் கண்டார்; மனம் கசிந்து அவர் முன் சென்றார்; கிள்ளி வளவரை அங்கு பார்த்தார்; "அரசே, இது என்ன கொடுமை! ஒரு புருவுக்குப் பருந்து விளைக்க இருந்த தீங்கைப் போக்கும் பொருட்டுத் தன் உடலையே கொடுத்தான் உங்கள் குலத்தில் முன்பு இருந்த மன்னன் ஒருவன் என்பதை நீ மறந்தாயா? இக்குழந்தைகள் யாவர் என்பதை நீ அறியாயா? புலவர்களுக்கு உவப்போடு கொடுக்கும் மலையமான் மக்களன்றோ? யானை தம்மைக் கொல்லுமே என்பதை அறியாமல், இவ்விருவரும் நாற்புறமும் மருண்டு நோக்குகின்றனர். இவரை இப்படிக் கொல்ல நீ எப்படித் துணிந்தாய்? நான் கூறியது உன் செவியில் விழுந்தால், உனக்கு எது தகுமோ, எது விருப்பமோ அதனைச் செய்க?" என்று கூறினர்.

10. கிள்ளி வளவர், புலவர் மொழி கேட்டு நாணம் கொண்டார்; 'ஏதோ நினைத்து ஏதோ செய்யத் துணிந்தேனே!" என்று வருந்தினர். யானைப்பாகர் அரசரின் முகக் குறிப்பு அறிந்து யானையை யானைப்

பந்திக்கு ஓட்டிப்போயினர். கோவூர் கிழார் குழந்தைகளை இரண்டு கைகளாலும் வாரியெடுத்து உச்சிமோந்து முத்தம் கொடுத்தார். ''அரசே, இனி நானே இக்குழந்தைகளைக் கோவலூரிற் சேர்த்துவிடுகிறேன். மலையமான் இது கருதி உறையூரைத் தாக்கப் படை திரட்டி வந்தாலும், அவனூர்க்கே போகும்படிச் செய்து விடுகிறேன்'' என்று கூறினர்.

11. அரசர், ''புலவர் பெருமானே, நரகத்துள் விழ இருந்த ஒரு பாவியை நல்வழியில் திருப்பிய உம் செயலை நான் எப்படிப் புகழ்வேன்! எவரும் என்னை எதிர்த்து உரையாட இயலாது விலகிய பின்பு, நீர் வந்து இவ்வுதவி புரிந்தது, என் முன்னோர் செய்த புண்ணியமே! நீர் இப்பொழுது இக்குழந்தைகளை மட்டும் காப்பாற்றவில்லை; என்னையும் காத்தருளினீர். இவ்வுதவியை நான் என்றும் மறவேன். நான் இன்று செய்யத் துணிந்த இக்கொடுஞ்செயலும், நீவிர் இதனைத் திருத்திய அருமையும் விளங்க ஒரு பாடல் பாடியருள வேண்டும்! எமது குலத்துக்கு நேர இருந்த கொடும் பழியைப் போக்கிய இச்செய்தியை இனி இந்தத் தமிழகத்திற் பிறக்கும் பல கோடி மக்களும் படித்தும், பாடியும், கேட்டும், உணர வேண்டும். இச்செய்தி கேட்ட பலரும் என்னைப் பழிப்பாரேயாயினும், உம்மைப் புகழ்வது உறுதியே. ஆதலால், நானே இப்பெரும் புகழ்ப்பரிசிலை உமக்கு வழங்குவதாக எண்ணிக் கொள்ள வேண்டுகின்றேன்,'' என்று கூறினர்.

12. புலவர் அழகுகொழிக்கும் ஒரு பாடலை உடனே பாடினர். அரசர் அதுகேட்டு மனமகிழ்ந்து, 'இப்பாடலுக்கு நான் தரும் பரிசில் இவ்விரு குழந்தைகளே!' என்று கூறி, அவர்களை அன்பாய் அணைத்துத் தழுவி,

உடம்பெல்லாம் பொற்பணிபூட்டிப் புலவரிடம் கொடுத்தார். கோவூர் கிழார், கிள்ளி வளவர் பெருமையைப் புகழ்ந்து, அவரை மனமார வாழ்த்தி, விடைபெற்றுத் திருக்கோவலூர்க்குத் திரும்பினர்.

### குறிப்புரை

திறமை — சாமர்த்தியம், தமிழகம் — தமிழ்நாடு, பெருமிதம் — வீரம், அரண் — மதில், பண்புகள் — குணங்கள், மருண்டு — மயங்கி, நாவன்மை—பேச்சுத் திறம், நலம்—நன்மை, உவப்போடு — மகிழ்ச்சியோடு, திரட்டி — கூட்டி, பொற்பணி — பொன் ஆபரணங்கள், விடை பெற்று — உத்திரவு பெற்று.

### வினக்கள்

1. சோழர் தலைநகர்கள் நான்கின் பெயர் யாவை ?
2. கிள்ளி வளவர் பெருமைகள் யாவை ?
3. மலையமானுக்கு உள்ள பெருமைகள் யாவை ?
4. கிள்ளி வளவர் மனத்திற் பகை மூண்டது எதனல் ?
5. கோவூர் கிழார் வளவருக்கு எப்படி அறிவு புகட்டினர் ?
6. புலவர் பெற்ற பரிசில் யாது ? எதற்கு அப்பரிசில் பெற்றார் ?

### இலக்கணம்

சோழன் முடிசூடி உறையூரிலிருந்து பல ஆண்டுகள் அரசு ஆண்டான்.

இந்த வாக்கியத்தில் **முடி** என்பது **பொருட் பெயர்**
**உறையூர்** என்பது **இடப் பெயர்**
**ஆண்டு** என்பது **காலப் பெயர்**

வீட்டுக்கு **வெள்ளை** அடித்தல் **கண்ணுக்கு** அழகு.

இந்த வாக்கியத்தில் **கண்** என்பது **சினைப் பெயர்**
**வெள்ளை** என்பது **குணப் பெயர்**

அடித்தல் என்பது **தொழிற் பெயர்.** இங்கு எடுத்துக் காட்டிய **பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில்** என்ற ஆறு வகையில் பெயர்ச் சொற்கள் வரும்.

### பயிற்சி

'மலையமான் மக்கள்' என்ற பாடத்தில் மேற்கண்ட அறுவகைப் பெயருள் வந்தவற்றை மட்டும் எடுத்து எழுதுக.

# 6. புத்தபிரான்

1. உலகம் புகழ்ந்த உத்தம ஞானமூர்த்திகளுள் ஒருவராகிய புத்தபிரான் **மகதநாட்டிற் கபிலவாஸ்து** நகரத்திலே அவதரித்தார். இப்புண்ணியர் நாட்டிய புத்த



மதம் இந்நாளில் சீனு, பர்மா, இலங்கை முதலிய நாடுகளில் இருந்து வருகிறது. நம் நாட்டில் இம்மதத்துக்குரிய பல பழைமையான ஆலயங்களும், பிற சின்னங்களும் இருக்கின்றன. இப்புண்ணியர் வரலாறு நாம் அறியத்தக்கதாகும்.

2. **சாக்கியர், கோதமர்** என்ற இரண்டு பெயர் பூண்ட அரச மரபில் இரண்டாயிரத்தைஞ்ஞூறு ஆண்டு

களின் முன்பு **சுத்தோதனன்** என்ற மன்னன் ஒருவன் இருந்தான். அவன் மகத நாட்டை ஆண்டு வந்தான். அவன் **மாயாதேவி**, **கௌதமி** என்ற இரு மகளிரை மணந்திருந்தான், அவ்விருவருள் மூத்தவளாகிய மாயா தேவி நல்லழகும், உயர்குணமும் பொருந்தியிருந்ததால், அரசன் அவளிடமே மிக்க அன்பு பூண்டிருந்தான். கௌதமி இதுகண்டு மிக்க பொருமை கொண்டிருந்தாள். இருவருக்கும் நெடுநாள் மகப்பேறு இல்லாதிருந்தது.

3. ஒரு நாள் மாயாதேவியும் சுத்தோதனனும் தமக்குத் திருவருள் வாய்த்ததாகக் கனுக் கண்டனர். ஆறு கோணம் உள்ள விண்மீன் ஒன்று மாயாதேவி வயிற்றுட் புகுந்ததாக அவர்களுக்குக் கனவிலே தோன்றியது. அரசன் அக்கனவால் மனமகிழ்ந்தான். தேவியும் கருவுற்ருள்.

4. மதலே தோன்றும் காலம் நெருங்கியது. மாயா தேவி அக்காலத்தில் இனிய காட்சிகள் பல நிறைந்த உலும்பினிச் சோலேயை அடைய விரும்பினுள். அரசன் தக்க பரிவாரங்களோடு அங்கு அவளே அழைத்துச் சென்ருன். அங்குள்ள ஒரு மாளிகையில் மாயாதேவி இளேப்பாறியிருந்தாள். ஏவற்பெண்களும், தோழியரும், பிறரும் நல்ல மலர்களேப் பறித்து வந்து அரசியைக் கண்டனர். அரசி, மலர்களேக்கண்டு மனம் மலர்ந்தாள். பிறகு அரசனும் அரசியும் மெல்ல உலவப் புறப்பட்டார் கள்.

5. அவ்வனத்துக்கு நடுநாயகமாய் அசோக மரம் ஒன்று பரந்து வளர்ந்து மலர்கள் நிறைந்திருந்தது. அதன் நிழலில், அழகே உருவமான மயிலொன்று தோகை

விரித்து ஆடியது. பாடத் தெரிந்த பறவை ஒன்று, அந்த ஆட்டத்துக்குத் தக்கபடி பாடியது. இக்காட்சியைக் கண்டு அரசி மனம் பூரித்தாள். அரசன் அப்பொழுது அவளை நோக்கி, 'இம்மரத்தின் மலர் ஒன்றைப் பறித்துத் தா' என்று கேட்டான். பூப்பறிக்கும் பொருட்டு ஒரு கிளையைத் தாழ்த்த, அரசி தன் கையை உயர்த்தினள். அப்பொழுது அவளுக்குத் தெய்வக் குழந்தை பிறந்து, நிலத்தே மலர்ந்த நீலத் தாமரை மலரை அடைந்தது; அந்நாள் வைகாசி மாதத்துப் பூரணையாகும். பல தெய்வச் செயல்கள் அப்பொழுது நிகழ்ந்தன.

6. மாயாதேவி சிறிதும் உடம்பு தளராமல் அம் மரத்தின் கீழ் இருந்தாள். கௌதமி இச்செய்தி அறிந்து ஓடிவந்து, அக்குழந்தையை எடுத்துச் சீராட்டிப் பாராட்டினள். அப்பொழுது அங்கு வந்த நிமித்திகன் ஒருவன், 'உலகம் புகழும் குருமூர்த்தியாய் விளங்கும் குறிகள் இக்குழந்தையின்பாற் காண்கின்றன. இளமையிலேயே துறவுபூண்டு இவன் தரும உபதேசம்செய்து உலகத்தை ஆள்வான்' என்று கூறினன். தாய் ஏழாம் நாள் இவ் வுலகைவிட்டு நீங்கினள். கௌதமி குழந்தையை எடுத்து வளர்க்கும் பேற்றினைப் பெற்றாள்.

7. இக்குழந்தைக்குச் **சித்தார்த்தர்** என்ற பெயர் வழங்கப்பெற்றது. உறவினர் எல்லோரும் இவரைக் குடிப் பெயரால் **கௌதமர்** என்றே வழங்கினர். கௌதமர் இளம் பருவத்திலே கல்வி கற்கத் தொடங்கி, **மித்திரர்** என்ற பெரியாரிடம் எல்லாக்கலைகளையும் கற்றுக்கொண்டார். **அசிதர்** என்ற முனிவர் ஒரு நாள் இவ்விளைஞரைப் பார்த்து, "மானிட மரத்தில் பல நூற்றாண்டுகளுக்கு ஒருமுறை மலரும் அபூர்வ மலர் இக்குழந்தை; அரசே,

உமது குலம் பெற்ற பெரும் பேற்றை என்னவென்று சொல்வேன்! இவன் இளமையிலேயே துறவு பூண்டு உலகுக்கு ஒரு பெருங்குரவனுய் விளங்குவான்'' என்று அரசனுக்குக் கூறினர். அரசன் மகன் பெருமையைக் கேட்டு மகிழ்ந்தான்; இவர் இளமையிலேயே துறவு பூணுவர் என்பதை அறிந்து மனம் வருந்தி, முனிவரை நோக்கி, ''இவன் எப்பொழுது துறவியாவான்?'' என்று கேட்டான். முனிவர் அவன் மனக் கருத்தை உணர்ந்து கொண்டு, ''அச்செய்தி இப்பொழுது வெளியிடத்தக்க தன்று'' என்று கூறிவிட்டுப் போயினர்.

8. அரசன் தன் மைந்தர் துறவி யாவார் என்பதை முன்பே நிமித்திகனுல் அறிந்திருந்ததால், இவர் மனத்தை உலக வழியிலேயே திருப்பி வசப்படுத்தும் பொருட்டுப் பலவாறு முயன்று வந்தான்; உலகவாழ்வில் எத்தனையோ இன்பங்கள் இருப்பதை இவர் உணர்ந்து, அவ்வழியிலே ஈடுபடும்படி செய்யக் கலைஞரை நியமித்தான். இவர் மனம் இயல்பாகவே உயர்ந்த வழிகளிற் போய்க் கொண்டிருந்தது.

9. கௌதமர், ஒரு நாள் தம் தோழனுகிய தேவ தத்தன் அம்பு எய்தி வீழ்த்திய அன்னப்பறவை சுருண்டு விழும் காட்சியைப் பார்த்தார். இரக்கம் பெருக அதனை உடனே எடுத்துத் தடவிக் கொடுத்து, அதன் உடலிற் பட்ட காயத்தைத் தக்க மருந்தால் மாற்றிப் பறக்க விட்டார். அதுகண்ட தோழன் இவரை விட்டுப் பிரிந் தான். கௌதமர் பதினைந்து வயதில் இளவரசர் ஆயினர்; சில ஆண்டுகள் இளவரசுப் பதவியில் இருந்தார்.

10. பத்தொன்பதாம் வயதில் இவர் தம் மாமன் மகள் யசோதரை என்பவளை மணந்துகொண்டார். ஒரு தோட்டத்தில், வேனிற்காலம், கார்காலம், பனிக்காலம் என்ற காலம் மூன்றிலும் முறையே வாழ்ந்து, இன்புறத் தக்க மாளிகைகள் அரசனால் அமைக்கப்பட்டன. அம் மாளிகைகளுக்கு நல்ல கட்டும் காவலும் அமைந்தன. பெரியதொரு கோட்டையும், அதைச் சுற்றி அரசர் கட்டினார். அந்த மாளிகைகளில் கௌதமர் வாழ்ந்த போது, உலகில் வாழும் மக்களுக்கு நோய், மூப்பு, மரணம் என்னுந் துன்பங்கள் உண்டு என்பதை உணரா மலே காலம் கழித்தார்.

11. ஒரு நாள் உலும்பினி வனத்தில் இருந்த தம் தந்தையைக் காண கௌதமர் புறப்பட்டார். அப் பொழுது தம்மெதிரில் வந்த நோயாளி ஒருவனைக்கண்டு, அப்படியே மனிதர் எல்லோரும் நோயால் வருந்துவது உண்டு என்னும் உண்மையை உணர்ந்து கொண்டார்; இன்னொரு நாள் வெளியே உலவப்போனபோது உடம்பு இளைத்துத் தளர்ந்து, வருந்தித் தள்ளாடி நடந்த ஒரு கிழவனைப் பார்த்து, மூப்பு என்னும் நோய் எவ்வுயிரை யும் விடுவதில்லை என்பதை உணர்ந்தார்; வேறொரு நாள் வெளியே சென்றபோது அழுகிய பிணம் ஒன்றைப் பார்த்து, அப்படியே மரணம் மன்னரையும் விடாது என்பதையும் உணர்ந்து கொண்டார். இவருடன் வந்த குதிரைக்காரனாகிய சந்தகன் இவர்க்கு இவற்றின் மூலம் உலக நிலையைச் சிறிது விளக்கினான். அது கேட்ட தும் உலகவாழ்வில் அருவருப்பும் வெறுப்பும் உண்டாகி, "இங்ஙனம் பிணி, மூப்பு, மரணங்களுக்கு இடமாகிய பிறப்புக்கு இடம் கொடாத நல்வழியை நாம் அறிந்து

உலகத்துக்கும் உணர்த்தல் வேண்டும்'' என்ற எண்ணம் கொண்டார்.

12. பிறகு ஒரு நாள் சித்தார்த்தர் ஆற்றில் நீராடி வருகையில் தமக்கு அருமருந்தன்ன ஆண் குழந்தை பிறந்த செய்தியைக் கேட்டு, ''ஐயோ! இந்த உலக வாழ்வை விட்டு விலக நினைக்கும் எனக்கு இன்னொரு தளை உண்டாயிற்றே!'' என்று கூறி வருந்தினர். அரண்மனைக்கு அருகில் வந்ததும் ஒரு பெண், ''இம்மதலையைப் பெற்ற தாயும் புண்ணியவதி; தந்தையும் பாக்கியவான். நாளைக்கு இவன் மனைவியாக வரும் பெண்ணும் பாக்கியவதியே'' என்ற கருத்து அமைய ஒரு பாட்டைப் பாடினாள். அதுகேட்ட கௌதமர் தமக்கு ஏற்ப அதன் பொருளைப் பயன்படுத்திக்கொண்டு, விரைந்து துறவு பூணத் துணிந்தார். அப்பால் அரண்மனையில் தமக்குப் புத்திரன் பிறந்ததன் பொருட்டு நிகழ்ந்த விழா ஒன்றிலும் கலந்து கொள்ளாமல் தனித்திருந்து, இரவில் முற்பகுதியில் அயர்ந்து தூங்கி, நள்ளிரவில் விழித்துக்கொண்டார். வீட்டுள் இருக்கும் ஒருவன் தன் வீடு தீப்பற்றிக் கொண்டதை அறிந்தால் எவ்வளவு பரபரப்போடு எழுவானோ, அவ்வளவு பரபரப்போடு படுக்கைவிட்டு எழுந்து, அரண்மனைக்கு வெளியே வந்து, சந்தகனைக் குதிரை கொண்டு வரச் சொன்னார், அவன் குதிரை கொண்டு வருமுன் தம் மனைவியையும் மகனையும் பார்த்து உலகப் பற்றின் வலிமையை ஒடுக்கி, குதிரை வந்ததும் அதில் ஏறிப் புறப்பட்டார்.

13. அப்பொழுது இவருக்கு வயது இருபத்தொன்பது. அன்புமிக்க தந்தையையும், தம்மைச் செல்வம் என்று கருதி வளர்த்த சிறிய தாயையும், தமக்கு வாழ்க்

கைத் துணையாக வந்த குணச் செல்வியான மனைவியையும், அன்றுதான் பிறந்த அருமை மகனையும் பிரிந்து, உலக நினைவு இல்லாமல் வனத்துக்குப் புறப்பட்டார். இவரைச் சுமந்த குதிரை, மூன்றுயோசனைத் தூரம் நடந்து, அதற்கப்பால் நடக்கமாட்டாமல் நின்றது. கௌதமர் அங்கு ஒரு தவப் பள்ளியைக் கண்டார்; தம்முடன்வந்த சந்தகனை நோக்கி, "அன்பனே, நம் உறவு இன்றோடு தீர்ந்தது. நெடுநாளாக நான் அடைய நினைத்திருந்த இடத்தை இன்று அடைந்தேன். இம்முடிமணியை என் தந்தையாரிடம் கொடு. இக் கண்டசரத்தை என் நினைவுக் குறியாக நீயே எடுத்துக் கொள். என்னிடம் கொண்ட அளவுகடந்த அன்பை இனி என் தந்தையார் மறக்கவேண்டும் என்றும் கூறு. மற்ற உறவினர்களும் இனி என்னை மறக்க வேண்டும். இனி நீ போகலாம்" என்று கூறி விடை கொடுத்தார். சந்தகன் மிக்க துயரத்தோடு குதிரையை நடத்தி நகர்க்கு மீண்டான்.

14. அங்கு ஒரு வேடன் காவியுடை அணிந்து வந்தான். கௌதமர் தம் பட்டாடையை அவனுக்குக் கொடுத்து, அத்துவராடையைப் பெற்றுக்கொண்டார். **சந்தகன்** புறப்பட இருந்தபோது கைவாளால் தம் தலை மயிரை அறுத்து எறிந்தார். இக்காட்சியைக்கண்டு அவன் கண்ணீர் வடித்துச் சென்றான். கௌதமர் பிறகு நிற்காமல், அரும்பொருளை அறிவிக்கவல்ல பெரியாரை நாடிச் சென்றார். தவம் புரியும் முனிவர் பலரைக் கண்டு, 'துக்க நீக்கத்துக்கு உரிய வழி யாது?' என்று அவர்களைக் கேட்டு, அவர்கள் சொல்லிய விடை தமது மனத்துக்குப் பொருத்தமாகத் தோன்றாமையால்,

அப்பாற்சென்று, வெண்மலையை அடைந்து, அங்கே தவம் புரிந்திருந்த **அராளராம முனிவர்** உபதேசத்தால் யோகநெறியில் இறங்கினர்.

15. நகரத்தில் விழித்தெழுந்த அரசனும், கௌதமியும், யசோதரையும் தம் அன்புக்குரிய கௌதமர் பிரிந்தது கண்டு மிகவும் வருந்தி, சந்தகன் வந்த பிறகே செய்தி அறிந்தனர். அரச புரோகிதர் நாடு வருந்தும் இத் துயரத்தை மாற்ற நினைத்து, வெண்மலை வரையிற்போய் வெற்றியில்லாது மீண்டு வந்தார். நகரம் கலங்கியது. மன்னன் இங்ஙனம் நிகழும் என்பதை முன்னமே அறிந்தும், துயர்க்கடலில் ஆழ்ந்தான்.

16. தவநெறி பூண்ட கௌதமர் இராசகிருகம் என்னும் நகரத்தில் சென்றபோது, அந்நகரத்து மன்னன் பிம்பிசாரன் வேள்விக்காகப் பல பசுக்களைச் சிலர் ஓட்டிச் செல்வதைக் கண்டார்; கொல்லாமை என்ற சிறந்த அறத்தை அவர்களுக்கு உபதேசித்து, அப்பசுக்களின் உயிரைக் காத்தருளினர். அன்று முதல் பிம்பிசாரன் கொல்லாமை விரதம் பூண்டு வாழ்ந்தான். அந்நாளிலிருந்து **கௌதம பிட்சு** என்னும் பெயரோடு இவர் நாடெங்கும் சென்றூர். பல பெரியாரை அடுத்து உபதேசம் கேட்டும், தாம் வேண்டிய பயன் விளையாமையால், மேலும் மேலும் பெரியார் துணை தேடி நடந்து கொண்டிருந்தார். இங்ஙனம் ஆறு ஆண்டுகள் கழிந்தன.

17. பிறகு **நைரஞ்சரை**யாற்றின் கரையில் ஒரு பெரிய அரசமரத்தைக் கண்டு, அதன்கீழே இருபத்தெட்டு நாட்கள் கடுந்தவம் புரிந்தார். இருபத்தொன்பதாம் நாள் காலையில் அங்கு வந்த ஆயர் மகள் ஒருத்தி தன் கையி

லிருந்த பாற்சோற்றை இவர் களை தெளியும் வண்ணம் இவருக்கு ஊட்டினுள். அதனை உண்டதும் இவர் ஒளி பெற்று விளங்கினுர். அன்று இரவே இவர்க்குத் தத்துவ ஞானம் பிறந்தது. இம்மகான் ஞான உதயம் பெற இடமாய் இருந்த அரசமரம் புத்த கயை என்ற புண்ணிய தலத்தில் உள்ள இவர் கோயிலின் பின்புறம் இன்றும் இருக்கிறது. அதனைப் போதி விருட்சம் என்று வழங்குவர். 'அறிவை விளக்கும் மரம்' என்பது அச்சொல்லின் பொருளாம். அத்தவ நிலத்தில் இவர் துக்கம், துக்க உற்பத்தி, துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என்னும் உண்மை நான்கையும் தெளிவாக உணர்ந்து கொண்டார். அன்று முதல் புத்தர் என்ற பெயர் இவர்க்குப் பொருந்துவதாயிற்று.

18. புத்தபிரான் தம் கொள்கையைப் பிறர்க்கும் உரைக்கப் புறப்பட்டார். இவர் முகமலர்ச்சி, இனிய இசை போன்ற குரல், அழகும் அழுத்தமும் பொருந்திய சொல்வன்மை, பகைவரையும் வசப்படுத்தும் நற்பண்பு என்னும் நயங்கள் பொருந்தித் தமது கொள்கையை எவர்க்கும் விளக்குவாராயினர்; தமது கொள்கையைக் கேட்க எல்லோரும் வரலாம் என்று அழைத்தார். இவரிடம் ஆண் மக்கள், பெண் மக்கள், உயர் குலத்தவர், தாழ் குலத்தவர், செல்வர், வறியர், அரசர், துறவியர் முதலிய எல்லோரும் நல்லுரை கேட்கக்கூடினர். இப்படிக் கூடியகூட்டமே பௌத்த சங்கம் ஆயிற்று. ஐந்து மாதத்துக்குள் அறுபது பேர்களைத் துறவு பூணச் செய்தார். அத்துறவியர் இவர் வழியை நன்கு விளக்கி நாடெங்கும் பேசலாயினர். மழைக் காலத்தில் குருவும் சீடரும் ஒன்ருய் இருந்து, பிறகு பிரிந்து, பல திசை

களிலும் போகும் வழக்கம் உண்டாயிற்று. காசிப முனிவரும், அவர் சீடர் ஐஞ்ஞூற்றுவரும் சில நாட்களில் புத்த சங்கத்திற் சேர்ந்தனர். இங்ஙனம் பலர் இவரை அடைந்து நலம் பெற்றனர்.

19. சுத்தோதனனுக்கு இவ்வரலாறு எட்டியது. தன் புதல்வரான கௌதமர் ஊர்தோறும் பிச்சை யெடுத்து வருவதை அறிந்து அவன் மிகவும் வருந்தினன். புத்தர் கபிலவாஸ்து நகரத்துக்கு வந்து அரசனையும், பிறரையும் கண்டு, "புத்த பரம்பரைக்கு உரிய நான் இப்பிச்சை வாழ்வுக்கே உரியேன். அரசச் செல்வத்தில் எனக்கு எவ்வகை உரிமையும் இல்லை" என்று கூறினர். அரசன் சில நாட்கள் துறவிகளுக்கு விருந்திட்டான். அரண்மனையில் உள்ள பழைய உறவினர் எல்லோர்க்கும் அன்போடு இவர் தரும உபதேசம் செய்தார். யசோதரை யும் இவரை வணங்கி நல்லறிவு பெற்றாள். பிறகு அவள் தன் புதல்வனை நோக்கி, "மகனே, துறவிகள் தலைவராய் விளங்கும் இப்பெரியாரே உன் தந்தையார். நீ இவரை அடைந்து, உனக்கு உரிய பேறுகளைப் பெறுவாயாக!" என்று கூறி, இவரிடம் அனுப்பி வைத்தாள். அவன் வந்து அடிபணிந்து வேண்ட, "உலகிலே தந்தையர் மைந்தர்க்குத் தரும் செல்வம் என்றும் அழியாத செல்வ மாம்" என்று கூறி அவனையும் புத்தசங்கத்திற் சேர்த்தார். சுத்தோதனன் முதுமையால் தளர்ந்து, மரணம் அடைந் தது தெரிந்து அவனுக்கு உரிய கடன்களை முறையே நிறைவேற்றினர்; பிறகு வேறு நாடுகளுக்குச் சென்றார்.

20. பின்னும் பல நாடுகளிலும் சென்று, எண்ணி றந்த மக்களைத் தமது வழியிற் சேர்த்து, அறநெறியை விளக்கி வந்தார். பாவா நகரத்தில் **சந்தன்** என்னும்

தட்டான் ஒருவன் கொடுத்த உணவை ஏற்றுக்கொண்டதும், இவர் உடல்நிலை மிகவும் தளர்ந்தது. அன்று இவர், ஒன்றும் நிலையில்லை என்ற உபதேசத்தை எல்லோர்க்கும் செய்தார். எண்பது வயதாய் இருந்த புத்தபிரான், 'இனி இவ்வுலகில் இவ்வுடம்போடு இருக்க இயலாது' என்பதை உணர்ந்தார். பிறகு பொன்னாற்றின் கரையில் இளைப்பாறி, இரண்டு சாலமரங்களின் நடுவே நீர் தெளித்துப் பாய் விரித்த இடத்தில் தலையை வடக்கே வைத்து, தமது வலக்கையையே தலையணையாகக் கொண்டு, மேற்குத் திசையை நோக்கிப் படுத்திருந்தார்; அப்படியே சிறிது பொழுது உறங்கினார்; பிறகு விழித்து எழுந்து, சீடரை நோக்கி, "நீங்கள் எல்லோரும் தரும சக்கரத்தை உருட்டிக்கொண்டு, அன்பினால் உலகத்தையே வசப்படுத்த வேண்டும். பிறப்புக்குக் காரணமாய் இருப்பதே இறப்புக்கும் காரணமாகும்" என்று கூறி வாயை மூடிக்கொண்டார். சிறிது பொழுதில் இவர் உடலை நீங்கி உயர் பதம் பெற்றார். அன்று வைகாசி மாதத்துப் பூரணையும், விசாகநாளும் கூடிய நன்னாளாம். பௌத்தருக்கு இது ஒரு சிறந்த நாளாய் இன்றும் விளங்குகின்றது.

## குறிப்புரை

விண்மீன் — நட்சத்திரம். கருவுற்றாள் — கருப்பந் தாங்கினாள், பூரணை — பௌர்ணமி, பேறு — பாக்கியம், குரவன் — ஆசாரியன், மூப்பு — கிழத் தன்மை, தளை — கட்டுப்பாடு, நள்ளிரவு — பாதி இரவு, கண்டசரம் — கழுத்திலிடும் ஆரம், உற்பத்தி — தோற்றம், நிவாரணம் — நீங்குதல், மார்க்கம் — வழி, விசாகம் — ஒரு நட்சத்திரம்.

## வினாக்கள்

1. புத்தர் எந்நாட்டில், எவ்வூரிற் பிறந்தார் ?
2. புத்த மதம் இப்பொழுது எங்கெங்கு வளர்ந்து வருகிறது ?

3. மூப்பு, பிணி, மரணம் இவைகளை கௌதமர் எதனால் உணர்ந்தார்?
4. 'இன்னொரு தளை உண்டாயிற்றே!' என்று யார், எப்பொழுது கூறினர் ?
5. கௌதமர் துறவு பூண்டது எப்படி ?
6. கௌதமர் போதி மரத்தடியிற்கண்ட உண்மை யாது ?

## இலக்கணம்

**ஆகுபெயர்கள்:** ஒரு பொருளின் பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பொருளுக்கு ஆகிவருவது **ஆகு பெயர்** எனப்படும். அவ்வாறு வரும்பொழுது பழைய முறையையொட்டி வரும்.

1. தாமரை சூடினள் — கொடியின் பெயர் மலருக்கு ஆயிற்று; இது **முதலாகு** பெயர்.

2. உலகம் மகிழ்ந்தது —இடத்தின் பெயர் மக்களுக்கு ஆயிற்று; இது **இடவாகு** பெயர்.

3. கார் அறுத்தது — கார் என்னும் காலத்தின் பெயர், அக் காலத்து விளையும் நெல்லுக்காயிற்று. இது **காலவாகு** பெயர்.

4. வெற்றிலை நட்டான் — இலையின் பெயர் கொடிக்கு ஆயிற்று; இது **சினையாகு** பெயர்.

5. வெள்ளை அடித்தான் — நிறத்தின் பெயர் சுண்ணாம்பிற்கு ஆயிற்று; இது **குணவாகு** பெயர்.

6. வற்றல் உண்டான் — தொழிலின் பெயர் அத்தொழிலையுடைய உணவிற்கு ஆயிற்று; இது **தொழிலாகு** பெயர்.

### பயிற்சி

1. மேற்கண்ட அறுவகைத் தொழிற் பெயருக்கும் வேறு உதாரணம் தருக. 2. புதிதாக வேறு நான்கு ஆகுபெயர்களை வாக்கியங்களில் அமை.

# 7. புலவர் புண்ணியம்

( நாடகம் )

**இடம்:** பேகன் அரண்மனை
**காலம்:** காலை
**பாத்திரங்கள்:** பேகன், கபிலர், பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார், கண்ணகி.

[ பேகன் அரண்மனை முன் மண்டபத்தில் அமர்ந்திருக்கிறான். அவனைக் காண புலவர் ஒவ்வொருவராய் வருகின்றனர். கபிலர் முதலில் வருகிறார். பேகன் அவரை அன்போடு வரவேற்கிறான்.]

**பேகன்:** புலவர் பெருமானே, வருக! பரணர் தோழரே, வருக! புலனழுக்கற்ற அந்தணாளரே, வருக! பொய்யா நாவிற் புலவர் மணியே வருக! உமது வரவு நல்வரவாகுக!

**கபிலர்:** வேளிர் தலைவ, கொடைக்குணம் பூண்ட குரிசிலே, உனது நாட்டுக்கும் மலைக்கும் வருதற்குப் புலவர் என்றேனும் நாணியதுண்டா? கூசியதுண்டா? மதுரைச் சங்கம் புலவரை அளந்து மதிக்கிறது. நீ அளவின்றிக் கொடுத்துப் புலவரை மதிக்கின்றாய். இன்று நான் தனியே வரவில்லை. என் தோழர் சிலரும் வந்திருக்கின்றனர்.

**பேகன்:** எல்லோரும் வருவீர்கள்; நீங்கள் வரும் நல் வினையுடைய என் பாக்கியமே பாக்கியம்.

**கபிலர்:** எல்லோரும் நடந்தே வந்தோம்; வழியில் ஒரு காட்சி கண்டோம்; அங்கு சற்றே நின்றோம். அத் துயரக் காட்சி என் மனத்தை உருக்கியது; அங்கே

நிற்க மனம் வரவில்லை. விரைவில் உன்னிடம் வந்தேன்; அவர்கள் அங்கு நின்றூர்கள்; விரைவில் அவர்களும் இங்கு வரலாம்.

**பேகன்:** புலவர் பெருமக்கள் மனத்தை உருக்கிய துயரக் காட்சி என்னவோ? என் நாட்டில் துயரம் இருப்பதற்கு இடம் இல்லையே!

**கபிலர்:** உயிர்கள் துயரப்படுவது உன் நாட்டில் நிகழாத நிகழ்ச்சியே; இது ஒரு புதுமையே! கண்டதை உரைக்கத்தானே வேண்டும்? நாங்கள் நடந்துவந்த வழியில் ஒரு பெண்மணி நிற்கிறுள். இம்மலையின் அடிவாரத்தில் உள்ள சிற்றூரில் மலைக்கு வரும் வழி பார்த்து அக்கற்பரசி நிற்கும் காட்சியைக் கண்டேன்: உன்னையும் உன் மலையையும் நான் அங்கு நின்றே வாழ்த்தினேன். என்னை அவ்வழியிற் கண்டதும், அப்பெண் முன்வந்து வெகு பாடுபட்டுத் தன் கண்ணீரை அடக்கிக் கொள்ள முயன்றுள்; அக்கண்ணீர் அடங்கவில்லை. அவள் வாய் திறந்து அழுது விட்டாள்; அவள் யார்? இரக்கம் என்பது ஒன்று உண்டாயின், அது அவளிடம் காட்டத் தகும். அவள் அழுத அழுகை, குழல் ஒலிபோல இன்னும் என் செவியில் ஒலிக்கிறது.

[பரணர் நடந்துவந்து பேகனைக் காண்கிறுர்.]

**பேகன்:** வரலாறு அறிந்த வாய்மொழிப் புலவரே, வருக! கபிலர் தோழரே, வருக! மும்முடி மன்னரும் முறையே போற்றும் முத்தமிழ்ப் புலவரே, வருக! இந்நாள் நன்னுளே! புலவர் பலர் ஒன்றுசேர்ந்து என் போன்ற சிறுவன் ஒருவனைக் காண வருவது இக்குடி செய்த புண்ணியம் என்றே கூறுவேன்!

பரணர்: பேக, இன்று யான் உன்னைப் புகழ வந்திலேன்; இகழவே வந்தேன்; கபிலர் என்ன சொல்லியுள்ளாரோ, நான் அறியேன்; இக்கொடுமையை என் மனம் பொறாது! இதனை நீ செய்தாய் என்று கேட்க என் செவி பொறாது! இக்காட்சி காணும் தீவினை செய்த கண்களை என்ன செய்வது என்பதே எனக்குத் தெரியவில்லை!

பேகன்: புலவர் பெருந்தகையீர், இடித்துரைத்து அறிவு புகட்டும் உரிமை பூண்ட நீவிர், இகழ்வதும் எனக்குப் பெருமையே! என்னிடம் உள்ளன்பு இல்லையென்றால், இகழ மனம் கொள்வீரா? இகழத் தக்க செயல் நான் செய்திருப்பேனாயின், என் தந்தையாருக்கு நிகராகிய நீவிர் என்னை இகழ்வது பொருத்தந்தானே? நான் என்ன குற்றம் செய்தேன்? தெளிவாகக் கூறவேண்டும். கபிலரும் சொன்னார்; என் குற்றத்தை அவர் மொழிகளால் நான் அறிய இயலவில்லை. விளக்கமாகக் கூறும் உரிமை புலவர்க்கு உண்டு என்பதை நான் கூற வேண்டுமா?

பரணர்: யாழ் இசைத்துக்கொண்டு உன் மலைக்காட்டுக்கு வந்தேன்; உன் கானத்தின் இயற்கையழகைப் புகழ்ந்து பாடினேன்: இனிய யாழொலி கேட்க விரும்பியவள் போல வந்தாள் ஒரு பெண்; அவள் யார் என்பதை நான் அறியவில்லை; யாழிசையில் மனம் சென்றும், கண்ணீர் சிந்தினாள்; 'அம்மா, நீ எம் தோழன் பேகனுக்கு உறவோ?' என்று கேட்டேன். காந்தள் முகைபோன்ற விரல்களாற் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, அப்பெண் தெய்வம் என்னை நோக்கி, இப்பொழுது நான் அவருக்கு உறவு

உடையேன் அல்லேன். இந்நாளில் அவ்வள்ளல் இன்னொரு பெண்ணின்மேல் மனம் கொண்டு என்னை மறந்து ஒதுக்கியிருப்பதை நான் எப்படி உரைப்பேன்!' என்றாள். பேக, உனக்கு இது அழகாகுமா ? அத்தகைய பெண்ணணங்கின் குண நலத்தைப் பல்லாண்டாகப் பயின்று அறிந்திருக்கும் நீ, அவளுக்கு அருள் புரியாதிருப்பது கொடிதே!

**பேகன்:** என்மேல் இத்தனை கோபம் கொள்ளும்படி நான் என்ன செய்தேன்? அவள் என் மனைவி **கண்ணகி**; அவள் குணங்களில் நான் குறை கண்டிலேன்; இன்று என் மனம் மற்றொரு பெண்ணின் மேற் சென்றுளது என்பதும் உண்மையே; நேற்று விரும்பிய உணவை இன்று விரும்பாதிருப்பது குற்றமாகுமா ?

**பரணர்:** மயிலுக்கு முகிலைக்கண்டு மகிழ்ச்சி உண்டாகுமே அன்றி வருத்தம் வருவதில்லை; மேகமண்டலத்தைக் கண்டு தோகை விரித்து ஆடிய மயிலை நீ காட்டிற் கண்டாய்; அது மழையால் நடுங்கியது என்று எண்ணிக்கொண்டாய்; அதற்கு உடுக்கத் தெரியாது; போர்த்துக் கொள்ளவும் தெரியாது: அப்படியிருந்தும், நீ அதற்கு உன் போர்வையைப் போர்த்தி வந்தாய். அத்தகைய குணம் உன்னிடம் உண்டென்பதை அறிந்தே வந்தேன்; இன்று என் பசி களைய வேண்டும் என உன்னை யான் வேண்டவில்லை; 'என் குடும்பத்தைக் காக்கப் பெரும் பொருள் கொடு' என்று கேட்கவும் வரவில்லை. உன் குலத்தின் பெருமைக்கும், உன் இயல்புக்கும்

பொருத்தமான அறத்தை உன் தலைவி கண்ணகி பொருட்டு நீ நிகழ்த்தவேண்டும். இதுவே இன்று நான் வேண்டும் பரிசிலாம். வேறு எதனைக் கொடுத்தாலும் கொள்ளேன்! கேளாத மயிலுக்கு — உன் சிறப்பை அறியாத மயிலுக்கு — அன்று அருளினாய். இன்று உன் சிறப்பு அறிந்த மயிலுக்கு — உன் நலத்தில் நாட்டம் உள்ள மயிலுக்கு — நீ செய்யும் சிறிய உதவியையும் பெரிதாக நினைத்துப் போற்றும் குணம் பொருந்திய மயிலுக்கு—அருள் புரிய இப்பொழுதே புறப்படுக!

[அரிசில் கிழார் வருகிறார். பேகன் அவரையும் வரவேற்கிறான்.]

பேகன்: புலவர் தலைவரே, வருக! பெருநாடு ஆளும் பேறு பெற்ற உம்மை இச்சிற்றூரில் இன்று நான் காண்பதற்குக் காரணம் என் தவம் அன்று; என் முன்னோர் தவமே. அரசையே மதிக்காத உமக்கு நான் எப்பொருள் கொடுப்பேன்!

அரிசில் கிழார்: பேக, உன்பொருள் உனக்கே உதவுக. எனக்கு உன் பரிசில் ஒன்றும் வேண்டா. எனக்குப் பரிசில் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால், நான் விரும்புவது இப்பரிசிலே; நீ இரங்காமையால் மனம் வருந்தித் தளர்ந்து பெருந்துயர்க் கடலில் அழுந்தித் தவிக்கும் உன் மனைவி, தன் கூந்தலில் மணப்புகை ஏற்றுப் பூச்சூடி இன்ப நினைவோடு உன்னை அடையச் செய்வாய். இன்பத்துக்கு உரிமையுடைய அக்கற்பின் கொழுந்து—பொற்பின் செல்வி—துன்பத்தில் ஆழ நீ இங்கிருந்து பேசுவதே எனக்கு உவப்பாய் இல்லை. உடனே புறப்பட்டுப் போய் அவளை அழைத்துக்கொள்ள வேண்டும்

என்றே கூறுவேன். என் தோழர் பெருங்குன்றூர் கிழாரும் இதோ வருகிறார்.

[பெருங்குன்றூர் கிழார் வருகிறார்]

**பேகன்:** வருக பெரியீர்! இன்றளவும் என்னையும் என் நாட்டையும் புகழ நினையாத உமக்கு என்னை அணுக வாய்த்த சமயம் இதுதானோ?

**பெருங்குன்றூர் கிழார்:** பேக, எனக்கு எதுவும் தக்க பொழுதே; இங்கே கபிலர், பரணர், அரிசில் கிழார் என்னும் புலவர் பெருமக்கள் மூவரும் எதனை விரும்பி வந்தனரோ, அதனையே நானும் விரும்பி வந்தேன்; புலவர்க்குத் தக்க சிறப்பு செய்ய வேண்டும் என்ற எண்ணம் உனக்கு இருந்தால், இப்பொழுதே உன் மனைவியை ஏற்றுக் கொள். தலையில் எண்ணெய் இடாமல் துயர்க்கோலம் காட்டும் அப்பெண்ணரசி இனி தனக்குரிய நிலைமையில் இருக்க உதவுவாயாக!

**பேகன்:** அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் உருவம் புனைந்து வந்ததும் போலவும், வேதங்கள் நான்கும் எழுந்து நடந்து வந்ததுபோலவும், இன்று எனக்கு இவ்வறிவுரை புகட்ட வந்த நாற்பெரும் புலவீர், நீவிர் கேளாமலே உமக்கு ஏற்ற பரிசில் கொடுக்கவேண்டிய குலத்திற் பிறந்த சிறியேன், நால்வரும் ஒருமுகமாகக் கேட்கும் பரிசிலை இல்லை என்று கூற எங்ஙனம் துணிவேன்?

[கபிலர் வெளியே போகிறார்]

**பரணர்:** யான் உன்னிடம் ஒன்றும் வேண்ட வரவில்லை என்று கூறிவிட்டேன். உன் கடமையை நீ அறநெறி தவறாமல் நடத்த வேண்டும் என்று எடுத்துரைக்க எனக்கு உரிமை உண்டு என்பதை நீயே

ஏற்றுக்கொள்வாய். ஆகவே, இப்பொழுதே நீ உன் தேரேறிப்போய் உன் மனைவியை நாடெல்லாம் காண அழைத்து வருவதே சிறப்பென்பேன்.

[கபிலரும் கண்ணகியும் வருகிறார்கள்]

**கபிலர்:** பேக, இச்செல்வம் — பெண்ணருங்கலம் — என் மகள். இன்று யான் கொடுக்கிறேன், உன் உரிமையாக. இவள் என்றும் குறையாத வாழ்வில் வாழ வேண்டும் என்பதே என் விருப்பமாம்.

**அரிசில் கிழார்:** அங்ஙனமே ஆகுக!

**பரணர்:** இறைவன் அருள்க!

**பேகன்:** வணக்கம்! வணக்கம்! குறைகளைப் பொறுத்து அருளவேண்டும்!



**பெருங்குன்றூர் கிழார்:** பெண்ணினும் பெரியது ஒன்று உண்டோ? பெண்ணை இகழும் ஆண்மை ஆண்மை

ஆகுமா? எம் விருப்பம் நிறைவேற்றிய உனக்கு எல்லா நலமும் வருக!

**கண்ணகி:** புலவீர்காள், யான் என்ன கைம்மாறு இயற்றுவேன்! தலையார வணங்குகிறேன்!

[எல்லோரும் போகின்றனர்]

### குறிப்புரை

நிகழாத — நடக்காத, குழல் — புல்லாங்குழல், பொறுது — தாங்காது, இகழ்வது — நிந்திப்பது, அத்தகைய — அப்படிப்பட்ட, பல்லாண்டு — பல வருடம், பசி களைய—பசியை நீக்க, நாட்டம்— நோக்கம், துயர்க்கோலம் — துயரத் தோற்றம், அறநெறி — தரும வழி, கைம்மாறு — பதிலுதவி.

### வினாக்கள்

1. பேகன் வாழ்வில் நிகழ்ந்த குற்றம் யாது?
2. கண்ணகி கற்புடையாள் என்பதை அறிவது எதனால்?
3. புலவர்கள் பேகனிடம் வேண்டிய பரிசில் யாது?
4. கண்ணகி தன் நன்றியை எங்ஙனம் தெரிவித்தாள்?
5. முற்காலத்துப் புலவர்கள் இயல்பு என்ன?

### இலக்கணம்

1. கண்ணகி அழுத அழுகை வருத்தம் தந்தது
2. பேகன் இகழ்ச்சியடைதல் தக்கதன்று
3. பேகன் புலவரைத் தொழுதலிற் விருப்பம் கொண்டவன்
4. அவன் நல்லோரைக் காணல் நலமென்று எண்ணுபவன்

1. அழுகை — தொழிற் பெயர் — '**கை**' விகுதி பெற்றது
2. இகழ்ச்சி — ,, ,, — '**சி**' ,, ,,
3. அடைதல்— ,, ,, — '**தல்**' ,, ,,
4. தொழுதல்— ,, ,, — '**தல்**' ,, ,,
5. காணல் — ,, ,, — '**அல்**' ,, ,,

இவ்வாறு தல், அல், சி, கை விகுதிகளோடு தொழிலின் பெயராய் வருவன தொழிற்பெயராம்.

### பயிற்சி

தல், அல், கை, சி என்ற தொழிற்பெயர். விகுதிகள்பெற்ற வேறு சொற்கள் வகைக்கு இரண்டு வரைந்து காட்டுக.

# 8. மாம்பழத்தால் நேர்ந்த தீமைகள்

1. நம் நாட்டுப் பழங்கதைகளில் மாம்பழத்தால் விளைந்த தீமைகள் சில உண்டு.

2. பெரிய புராணத்தில் ஒரு வரலாறு உண்டு. **காரைக்காலம்மையார்** என்று உலகம் உணரும் பெருமைபூண்ட **புனிதவதியார்**, தம் கணவர் அனுப்பிய இரண்டு மாம்பழங்களுள் ஒன்றை விருந்தினராய் வந்த சிவனடியார்க்கு அளித்துவிட்டார். உண்ண வந்த கணவர், ஒரு மாம்பழத்தைத் தின்று, அது சுவை மிகுந்திருக்கக் கண்டு, மற்றொன்றையும் கேட்டார். உண்மை



யிலே மற்றொன்று அங்கு இல்லாமையால், அம்மையார் உட்சென்று கடவுளை வேண்டி, ஒரு பழம் பெற்றுக் கொடுத்தார். வணிகர் அதையும் தின்று, முன்னைய

பழத்தினும் அது மிக்க சுவையுடையதாய் இருப்பது கண்டு, ''இப்பழம் ஏது? நான் கொடுத்ததல்லவே!'' என்று கேட்டார். புனிதவதியார் முன்பு தெய்வச் செயலை உரையாமல் மறைத்துவைத்தவராயினும், பின்பு உள்ளது உள்ளவாறே கூறிவிட்டார். பக்குவம் பெருத மனம் உடைய அவ்வணிகர், தெய்வச் செயலையே சோதிக்க நினைத்தார்.

3. ''இப்பழம் தெய்வம் தந்த பழமானுல் அந்தத் தெய்வம் இன்னென்றும் தரலாமே? இன்னெரு பழம் வேண்டிப் பெறுக'' என்று கூறினர். புனிதவதியார் வேறென்றும் கூற வகையின்றி, அகத்தே போய் இறைவனை வேண்டினர். இறைவன் இன்னருளால் இன்னெரு பழம் கிடைத்தது. அதையும் நாயகரிடம் கொடுத்தார். அவர் அதைக் கையில் ஏந்தினர். அவர் கண் காண அது வந்த வழியே மறைந்தது. இதனல் புனிதவதியார் பெருமையை உணர்ந்த அவ்வணிகர், அவரைத் தம் மனைவியாகக் கொண்டிருத்தல் தம் சிறுமைக்குத் தகாதென எண்ணி, வேற்று நாட்டுக்குப் போய், அங்கு வேறொரு பெண்ணை மணந்து வாழ்ந்தார்.

4. புனிதவதியார் இச்செய்தி அறிந்து, 'அவர் பொருட்டுத் தாங்கிய உடம்பு இனி இறைவன் செயலுக்கே ஆகவேண்டும்!' என்று கருதிப் பேயுருவத்தை வேண்டிப் பேற்றூர். பிறகு '**காரைக்காற்பேயார்**' என்னும் பெயரோடு கயிலாயம் சென்றூர். அவர் பாடிய அரிய பாட்டுக்கள் அன்பு நெறிக்கு உற்ற துணைகளாய்த் தமிழ் மொழியின் தவச் செல்வமாய் இன்றும் இருக்கின்றன. இங்கு மாம்பழம் புனிதவதியாரைத் தம் கணவரிடமிருந்து பிரித்து வைத்தது.

5. சங்கச் செய்யுட்களில் ஒரு வரலாறு வருகிறது. அங்கு மாம்பழம் படுத்தியபாடு, கல் நெஞ்சையும் கரையச் செய்யும். அது ஒரு பெரிய கொடுங்கோல் நிகழ்ச்சியாம். அதனை நாம் சிறிது விளக்கமாகவே அறிய முயல்வோம்:

6. சங்கம் இருந்த காலம் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முந்தியதாகும். அந்நாளில் இந்நாட்டிலே முடியுடை வேந்தர் மூவர் இருந்தனர். '**வேளிர்**' என்ற குறுநில மன்னர் பலர் இருந்தனர். அவருள் **நன்னன்** என்பவன் ஒருவனுவன். அவன் **பல்குன்றக் கோட்டம்** என்ற சிறு நாட்டுக்குத் தலைவனாய் இருந்தான். இன்று **திருப்பதி** என்று வழங்கும் திருவேங்கடமலை அக் கோட்டத்தில் இருக்கிறது. அக்கோட்டம் பல மலைகளை யுடையதாதலால், இப்பெயர் பெற்றது. தொண்டை நாடு, முன்னாளில் இருபத்துநான்கு கோட்டங்களாய்ப் பிரிந்திருந்தது. அவற்றுள் பல்குன்றக் கோட்டம் ஒன்று ஆகும். நன்னன் அரசாண்ட அக்கோட்டத்தின் தலைநகர் **செங்கண்மா** என்பதாம். அது இப்பொழுது **திருவண்ணமலைக்கு** மேற்கே உள்ளது.

7. நன்னன், தன் சிறு நாட்டிலே நிலவளமும், நீர் வளமும் பொருந்தியிருந்ததால், பயிர்த் தொழிலில் மிக்க ஊக்கம் கொண்டான்; நன்செய் புன்செய்களை நாடெங்கும் குடிமக்களைக்கொண்டு, வளர்த்ததேயன்றித் தனது அரண்மனைக்கருகிலே மாந்தோப்பு ஒன்று அமைத்து, நன்கு பேணியும் வந்தான். அத்தோப்பை யொட்டி ஒரு சிறிய ஆறு ஓடிக்கொண்டிருந்தது. ஆற்று நீர், அத தோப்புக்கு உயிர்நிலையாய் இருந்தது. காலையிலும், மாலையிலும் நன்னன் அத்தோப்பில் வரப்போவது உண்டு.

8. அவன் பல மாமர வகைகளை அங்கு வளர்த்து வந்தான். பிறநாடுகளிலிருந்து அரிதிற்பெற்ற மாங்கன்று களையும் அங்கு வளர்த்தான். ஒட்டு மரங்களும் சில வளர்ந்தன. அம்மரங்கள் எல்லாம் அவன் பார்வைக்கு உரியவையாய் இருப்பினும், ஆற்றோரமாய் நின்ற ஒரு பெரு மாமரத்தில் அவன் மனம் முழுதும் ஊன்றியிருந் தது. அம்மரத்தில் பூக்கள் பூக்கத் தொடங்கிய காலம் முதல் அதற்கு நல்ல காவல் வைப்பான். வடுக்கள் தோன்றி, காய்கள் முதிரும் பருவம் வரும்பொழுது, நாள்தோறும் காலையும் மாலையும் அவன் வந்து பார்த்துப் போவான். அம்மரத்தின் பசுங்காய்களைக்கூட அவன் யாருக்கும் கொடுப்பதில்லை. ஒவ்வொரு காயும் பழுத் தால் அமுதம்போன்ற சுவையுள்ள கனியாகும் என்பது அவன் எண்ணம். ஆகவே, இனிமை பழுக்கும் அம் மரத்தின் காய்களை எவரும் தொடக்கூடாது என்ற ஆணை பிறப்பித்திருந்தான்.

9. அவ்வாணையை அறிந்த அந்நகர மாந்தர் அம் மரத்தின் அருகே நடப்பதற்கும் அஞ்சுவர். ஒரு நாள் அத்தோப்பின் அருகேயுள்ள ஆற்றிற் குளிப்பதற்கு இளம் பெண் ஒருத்தி அங்கு வந்தாள். அவள் வணிக குலத்திற் பிறந்தவள்; பெருஞ் செல்வம் உள்ள குடும்பத் தில் ஒரே மகளாய் அருமையாய் வளர்ந்தவள். அதற்கு முன்பு அவள் அந்த ஆற்றுப் பக்கம் வந்ததில்லை. அத் தோப்பின் பெருமைகளை நன்கு அறியும் வயது நிரம்பாத கன்னிப் பெண்ணுயிருந்தாள். ஆற்றிலே அவள் தனியே குளித்துக் கொண்டிருந்தாள். அப் பொழுது அங்கு ஒரு சிறிய மாங்காய் மிதந்து வந்தது. அக்காய் அவள் கண்ணைக் கவர்ந்தது, அதை எடுத்துக்

கடித்துத்தின்று மிகவும் சுவையாய்இருப்பதை உணர்ந்து மகிழ்ந்தாள். 'காயே இப்படி இருக்கிறதே, பழம் எப்படி இருக்குமோ?' என்று அண்ணாந்து பார்த்தாள். சுவைப்பழம் பழுக்கும் மாமரம் அவள் கண்ணிற்பட்டது.

10. மாந்தோப்புக்கு உரிய தலைவனாகிய நன்னன் அப்பொழுது அங்கு வந்தான்; அப்பெண் தனது அரிய மாமரத்தில் பெருங்கனியாகத்தக்க காய் ஒன்றைத் தின்று



விட்டாள் என்று அறிந்து கடுஞ்சினம் கொண்டான்; காவலனை அழைத்து அவளைச் சிறை செய்து, கொலைக் களத்துக்கு அழைத்துப் போகுமாறு ஆணையிட்டான். இதனை அறிந்த அப்பெண்ணின் பெற்றோர் அங்கு ஓடி வந்து, அவன் காலில் விழுந்து, மிகவும் வேண்டினர்; அரசன் சினத்துக்கு ஆளானவர் செலுத்தத்தக்க தண்டம் எல்லாம் செலுத்துவதாக உரைத்தனர்; அப்பெண்ணின்

நிறையளவு பொன்னும், எண்பத்தொரு களிறுகளும் தண்டம் தருவதாக வணங்கிக் கூறினர்.

11. நன்னன் அவர்கள் சொல் ஒன்றுக்கும் செவி சாய்க்கவில்லை. அப்பெண்ணைக் கொல்வதென்றே முடிவு செய்தான். "அவள் மரத்தின் அருகே போகவில்லை. கனியைப் பறிக்கவும் இல்லை. ஆற்றில் விழுந்து தானே மிதந்து வந்த பசுங்காயையே எடுத்தாள். எவ்வகையாலும் அவள் குற்றமுள்ளவள் அல்லள்" என்று பெரியார் பலர் மன்றாடிப் பார்த்தனர். அவனிடம் நாவன்மை ஒன்றும் பலிக்கவில்லை. அவன் மனம் இரும்போ கல்லோ என்று எல்லோரும் அஞ்சி அகன்றனர். மாங்கனியின் இனிமையை அறிய விரும்பிய இளம்பெண், அந்தக் கொடுங்கோல் அரசனால் கொல்லப்பட்டாள். நன்னன் இக்கொடுமை புரிந்ததால், அவன் மரபிற் பிறந்த **இளவிச்சிக்கோ** என்ற தலைவனைப் பெருந்தலைச் சாத்தனார் தழுவாது, அவன் பக்கத்தில் இருந்த இளங்கண்டீரக் கோவைத் தழுவினார். பெண் கொலை புரிந்த நன்னன் குடியைப் புலவர் வெறுத்து ஒதுக்க மாம்பழம் காரணமாயிற்று.

## குறிப்புரை

அகத்தே போய் — வீட்டினுள்ளே போய், பேணி—காப்பாற்றி, ஆணை — உத்தரவு, அண்ணாந்து — மேற்புறம் நிமிர்ந்து, சினம் — கோபம், தண்டம் — அபராதம், மன்றாடி — கெஞ்சிக் கேட்டு, நாவன்மை — பேச்சுத் திறமை.

## வினாக்கள்

1. பெரிய புராணத்தில் கூறப்படும் மாம்பழம் என்ன செய்தது?
2. காரைக்காலம்மையார் மாம்பழத்தால் அடைந்த தீமை யாது?
3. நன்னன் எந்நாட்டை ஆண்டான்?

4. அந்நாட்டுத் தலைநகர் இப்பொழுது எங்கே உள்ளது?
5. வணிகப்பெண் குற்றவாளி ஆனது ஏன்?
6. தண்டம் கொடுக்க வந்த பெற்றோர் என்ன தருவதாக உரைத்தனர்?
7. நன்னன் பழியடைந்தது பின்னுளில் எதனுல் விளங்கியது?

## இலக்கணம்

1. வென்றவன் வீரம் போற்றற்கு உரியது.
2. பாடினவள் திறமை பாராட்டத் தக்கது.
3. அறம் செய்தவர் துறக்கம் அடைவர்.

இந்த மூன்று வாக்கியங்களிலும் பெயர் கூறப்படவில்லை. வென்றவன், பாடினவள், செய்தவர் என்ற வினைச்சொற்கள், அவ்வினைகளைச் செய்தவர்களுக்குப் பெயராய் வந்துள்ளன. இவ்வாறு வரும் வினைச் சொற்கள் **வினையாலணையும் பெயர்** என்று வழங்கப்படும்.

## பயிற்சி

1. மாங்கனி உண்டவன் மற்ருெரு கனி கேட்டான்.
2. மாங்காய் உண்டவள் மன்னனுல் தண்டிக்கப்பட்டாள்.
3. கொடுமையாய்த் தண்டிப்பவர் பெரும் பழியை யடைவர்.

இவ்வாக்கியங்களில் வந்துள்ள வினையாலணையும் பெயர்களை எடுத்து எழுதுக.

# 9. வீட்டுத் தோட்டம்

1. வீடுகளை அழகாகவும், பெரியவையாகவும் கட்டுவது நல்லது. அந்த வீடுகளில், வெளிச்சமும் காற்ரேட்டமும் இருக்கும்படி பல சாளரங்களும் வாயில்களும் அமைப்பது இன்றியமையாதது. நான்கு பக்கமும் பெரிய மாளிகைகள் சூழ்ந்து, காற்றையும் ஒளியையும் மறைக்கும் இடத்தில் எத்தனை வாயில்கள் வைத்தாலும் என்ன பயன்? குடியிருக்கும் வீட்டைச் சுற்றி நல்ல காற்றுப் போக்கு வரவாய் இருக்க ஒரே வழி உண்டு; நாற்புறமும் குறைந்தது பத்தடி அகலமாவது வெட்ட வெளி விடவேண்டும். முன்புறமும், பின்புறமும் இரு பக்கங்களில் இருப்பதைக் காட்டிலும், அகலமாக இருத்தல் நலம். இடம் கிடைப்பது அரிதாய் இருக்கும் பெரிய நகரங்களில் இவ்வளவிடத்தை வீணேவிட முடியுமா? என்று சிலர் கேட்கலாம். கல்கத்தா, பம்பாய் போன்ற நகரங்களில் ஏழடுக்கு மாடி வீடுகளில் இரண்டு அறைக்குள் அடங்கி கிடக்கும் மக்கள், நல்ல காற்றை உட்கொள்ளும் பொருட்டு அங்கங்கே பல பொதுத் தோட்டங்கள் இருக்கின்றன.

2. நகரத்தில் அமையும் தோட்டம், அதன் அழகுக்காக என்று எண்ணுவது சிறப்பன்று. நகர மக்கள் நல்வாழ்வு வாழும் பொருட்டே அத்தோட்டங்கள் அமைக்கப் பெற்றுள்ளன என்பதை அறியவேண்டும். நகர வாழ்வின் நெருக்கமில்லை இன்னும் ஏற்படாத பெரிய ஊர்களில் வாழும் மக்கள், தங்கள் வீடுகளை நல்வாழ்வுக்கு ஏற்ற முறையில் அமைத்துக் கொள்வது நல்லது. நல்ல காற்றும், வேண்டும் அளவு வெளிச்சமும் வீட்டுக்குள் வருவதற்கு ஏற்றபடி வீட்டைக் கட்டுதல் வேண்

டும். வீட்டைச் சுற்றிய வெளி நிலத்தில் கண்ணுக் கழகிய இயற்கைக் காட்சிகளை அமைத்து வைத்தால், அவற்ருல் நாம் மன நலமும், உடலுரமும் பெறலாம். நகரத்தின் பொதுத் தோட்டம் பொது மக்கள் உடல் நலத்தை வளர்ப்பதுபோலவே, வீட்டுத் தோட்டம் அவ் வீட்டு மக்களின் உடல் நலத்தைக் காக்க வல்லதாம்.

3. வீட்டின் முன்புறம் சில அழகிய பூஞ்செடி களை வைக்கலாம். வெளிச்சத்தை மறைக்காமல், அவை நல்ல காற்றைத் தர உதவியாகும். வேப்பமரம், மகிழ



மரம், கிச்சிலிமரம் முதலியவை வீட்டின் முன்னே இருக்கத்தக்க மரங்களாம். மல்லிகை, முல்லை, ரோஜா முதலிய செடிகளையும், சம்பங்கி முதலிய கொடிகளையும் முன்புறம் வைக்கலாம். இரு பக்கங்களிலும் தென்னை மரத்தை வைக்கலாம். அதிகமான இடம் இருந்தால், கமுக மரத்தையும் வைத்து வளர்க்கலாம். இடைவெளி

களில் அழகிய பூஞ்செடிகளை வைக்கலாம். இவற்றுள் சில செடிகள் இலையழகுள்ளவையாயும், சில மலர் நிற அழகுள்ளவையாயும், சில மலர் மணம் உள்ளவையாயும் இருக்கும்படி வீட்டின் இரு பக்கங்களிலும் வகைக்கு இரண்டொன்றேனும் இருக்கும்படி வைப்பது நல்லது.

4. வீட்டின் பின்புறம் உள்ள தோட்டம் பெரும் பாலும் பிறர் கண்ணிற்படுவதில்லை. முன்புறத்தைப் பலர் பார்க்க இயலும். முன்புறம் உள்ள தோட்டம் அழகு, மணம், நல்ல காற்றோட்டம் முதலிய நன்மைகள் உள்ளதாய் இருக்க வேண்டும். இரு பக்கத்துத் தோட்ட மும் காற்று வர உதவ வேண்டும். பின்புறத் தோட்டம் இந்த நோக்கங்களுக்காக அமைக்கப்படுவதில்லை. வீட்டுத் தலைவர் நல்ல பொழுது போக்க அத்தோட்டம் பலவகையாலும் உதவ வேண்டும். பகலிலே தொழிற் சாலையிலோ, உத்தியோக நிலையத்திலோ, கலாசாலை யிலோ, நீதிமன்றத்திலோ உழைத்துவிட்டுவரும் தலைவன் இத்தோட்டத்தைத் தனக்கு உற்ற துணையாக நினைக்க வேண்டும். இத்தோட்டத்திலே அவன் பொழுதுபோக் கற்குரிய தாவரங்கள் செழிப்பொடு விளங்கவேண்டும்.

5. ஆட்களை அமர்த்தி வேலை வாங்கும் நிலைமை யில் உள்ளவர்கள் காலையிலும் மாலையிலும் சிறிது பொழுது இத்தோட்டங்களில் உலவி, எங்கெங்கே என்னென்ன அமைப்பு வேண்டும் என்பதைத் தெரிவிக்க லாம். "பயிர் பாராது கெட்டது" என்பது பழமொழி யாம். அப்பழமொழி இந்த வீட்டுத் தோட்டத்துக்கும் நன்கு பொருந்தும். இத்தோட்டத்தில் இன்ன பயிர் விளையவேண்டும் என்பதை உடையவன் முடிவு பண்ண வேண்டும். அம்முடிவு நிறைவேறத் தக்க வழியில்

தோட்டக்காரன் உழைக்க வேண்டும். ஆட்கள் வேண்டாத தோட்டமாய் இருந்தால், உடையவனே காலையும் மாலையும் அங்கு உழைக்க வேண்டும். அவ்வுழைப்பு அவனுக்கு உடற்பயிற்சியும், நல்ல பொழுது போக்கும், தளர்ந்த உடற்பகுதிகளுக்கு ஊட்டமும் தரும்.

6. இத்தோட்டத்தில் என்ன பயிர் செய்யலாம் என்று பார்ப்போம்; புடல், பீர்க்கு, பாகல், சுரை முதலிய கொடிகளை ஒரு பக்கம் வளர்க்கலாம். பரங்கி, பூசுணி முதலிய கொடிகளை ஒரு பக்கம் ஓரமாகப் போடலாம். வெள்ளரி போன்ற கொடிகளை இடையிலே வைக்கலாம். கொத்துமல்லி, வெந்தயம், அறைக்கீரை, முளைக்கீரை, தக்காளி முதலிய கீரை வகைகளை ஒருபக்கமாக வளர்க்கலாம். தக்காளியின் பழமும் உதவும், காயும் உதவும் என்பதை அறிந்து, அது காட்டுச் செடிதானே என்று புறக்கணியாமல் வளர்த்தால், உடம்புக்கு ஒரு மருந்து போல அது உதவும். வெண்டை, கொத்தவரை, மிளகாய் முதலிய செடிகளை ஒரு பக்கம் பயிர் செய்ய வேண்டும். பந்தர் வேண்டும் கொடிகள் உள்ள பக்கம் இச்செடிகளை வைப்பதிற் பயன் இல்லை. தென்னை மரங்கள் சில பின்புறமும் இருக்கலாம்.

7. எத்தனையோ செடி கொடிகள் மனிதனுக்கு உணவு தரும் பொருட்டு நாடெல்லாம் வளர்கின்றன. அவற்றின் வரலாற்றை அறிந்து, பக்குவம் தவறாமல், பருவம் தெரிந்து பயிர் செய்தால் நம் தோட்டம், நமக்கு வேண்டும் உணவுவகையிற் பெரும்பகுதியைக் கொடுத்து வரும். நம் உணவில் அரிசி, பருப்பு, நெய், எண்ணெய் என்ற வகை போக எஞ்சியிருப்பவை காய்கறி வகை தானே? புளியும் ஒரு மரத்தின் பழம் என்பதை

நாம் மறக்கக்கூடாது. புளி கிடைக்காத நாடுகளில் மாதுளை முத்துக்கள், புளியின் நிலைபெறுகின்றன. நம் நாட்டுக் கடல் உப்பு தருகிறது. நாம் பயிரிடும் காய்கறி களில் நம் உடல் நலத்துக்கு வேண்டிய பல வகைச் சத்துக்கள் உண்டு. இவற்றை நாம் நன்கு உணர்ந்தால் நம் வருவாயிற் பெரும்பகுதியைக் காய்கறிக்கே செல வழிப்போம். அவை நம் பாட்டால் நம் கண்ணெதிரில் நம் தோட்டத்திலே வளரக்கூடும் என்றால், அது மிகவும் நன்மையன்றோ?

8. தாவர சாத்திரம் ஒரு தனிக் கலை. அந்தக் கலை யில் தோட்டக் கலை ஒரு சிறந்த பகுதி. தோட்டக் கலை யில் மனம் வைத்தவர் எத்தகைய கவலையையும் மறக்க எளிய வழி அறிந்தவராவர். கவலை மறக்க உதவும் இக் கலையின் பயனையெல்லாம் நம் வீட்டுத் தோட்டத் திலேயே நாம் நேரிற்காணக்கூடும் என்றால், இதற்காக நெடுந்தொலைவு போகவேண்டுமா? இப்படி நமக்கு உணவும், நல்ல காற்றும், உடல் நலமும் உதவும் தோட் டம் நம் வீட்டுக்கு அழகும் தருகிறது என்பது எத்தனை சிறப்பாம்? உலவி வரும்போதே நம் மனம் மகிழ்கிறது; உடல் நலம் பெறுகிறது; வாழ்வு, குறைகள் நீங்கி, நலம் விளங்குவதாகிறது. நாம் இவ்வித நற்பயன் பெற முயல்வோமாக.

## குறிப்புரை

சாளரம் - சன்னல்; இயற்கைக்காட்சி - செடி கொடிகள்; கமுக மரம் - பாக்கு மரம்; இயலும் - முடியும்; நீதி மன்றம் - நியாயம் வழங் கும் இடம்; உற்றதுணை - பொருந்திய துணைவன்; புறக்கணியாமல் - அலட்சியம் செய்யாமல்; சத்துக்கள் - சாரமுள்ளவைகள்.

## வினாக்கள்

1. வீட்டைச் சுற்றி வெளியிடம் எதற்காக வேண்டும்?

2. பெரிய நகரங்களிற் பொதுத் தோட்டம் எதற்காக இருக்கும் ?
3. வீட்டின் முன்புறம் எவ்வகைச் செடிகளை வைக்கலாம் ?
4. வீட்டின் பின்புறத் தோட்டத்தில் எவற்றைப் பயிராக்கலாம் ?
5. உடையவனே தோட்டத்தில் உழைப்பதால் வரும் நன்மை என்ன ?
6. தாவரங்களால் மனித வாழ்வுக்கு விளையும் நலம் என்ன ?

## இலக்கணம்

எழுவாய் செய்யும் தொழிலைக் குறிக்கும் சொல், வினைச்சொல் என்று சொல்லப்படும். வினைச்சொல், பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்ற உறுப்புக்களில் ஏற்றனபெற்றுவரும். இவைகள் உறுப்புக்கள் என்று சொல்லப்படும்.

கோபாலன் பாடினன் — பாடினன் என்ற வினைச் சொல்லில் உள்ள உறுப்புக்கள் :

பாடு — பகுதி;
ஆன் — விகுதி;
இன் — இடைநிலை
} இதில் மூன்று உறுப்புக்கள் மட்டும் வந்தன.

நடராசன் நடந்தனன் — நடந்தனன் என்ற வினைச்சொல்லில் உள்ள உறுப்புக்கள் :

| | |
|---|---|
| நட — பகுதி | அன் — சாரியை |
| ஆன் — விகுதி | த் — சந்தி |
| த் — இடைநிலை | த் — ந், ஆகத் திரிந்தது விகாரம் |

### பயிற்சி

கீழ்வரும் வினைச் சொற்களில் வரும் உறுப்புக்களை எடுத்து எழுதுக:—

1. பல தோட்டங்கள் **இருக்கின்றன**.
2. செடிகள் நன்றாய் **வளர்ந்தன**.
3. உடல் நலம் **பெறுகிறது**.
4. தாவரங்கள் மக்களுக்கு நன்மை **புரிகின்றன**.

# 10. குருவும் சீடரும்

1. தெய்வத்தின் திருவருளை உலகம் உணர வெளியிட்ட பெரியார் பலர் நம் நாட்டில் வாழ்ந்திருந்தனர். நம் நாட்டுப் பழைமையான வரலாறுகளால் நாம் அப்பெருமக்கள் நமக்குச் செய்த நன்மைகளை அறிகிறோம். இந்து மதத்தின் பல கிளைகளுக்கும் தலைவர்கள் நம் நாட்டிற் பிறந்து அதன் பெருமையை வளர்த்தனர். புத்தமதம், சமண மதம், சீக்கிய மதம் முதலிய சில மதங்களின் கர்த்தர்களும் நம் நாட்டில் இருந்தார்கள். இம் மதங்களுக்கெல்லாம் கருத்து ஒற்றுமை உண்டு என்ற உண்மையை உலகறியத் தமது வாழ்நாளில் உணர்த்திய மகான் **இராமகிருஷ்ண பரமஹம்ஸரும்**, அவர் சீடர் **விவேகானந்தரும்** இந் நாட்டிற் பிறந்தவரேயாவர்.

2. குருவும் சீடருமான அவ்விருவர் வரலாற்றை நாம் அறிவது இக்காலத்துக்கு மிகவும் பொருத்தமாகும். மதம் காரணமாக மக்கள் மனிதத் தன்மையை இழந்து, விலங்குகளினும் இழிந்த நிலையை எய்தத் துணியும் நிலைமைகளை இந்நாளில் நாம் காண்கிறோம். வங்க நாட்டிலும் பாஞ்சாலத்திலும் நாடு பிரிந்ததால் இந்துக்களும், முசல்மான்களும், சீக்கியர்களும் தெய்வத்தின் பெயராற் பல கொடுமைகள் செய்தார்கள். இத்தகைய இழிநிலையில் மனிதர் இறங்கும்போது, 'எல்லா மதங்களும் சொல்லும் பொருள் ஒன்றே,' என்ற உண்மையை விளக்கிய பெரியார் வாழ்க்கை வரலாறு நமக்கு நன்மை தரும் என்பது உறுதி.

3. வங்க நாட்டிலே கல்கத்தா நகர்க்கு எட்டுக் காதத் தொலையில் உள்ள **காமர்புகூர்** என்ற சிற்றூரிலே

**க்ஷுதிராமர்** என்பவர், சென்ற நூற்றுண்டின் தொடக்கத்தில் வாழ்ந்து வந்தார். அவர் தவத்தின் பயனுக, 1836-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17-ம் நாளில் **கதாதரர்** என்ற குமாரர் பிறந்தார். **கயை** என்னும் புண்ணிய நகரத்தில் உள்ள கதாதரர் என்ற தெய்வத் திருவருளால் அக்குமாரர் பிறந்ததால் இப்பெயர் பெற்றுர். அவர் இளமைப் பருவத்திலேயே தந்தையாரை இழந்தார்; கிராமத்திலே கற்கத் தக்க கல்வியிற் சிறிதளவு கற்றுக்கொண்டார். பள்ளிக்கூடத்துக்குப் போய்ப் புத்தகமும் கையுமாய் இருக்க அவர் விரும்பவில்லை.

4. இளமையில் அவர்க்கு நன்ருகப் பாடும் பழக்கம் உண்டு. நாடகம் நடிப்பதிலும் அவர்க்கு அளவு கடந்த விருப்பம் உண்டு. வீண் பொழுது போக்கில் அவர் மனம் எப்பொழுதும் சென்றதில்லை. தம்மைப் போன்ற இளம்பிள்ளைகளைச் சேர்த்துக் கொண்டு பாகவதக் கதையில் கூறப்பட்டுள்ள கண்ணன் திருவிளையாட்டுக்களை ஆடல் பாடல்களோடு நாடகமாக நடித்து அவர் இன்புறுவார். கண்ணன் வேடம் பூண்டு அவர் நடிக்கும்போது, அவர் தோழர் கண்ணனையே கண்டதுபோல மனமகிழ்வர். மண்ணுல் அழகிய உருவங்கள் செய்து அவைகளுக்குப் பொருத்தமான நிறம் தீட்டிப்பார்த்து மகிழ்வதும் அவர்க்கு வழக்கமாம். கலைகளுள் சிறந்த சிற்பம், சங்கீதம், நாடகம் என்னும் மூன்றிலும் அவர் தேர்ச்சியுற்றிருந்தார். ''படிப்பும் இல்லாமல் ஆடல் பாடல்களிலேயே பொழுது போக்கும் இந்தப் பிள்ளை உலகத்துக்குப் எப்படிப் பயன்படப் போகிருன்!'' என்று எண்ணிய தாயார், அவரைக் கல்கத்தாவுக்கு அருகில் உள்ள தட்சிணேச்

வரத்துக்கு அனுப்பி வைத்தார். அங்கு ஒரு செல்வச் சீமாட்டி பெரியதொரு காளி கோயில் கட்டியிருந்தாள். அக்கோயிலில் கண்ணன், சிவன் முதலிய தெய்வ உருவங்களும் உண்டு. அங்கு கதாதரரின் தமையனுர் பூசாரியாய் இருந்தார். அவர் ஆதரவில் அப்பெரியார் வாழ நேர்ந்தது. முற்பிறப்பின் தொடர்பால் இயல்பாகவே தெய்வப் பித்து பிடித்த கதாதரர், தம் தமையனுருக்கு உதவியாய் அவ்வாலயத்திலேயே பணிசெய்ய முன் வந்தார்.

5. தமையனுர் வேறு எங்கேனும் போக நேர்ந்தால், கதாதரர் காளிதேவிக்குப் பூசை புரியவேண்டும். தம் நினைவோடு அவர் இருந்தால் எல்லோரும் வழிபாடு செய்வதுபோலவே மணி அடிப்பது, நிவேதனம் செய்வது, கருப்பூரம் காட்டுவது முதலியன கிரமப்படி நடக்கும். தெய்வத்தின் திருமுன்பு சென்ருல், அப்பெரியார் தம்மை மறந்து பரவசப்படுவது இளமைதொட்ட வழக்கமாம். காளிதேவி இந்த வழியில் அவர்க்கு நல்ல துணையாய் அமைந்தாள். அவள் திருவுருவம் அவர் கண்ணிற்பட்டதும் அவர் உலகத்தையும் தம்மையும் மறந்து விடுவார். பூக்களை எடுத்துத் தம் தலைமேலே போட்டுக் கொள்வார். கருப்பூரத்தை மணிக்கணக்காகக் காட்டிக் கொண்டேயிருப்பார். நிவேதனத்தை அப்படியே தேவி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கண்ணீர் விட்டுக் கதறுவார்.

6. இப்படி அவர் செய்யும் வழிபாடு புதுமையாய் இருப்பதை ஆலயத் தருமகர்த்தர்கள் அறிந்து, அவர் மனம்போன வழியே போகவிட்டார்கள். அதன் பயனுக அவர்க்கு மேன்மேலும் தெய்வப் பித்து வளர்ந்தது.

தட்சிணேச்வரத்தில் இப்படி ஒரு கடவுட் பித்தர் இருப்பதை அறிந்த யோகிகளும், ஞானிகளும், துறவிகளும், கல்வி மிக்க புலவர்களும், சித்தர்களும், தவப் பெண்களும் அங்கு வரத் தொடங்கினர்கள். வந்தவர் ஒவ்வொருவரும் தம்மிடம் உள்ள வித்தையை அவர்க்கு எளிதில் கொடுத்து, அவர் பெருமையை அளக்க இயலாமல் விடை பெற்றனர்.

7. ஒரு கிழவி கண்ணன் பதுமை ஒன்றை வைத்துக் குழந்தைபோல அதனைக் கருதி வழிபாடு செய்தாள். குழந்தைகள் குறும்பெல்லாம் அவள் அன்புக்காக அவளிடம் காட்டிவந்த அக்கண்ணன் அங்கு வந்ததும் அவர் வசம் ஆய்விட்டான். இப்படியே இன்னும் எத்தனையோ புதுமைகள் நிகழ்ந்தன.

8. பஞ்சவடி என்ற ஆச்சிரமம் ஒன்றை அமைத்துக் கொண்டு, அங்கு அவர் தவம் பூண்டிருப்பார். இளமை முதற் பழகும் தெய்வ யோகம் அவர்க்கு அங்கும் துணையாய் இருந்தது. அவர் தாயார் இப்படி அவர் உலகத்துக்கு மாருக நடப்பதுகண்டு பொருது, அழகும் குணமும் ஒருங்கமைந்த ஒரு பெண்மணியை அவர்க்கு மணம் புரிவித்தார். கிராமத்தில் இளம் பெண்ணுக அப் புண்ணியவதியாரை அவர் திருமணச் சடங்கின்போது பார்த்ததுண்டேயன்றிப் பிறகு அவர் நினைவே இல்லாதிருந்தார். தவநெறியில் மேன்மேலும் புது வழிகள் தேடி வெற்றிபெற முயன்றுகொண்டிருக்கும் அவர்க்கு மனைவியாருடன் வாழும் உலக வாழ்வில் விருப்பம் உண்டாகுமோ?

9. **சாரதா தேவியார்** என்ற அப்பெண்மணி இளமையில் தம்மை மணந்து பிரிந்த நாயகரைத் தேடி தட்சிணேச்வரத்துக்கே வந்தார். இராமகிருஷ்ணர் தாம் வணங்கும் தெய்வமாகவே கருதி அவரை வரவேற்றுர். அதனுல், அப்பெண்மணி தாமும் தவக்கோலம்பூண்டு, அவர்க்கு உரிய பணிவிடைகள் புரியலாயினுர். **இராம கிருஷ்ணர்** உலகம் புகழும் துறவுநிலைக்கு அவர் வந்த போது **பரமஹம்ஸர்** என்ற பெயர் பூண்டார். அவர் பக்திமார்க்கம், கரும மார்க்கம், ஞானமார்க்கம் என்னும் மூன்றுலும் நமது பழைமையான மதத்தின் ஆழங்களை அளந்து பார்த்தார்; அன்னிய மதங்கள் என்ற பெயரால் வழங்கும் ஒவ்வொன்றிலும் அதனதன் வழிப்படி இறங்கி அதனதன் உண்மைக் கருத்தை உணர்ந்து கொண்டார். கிறிஸ்துமதக் கொள்கையும், இஸ்லாம் மதக் கொள்கை யும் புத்தகங்கள் வாயிலாக அவர் அறிந்ததில்லையாயினும், யோக வழியால் அங்கங்கு நுழைந்து அவற்றை அறிந்தார்.

10. தெய்வத் திருவருளின் கொடுமுடியிலே நின்ற அப்பெரியார் பெருமை வங்க நாடெங்கும் பரவியது. இதனைக்கேட்டு அந்நாளிலே தெய்வ நம்பிக்கை குறைந்த பலர் அவரிடம் வந்து, உண்மையுணர்ந்து தெளிவு பெற் றுச் சென்றனர். இங்ஙனம் அவரைக் காண வந்தவருள் **நரேந்திரர்** என்பவர் ஒருவராவர். அவர் ஆங்கிலக் கல்வி நன்கு கற்றவர்; நன்ருகப் பேசும் திறமை வாய்ந்தவர்; இசைப் பயிற்சியும் நிரம்பியவர். அவர் இன்னதுதான் தக்கவழி என்று உணர இயலாமல் மனம் இழுத்தபடி தெய்வத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார்; இந்த ஆராய்ச்சியின் ஒரு துறையாக எண்ணி, இராம கிருஷ்ணரைப் பார்க்க ஒரு நண்பர் துணையோடு ஒரு

நாள் வந்தார். அவர் அப்பொழுது நல்ல காளைப் பருவத்தில் உடல் வலிமையும், மனவுரனும் சிறிதும் குறையாதிருந்தார்.

11. தட்சிணேச்வரத்துக்கு வந்த நரேந்திரர் ஆலயத்துக்குப் புறத்தே உள்ள அறையில் கயிற்றுக் கட்டிலில்





அமர்ந்திருந்த தெய்வப் பித்தரைப் பார்த்தார். 'இவர்தானா தெய்வத்தைக் கண்டவர்!' என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் உண்டாயிற்று. சிறிதும் மனம் தளராமல் துறவியர் பெருமானை நோக்கி, அந்த இளஞ்சிங்கம் வினவலாயிற்று: "தெய்வம் என்பது உண்டா? அதை நீர் கண்டது உண்டா?" என்றார் நரேந்திரர். "என் அப்பனே, தெய்வம் உண்டு. உன்னைக் காண்பது போலவே தெய்வத்தையும் நான் காண்கிறேன்" என்றார் பெரியார். "நீர் கண்ட தெய்வத்தை எனக்கும்

காட்ட இயலுமா?" என்றார் நரேந்திரர். "ஆகா! காட்டுவேன்! இங்கே வா; இதோ பார்!" என்று கூறி, அவர் மார்பில் ஒரு கையை வைத்தார் துறவியர் பெருந் தகை. அவ்வளவில் நரேந்திரர் தம்மையும் உலகத்தை யும் மறந்து தெய்வத் திருவருள் வெள்ளத்திலே மூழ்கித் திளைத்தார். நரேந்திரர் இப்படி இருந்தபோது இராம கிருஷ்ணர் தம் அருகில் இருந்தாரை நோக்கி, "இவன் உலகத்தை ஓர் ஆட்டு ஆட்டப் போகிறான்!" என்று கூறினார். அன்றே நரேந்திரர் மறைந்தார்; விவேகானந் தர் பிறந்தார்! சில நாட்களில் அவர் தம் குருவின் திரு வருள் வரத்தால் அவர் வழிகளை அறிந்து துறவறம் மேற் கொண்டார்.

12. இராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர் போன்ற பல சீடரைத் தம்மிடம் சேர்த்துக் கொண்டார். அச்சீடர் கூட்டத்தில் விவேகானந்தரே தலைமை பூண் டார். இராமகிருஷ்ணர் இவ்வுலகை நீங்கி, அழியாப் பேரின்பம் அடைந்ததும், அவர் காட்டிய புது நெறியை—எம்மதமும் கருதும் பொருள் ஒன்றே என்ற சன்மார்க் கத்தை—உலகிற் பரப்பும் பொறுப்பு விவேகானந்தர் தோள்மேல் இறங்கியது. இந்தியா முழுவதும் இன்று இப்புது நெறியின் சீடர் பலர் இருக்கின்றனர். உலகம் எங்கும் இவ்வழி பரவி வருகிறது.

13. 1893-ம் ஆண்டில் அமெரிக்காவில் **சிக்காகோ** நகரில் ஒரு **சர்வ மத மகா சபை** கூடியது. அம்மகா சபையில் இந்து மதத்தைப்பற்றி எடுத்துரைக்கும் பொறுப்பு நம் சுவாமி விவேகானந்தர்க்கு ஏற்பட்டது. அவர் இந்நாட்டுச் செல்வர் சிலர் துணைபெற்று, அங்கு

சென்று இந்து மதத்தின் பழைமை, பெருமை, அகலம், ஆழம் முதலிய சிறப்புக்களை நன்கு விளக்கி, புகழ் பெற்ருர். அயல்நாடுகளிற் பல பெரு நகர்களிலும் அவர்க்கு அந்நாளில் நல்ல வரவேற்பு இருந்தது. அவர் **'என் குருநாதர்'** என்று தம் குருதேவரைப் பிறர் அறியும்படி பேசிய பேச்சு எங்கும் போற்றத்தக்கதாம். அந்தக் குருவும் சீடரும் கண்ட வழி, நம் நாட்டுக்கு நலம் விளைப்பதாக!

## குறிப்புரை

கிளைகள் - பிரிவுகள், சீமான் (ஆண்பால்), சீமாட்டி (பெண்பால்), சீமான் - செல்வத்தில் உயர்ந்தவன், பணி - தொண்டு, பரவசம் - தன் வசம் இழந்து நிற்றல், வழிபாடு - தொண்டு, புண்ணியவதி - நல்வினையாட்டி, மார்க்கம் - வழி, ஞானம் - கடவுளையறியும் அறிவு, இயலாமல்- முடியாமல், மனஉரன் - மனவலிமை, இல்லறம் × துறவறம்.

## வினுக்கள்

1. இப்பாடத்திலே 'குரு' என்றது எவரை? 'சீடர்' என்றது யாரை?
2. குருவும் சீடரும் எந்த நோக்கத்தைப் பரப்பினர்?
3. காளி தேவி அருளால் அவர் பெற்ற பெருமை என்ன?
4. நரேந்திரர் விவேகானந்தர் ஆனது எப்படி?
5. 'இவன் உலகத்தை ஆட்டப் போகிருன்?' என்றது எவரைக் குறித்து யார் கூறியது?
6. விவேகானந்தர் குரு பக்தியை எப்படி விளக்கினர்?

## இலக்கணம்

நீ இங்கு வா—என்பது போன்ற ஏவுதல் பொருளில் வரும் முன்னிலை வினை முற்றே **ஏவல் வினைமுற்று** எனப்படும். இந்த ஏவல் வினைமுற்று ஒருமை, பன்மையென இருவகைப்படும்.

**ஏவல் ஒருமை**

[உ-ம்.]
1. நீ படி
2. நீ படிப்பாய்
3. நீ செல்லுதி

ஏவல் ஒருமை வினைமுற்றில் பகுதியளவாகவும், ஆய், இ என்ற விகுதிகள் பெற்றுவரும்.

**ஏவல் பன்மை**

1. நீங்கள் செய்ம்மின்
2. நீங்கள் உண்பீர்

ஏவல் பன்மை வினைமுற்றில் மின், ஈர் என்ற விகுதிகள் பெற்றுவரும்.

## பயிற்சி

1. ஏவல் ஒருமை வினைமுற்றில் நான்கு, ஏவல் பன்மை வினைமுற்றில் நான்கு உதாரணங்கள் தருக.
2. நீங்கள் கொடுக்கும் உதாரணங்களில் வரும் விகுதிகளைத் தனியே எடுத்து எழுதுக.

# 11. மானமே பெரிது

1. 'வேழமுடைத்து மலைநாடு' என்று ஔவையாரால் சிறப்பிக்கப் பெற்றதும், **'வானவர்'** என்னும் பெயர் கொண்ட சேர அரசரால் ஆளப்பட்டதுமான நாடு சேர வளநாடு. இந்நாட்டையாண்ட அரசருள் **சேரமான் கணைக்காலிரும்பொறை** என்பான், அறிவு நூல்களில் அளவற்ற ஆர்வமுடையவன்; புலவரைப் போற்றும் புகழுறு வள்ளல். அவன் காலத்து **பொய்கையார்** என்னும் புலவர் பெருமான், பாக்கள் புனைந்து, தமிழ் மக்கட்குக் களிப்பூட்டி வந்தனர். கணைக்காலிரும்பொறை சேரநாட்டை ஆண்டுகொண்டிருக்கையில், **சோழன் செங்கணான்** என்பான் சோழ நாட்டை ஆண்டு வந்தான்.

2. சோணாட்டில் **'உறந்தை'** என்னும் பதியில் அரசாட்சி செய்து வந்த செங்கணான், உலக அறிவுக்குரிய கலைகள் யாவும் பயின்று, மேம்பட்டு விளங்கினான்; அவற்றுடன், உண்மையறிவூட்டும் அறிவு நூலும் கற்க விரும்பிப் பொய்கையாரைத் தனக்கு அறிவு நூல் புகட்டும்படி வேண்டினான். அறிவு நூல் கற்றற்குச் செங்கணான் அருகனல்லன் என்று நினைத்து, புலவர் அவனுக்குக் கல்வி கற்பிக்க மறுத்துவிட்டார்.

3. சோழன் செங்கணானுக்கும், சேரமான் கணைக்காலிரும்பொறைக்கும் யாது காரணம்பற்றியோ பகையும் போரும் மூண்டன. **கழுமலம்** என்னும் ஊரில் போர் நிகழ்ந்தது. அப்போரில் சோழனே வெற்றிக்குரிய வாகை சூடினான். தோல்வியுற்ற கணைக்காலிரும்பொறையையும், அவனுடனிருந்த **பொய்கை**

யார் என்னும் புலவரையும் சோழவரசன் தன் நாட்டுக்குக் கொண்டுபோய்ச் சிறைக்கூடத்தில் அடைத்து வைத்தான்.

4. பொய்கையாரிடமிருந்து மெய்யறிவு பெற விரும்பிய சோழன், பொய்கையாரை அணுகி, அவருடன் வார்த்தையாடி, அவருடைய உயர்ந்த மனநிலையையறிந்து மகிழ்ச்சி கொண்டான்; சிறைக்கோட்டத்திலிருந்த போதும் எப்பொழுதும் மகிழ்ச்சியுடனிருந்த அவரது இன்ப உள்ளத்தையறிந்து பெரிதும் வியப்பு அடைந்தான். பொய்கையாரை வணங்கிச் சிறைச்சாலையினின்று விடுதலை செய்தான். பொய்கையாரும் செங்கணன் மீது **'களவழி நாற்பது'** என்னும் ஒரு நூல் பாடிப் போர்க்களத்தின் தோற்றத்தையும், சோழனது வெற்றியையும் பாராட்டினர். பின்பு பொய்கையார், சேரமானையும், சோழன் செங்கணனையும் நட்பாளராக்க விழைந்தார்.

5. அவர் அச்சமயத்தை நழுவவிடலாகாதென்று கருதி, சேரமான் கணைக்காலிரும்பொறையையும் விடுதலை செய்யும்படிக் கேட்டார். சோழவரசன், பொய்கையாரின் வேண்டுகோட்கிணங்கிச் சேரனை சிறையினின்று விடுதலை செய்யும்படி ஓலையெழுதி. அரச முத்திரையிட்டுப் புலவர் கையில் கொடுத்தனுப்பினன்.

6. சிறைக்கோட்டத்திலிருந்த சேரமான் மனவமைதி அற்றவனாய், ஓரின்பமுங் காணாதவனாய், உணவு ஒழித்து, ஓயாத் துன்பத்துள் மூழ்கினன்; தனக்கு நேர்ந்துவிட்ட அவமானத்தை நினைத்துப் புழுங்கினன். சேரவள நாட்டிற் செங்கோல் செலுத்திச் சிம்மாசனத்

தமர்ந்திருந்து, மக்கள் குறையை மாற்றி மாண்புறும் அரசனாய் விளங்கிய அவன், நாயைப் பிணிப்பதுபோலச் சங்கிலியால் பிணிக்கப் பெற்றுக்கிடக்க நேரிட்ட விதியை நினைந்து, தன்னையே வெறுத்தான். உரிய உணவும் உறக்கமும் அற்ற அவனுக்கு நீர்வேட்கை அதிகமாயிற்று. அவன் சிறைக் காவலரைப் பருகும் நீர் தரும்படிக் கேட்டான். கொடுமையுள்ளம் கொண்டவரும், அசட்டை மனப்பான்மை கொண்டவருமான காவலர், அவனை அவமதித்தனர். நெடுநேரத்திற்குப் பின், அவருள் ஒருவன், ஒரு கலயத்திற் சிறிது நீர் கொண்டுவந்து நீட்டினன். சேரமான் அதைக் கைக்கொண்டிலன். காவலன் அவனைப் பலவாறு இகழ்ந்து பேசிவிட்டு, அவ்விடம் விட்டகன்றனன். அரசன் மனத்தில் பற்பல எண்ணங்கள் தோன்றின: 'நானும் ஓர் அரசன். அரசர் குலத்திற்கு அணியாய் விளங்குவது மானமே. மானமில்லா அரசனுக்கு உலகில் விளக்கமேது? அவன் உலகிலிருந்து பெறும் பயன் யாது? அவன் உலகைவிட்டுச் சென்றால் வரும் குறை யாது? ஆகையால், மானமே உயிரினும் பெரியது; உலகிலுள்ள எல்லாவற்றினும் மானமே சிறந்தது'' என்று எண்ணிக் கொண்டான்; காவலன் கொண்டுவந்த நீரைப்பருகாது, அவ்விடத்திலேயே உயிர் துறந்தான். அவல வுள்ளத்துடனிருந்த சேரன் உயிர் துறந்த செய்தியைச் சோழனிடம் கூறக் காவலர் விரைந்து சென்றனர்.

7. சேரனைச் சிறை மீட்கும்படி அரசனாணை கொண்ட ஓலையுடன் சிறைச்சாலைக்குச்சென்ற பொய்கையார், இறந்துகிடந்த சேரனைக்கண்டு மனம் பதைத்தார்; கீழே விழுந்து அலறினார்; அவனுடலைத் தழுவி, அன்பு

மழையைக் கண்களிலிருந்து சிந்தினர். "ஐயோ! மன்னா, என்னையும் துறந்து எங்கு சென்றாயோ!" என்ற அவல மொழிகளைக் கூறினர்; பின்பு ஒருவாறு தெளிந்தார்.




அரசன் உடையில் பனையேடு ஒன்று காணப்பட்டது. சோழனும் அங்கு வந்தான்; சேரன் இறந்து பட்ட நிலையை அறிந்தான்; ஓலையை எடுத்துப் படித்தான். அதில் பின்வரும் பாடல் எழுதியிருந்தது:

"குழவி யிறப்பினும் ஊன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்;
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்

தாமிரந் துண்ணு மளவை
ஈன்ம ரோவிவ் வுலகத் தானே''

'அரச குலத்தில், ஒரு குழந்தை இறந்தே பிறந்தாலும், உருவற்ற பிண்டமாய்ப் பிறந்தாலும், அஃது ஆளல்லாத உருவமென்று கொள்ளமாட்டார்; அக்குழந்தை வீரசுவர்க்கமடைய வேண்டுமென்று, வாட்படையால் அதை வெட்டித் தருப்பையில் கிடத்துவர். அப்படியிருக்க, அரசனொருவன் நாய் கட்டப்பட்டது போலச் சங்கிலியால் சிறையில் கட்டப்பட்டதுமல்லாமல், ஏவலரால் இகழப்பெற்று, அவர் தந்த தண்ணீரைப் பெற்று, மனவலியின்றி, அத்தண்ணீரைப் பருகி உயிர் வைத்திருப்பனோ?' என்பது இச்செய்யுளின் பெயர்.

8. இப்பாடலையெழுதிய அரசன் மனத்தில் மானமே பெரிதாய்நின்று வெற்றி பெற்றது. திருக்குறள் ஆசிரியர் கூறிய

'மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்'

என்னும் உரை அவனுக்கே சாலவும் பொருந்தும்!

9. சேரமான் கணைக்காலிரும்பொறை, மானத்தைச் சிறப்பித்துப் பாடிய இப்பாடல், கடைச்சங்க காலநூற்றொகுதியுள் எட்டுத்தொகையில் ஒன்றாகிய புறநானூறு என்னும் நூலில் காணப்படுகிறது. இந்நூல் தமிழ் நாட்டில் முன்காலத்திலிருந்த அரசர், புலவர், வீரர், வள்ளல்கள் முதலியவருடைய வரலாறுகளையும், அவர் தம் சீரிய செயல்களையும் எடுத்துக் கூறுவது; பண்டைத் தமிழ் நாட்டின் சரித்திரத்தை அறிதற்குச் சிறந்ததொரு திறவுகோலாய் அமைந்துள்ளது.

## குறிப்புரை

வேழம் - யானை, வானவர் - சேர அரசர், களிப்பு - மகிழ்ச்சி, உறந்தை - உறையூர், பதி - ஊர், அருகன் - தகுதியுடையவன், விழைந்தனர் - விரும்பினர், புழுங்கினன் - வருத்தப்பட்டான், விதி - ஊழ் வினை, அவலம் - துயரம், ஊன் - மாமிசம், தடி - ஊன் துண்டம்; ஞமலி - நாய், இடர் - துன்பம், இரீய - வைத்த, கேளல், கேளிர் - பகைவர், வேளான் சிறுபதம் - உபகாரமான தண்ணீர், மதுகை - மனவலிமை, தணிய - அடங்க, அளவை - அளவினை யுடையாரை, ஈன்மரோ - பெற்றெடுப்பரோ, நீப்பின் - நீங்கினால், சால - மிகவும்.

## வினாக்கள்

1. பொய்கையார் இயற்றிய நூலைப்பற்றி நீங்கள் அறிந்துகொண்டது யாது ?
2. 'குழவியிறப்பினும்' என்னும் பாடலுக்கு உமது சொந்த வார்த்தைகளால் பொருள் எழுதுக.
3. பொய்கையார் சிறந்த குணத்தைக் குறிப்பிடுக.
4. ''மானமே பெரிது'', எதைவிட மானம் பெரிது? இதற்கு ஒரு திருக்குறள் எழுதுக.
5. 'நானும் ஓர் அரசன்' இடம் கூறி விளக்கி வரைக.

## இலக்கணம்

1. சேரன் **வாழ்க**
2. சோழன் **வாழிய**
3. பாண்டியன் **வாழியர்**

} இவை மூன்றும் **வியங்கோள் வினை முற்றுக்கள்;** இவைமுறையே க, ய, ர் என்னும் மூன்று விகுதிகளையும் பெற்று வந்துள்ளன.

**வியங்கோள் வினைவிற்றுக்கள்,** இருதிணை ஐம்பால் மூவிடங்களிலும் வரும்: கீழ்க்காணும் **உதாரணங்களைக்** காண்க,

1. அவன் வாழ்க
2. அவள் வாழ்க
3. அவர் வாழ்க
4. அது வாழ்க
5. அவை வாழ்க

} படர்க்கை

1. நான் வாழ்க } தன்மை
2. நாம் வாழ்க

1. நீ அருள் புரிக } முன்னிலை
2. நீங்கள் நீடுவாழ்க

## பயிற்சி

1. வியங்கோள் வினைமுற்றுக்கள் பெற்றுவரும் விகுதிகள் மூன்றிற்கும் நீங்கள் வேறு உதாரணம் வரைக.

2. இரண்டு திணையிலும் வியங்கோள்வரும் என்பதற்கு இரண்டிரண்டு உதாரணங்கள் தருக.

# 12. விஞ்ஞானவுலகம்

1. மக்கள் நலத்துக்காக உள்ள துணைகளுள் விஞ்ஞானமும் ஒன்றாகும். உழுது பயிரிட்டு, நூல் நூற்று ஆடை நெய்து உடுத்து, மரத்தடியிலே குடிசை கட்டி, அடக்கமாக மக்கள் வாழ்ந்த காலம் மறைந்து விட்டது. இப்பொழுது கிராம வாழ்வில் உள்ள மனிதனும் உலக அறிவு மிக்கவனாய் இருக்கிறான். நம் பெற்றோர் பெற்றிருந்த உலகவறிவைச்காட்டிலும் நமக்குள்ள உலகவறிவு அதிகமே. நம் பிள்ளைகள் நமக்கு மேல் அறிவுள்ளவராய் இருப்பது உண்மையில் எதிர் பார்க்கத்தக்கதே. அறிவு இன்று பல வழியாலும் வளர்ந்து பாய்ந்து பாய்ந்து மேற்செல்லுகிறது. அறிவின் ஒரு பகுதியே விஞ்ஞான அநுபவம் ஆகும். அஃது ஒரு பெரிய உலகமாய் இருக்கிறது. அங்கு எத்தனையோ புதுமைகள் உண்டு. அவற்றுள் இரண்டொன்றேனும் நாம் நன்கு அறியாது காலம் கழிக்க இயலாது.

2. முதலில் வேளாண்மையை எடுத்துக் கொள்வோம்: ஒரு கலம் நெல் விளைந்த நிலத்தில் இப்பொழுது நான்கு கலம் விளைவதே நலம் என்று நமக்குத் தோன்றுகிறது. ஒரு வீசை சர்க்கரை கொடுத்த கரும்பு நான்கு வீசை கொடுக்க வேண்டும் என்று நாம் நினைக்கிறோம். இதற்கு உதவி செய்வது எது? விஞ்ஞானமே என்பதிற் சிறிதும் ஐயம் இல்லை. நிலத்தின் வளத்தை மிகுக்கத் தக்க உரம் இன்னது என்பதை உணர இயற்கையறிவு போதுமா? 'எவ்விதமான உரத்தை இட்டால் என்ன பலன் விளையும்? எப்பயிருக்கு என்ன உரம் இருத்தல் நலம்?' என்பவற்றைப் பழைய ஏடுகளைப் புரட்டி அறிய

முடியுமா? 'இவற்றைப் பற்றிய ஆராய்ச்சிகளை அயல் நாட்டார் எப்படிச் செய்தார்? என்ன பலன் பெற்றார்? அவர் கைக்கொண்டமுறை நம் நாட்டு நிலத்தின் நிலைமைக்குத் தகுமா?' என்பவற்றை நாம் புதிய ஏடுகளைப் புரட்டியே அறிய வேண்டும். அவை விஞ்ஞானிகளின் அநுபவத்தால் உலகுக்கு வந்த புதிய ஏடுகளே என்பதை நாம் மறுக்க இயலாது.

3. 'மழை உரிய காலத்தில் பெய்யவில்லை; வெள் ளம் அதிகமாய் வந்து, வயல் எல்லாம் பாழாயிற்று; விட்டில் முதலிய பூச்சிகள் புகுந்து பயிரை அழித்தன' என்று அடிக்கடி கேட்கும் நாம், இவற்றுக்குப் பரிகாரம் செய்ய விஞ்ஞானம் உற்ற துணையாம் என்பதை மறந்து விடுகிறோம். வானத்தில் செயற்கை மழையை வருவிக் கும் சக்தி விஞ்ஞானத்துக்கு உண்டு என்றால், கிராம வாசி எளிதில் நம்பமாட்டான். உண்மையில் அது நிகழக்கூடிய செயலே என்பதை அமெரிக்காவிற்குப் போய் நாம் கற்றுக்கொண்டு வரவேண்டும். தண்ணீர் வீணே பெருகும் பேராறுகளை அடக்கி, எல்லைக்குட் படுத்தினால், அங்கு மின்சாரம் வளர இடம் உண்டா கிறது. மேட்டூர் போன்ற இடங்களில் புதிய தொழில் கள் பல செய்ய வழி பிறக்கிறது. இப்படியே ஒவ் வொன்றாக நாம் ஆராய்ந்து கொண்டுபோனால், எத்தனை மக்கள் வாழ்வுக்கு வழி தேடலாம் என்பதை அறிவோம்.

4. விஞ்ஞானத்தின் உதவியால் இந்நாளில் புதிய நெய் வகைகள் பல தோன்றுகின்றன. அவைகள் எல் லாம் நெய் போலிகளே என்பதை நாம் அறிவோம். பாலுக்குப் போலி விஞ்ஞானத்தாற் கிடைக்கிறது. சோயா மொச்சையால் போலிப் பால் செய்யலாம்

என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். நீராவியின் உதவியால் எத்தனை இயந்திரங்கள் இயங்குகின்றன! மண்ணுள் இருந்துவரும் பெற்ரேல் (Petrol) எத்தனை வண்டிகளை இயக்குகிறது! நிலத்திலும் கடலிலும் ஓடும் ஊர்திகள் ஒருபுறம் இருக்க, வானத்தில் எத்தனை விமானங்கள் அரும் பெரும் பணிகள் செய்யத்தக்கனவாய் இருக்கின்றன!

5. காசுமிர நாட்டில் மக்கள் கலங்கியபோது நம் நாட்டுப் படைகள் வேண்டிய ஆயுதக் குவியல்களோடு விமான வழியாகவே அங்குபோய் இறங்கியது நமக்குத்



தெரியும். ஜெர்மனி நாட்டின் ஒரு பகுதியில் போக்கு வரவுக்கு இடையூறு உண்டானபோது இங்கிலாந்திலிருந்து விமானங்கள் உணவு கொண்டுபோய்க் கொடுத்து, அங்குள்ள மக்களைக் காத்த செய்தியை நாம் அறிவோம். ஆகாயப் பிரயாணத்திலே மனிதன் இத்தனை காரியங்களை எளிதிலே இயற்ற வல்லவனாய் இருப்பதற்குக் காரணம், விஞ்ஞானத்தின் உதவிதானே? இம்மட்டோ? ஒலியினும் விரைவாக ஓடும் விமானம்

ஒன்று ஏற்பட்டிருக்கிறது. ஒரு விநாடிக்கு ஒலி இவ்வளவு தூரம் செல்லும் என்பதைக் கணக்கிட்டிருக்கிறார்கள். வாயு வேகத்திலும் விஞ்சிய வேகம் இதுவே. இன்று இவ்வேகத்தை வெல்ல விமானம் உண்டு.

6. நாம் இப்பொழுது கடல் நடுவிலிருந்து நாட்டில் இருப்பவரோடு பேசலாம். வானத்திலிருந்து நிலத்திலிருப்பவர்க்குச் செய்தி அனுப்பலாம். 'வானத்தில் இன்ன திசையில் நான் ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டேன்' என்று ஒரு விமானி செய்தி அனுப்பினால், அவனைக் காக்க, அடுத்த கணமே பல விமானங்கள்




பறந்து ஓட இயலும். 'ரேடியோ' என்பது உலகம் முழுவதையும் ஒரு சிறு வளைவுக்குள் அடக்கிவிட்டது. உலகத்தில் எந்த மூலையில் இருந்து பேசும் பேச்சையும் நம் ஊரில் இருந்து நாம் கேட்கக்கூடும். அதற்குரிய கருவிகளை அமைத்துக்கொள்வது இன்று எளிதாகவே தோன்றுகிறது.

7. வைத்தியத் துறையிலே எத்தனை புதுமைகள் புறப்பட்டுள்ளன! உடம்பின் பகுதிகளை எடுத்து வேறு பகுதி வைக்க வழியுண்டாயிருக்கிறது. இரத்தம் செலுத்தி வலிமையைக் கொடுக்கும் வழியும் உண்டாயிருக்கிறது. மண்டையோட்டை வேறாய் எடுத்து, அதனுள் சோதனை செய்து, சிகிச்சை செய்யும் வழியும் தோன்றியுள்ளது. வயிற்றுக்குள் இருக்கும் குறைகளை அறுத்துக் குணப்படுத்தும் வழி தோன்றியுள்ளது. உடம்பினுள் இன்ன குற்றம் உண்டு என்பது காண **'எக்ஸ் ரே'** என்னும் விஞ்ஞான உதவி இருக்கிறது. **'ரேடியம்'** என்னும் ஒளிப்பொருள் மிக்க விலை பெற்றதாயினும், எத்தனையோ கொடிய வியாதிகளுக்குத் தக்க பரிகாரம் செய்ய வல்லதாய் உள்ளது. கண்ணின் சதைகளை எடுத்து நன்கு குணம் செய்யும் முறையும் வந்துள்ளது.

8. நோய்ப் புழுக்களை ஆகாய விமான வழியே பகை நாடுகளிற் பரப்பும் வழியும் இன்று தோன்றி யுள்ளது. அணுவைப் பிளந்து செய்த ஆராய்ச்சியின் பயனாகப் பல்லாயிர மக்களை ஒரு நொடியில் அழிக்க வல்ல கொடிய கருவி ஒன்று மனிதன் கையில் அகப்பட்டிருக்கிறது. அணுச்சக்தியை ஈண்டுப் பயன்படுத்தி மக்கள் வாழ்வுக்கு நலங்கள் பல புரியலாம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

9. எத்தனையோ வழிகளில் மனிதன் அறிவை நுட்பமாக்கி உலகத்துக்கு நலம் புரிய உதவுகின்ற விஞ்ஞானமே எண்ணிறந்த தீங்குகளுக்கும் இடமாய் இருக்கிறது. நெருப்பு நம்மைச் சுட்டுவிடுமே என்று அதன் உதவியால் உணவு ஆக்காமல் இருக்க முடியுமா?

கடல் அலை நம்மை விழுங்கிவிடுமே என்று கடலில் இறங்காமலே காலம் தள்ள முடியுமா? ஆபத்து எங்கும் உண்டு. அவற்றை எதிர்த்து வெல்ல வழியுண்டாக்கு வதும் விஞ்ஞானமே.

10. விஞ்ஞான சக்தி மனித இனத்தை ஆளும் தலைவனாகாதிருப்பது உலகத்துக்கு நலமாம். மனிதன் வசப்பட்டு அவன் விரும்பும் நலங்களை இயற்றிவரும் வரையில், விஞ்ஞானம் நல்ல அடிமையே. அடிமை யைத் தலைவனுக்குவதுதான் நமக்கு விபத்து விளைப்பது என்பதை நாம் உணர்ந்து, இந்த அருந்துணை கொண்டு உலக வாழ்வில் நாம் எவ்வளவு நலங்களை அடையக் கூடுமோ அவ்வளவு நலங்களையெல்லாம் அடைய முயல்வோமாக.

### குறிப்புரை

வேளாண்மை – உழவுத்தொழில், ஐயம் - சந்தேகம், உரம் – எரு, புரட்டி - திருப்பித் தள்ளி, பரிகாரம் – சிகிச்சை, சக்தி – ஆற்றல், போலிகள் – உண்மையல்லாதவை, ஊர்தி – வாகனம், குவியல் – கூட்டம், இம்மட்டோ – இவ்வளவோ, விஞ்சிய – அதிகமான, இயலும் – முடியும், புரியலாம் – செய்யலாம். விபத்து–ஆபத்து, அருந் துணை – அரிய உதவி, முயல்வோமாக – முயற்சி எடுப்போமாக.

### வினுக்கள்

1. இப்பொழுது நடக்கும் காலத்துக்கு என்ன பெயர் தரலாம்?
2. வேளாண்மையில் விஞ்ஞானம் எப்படி உதவும்?
3. ஆற்று வெள்ளத்திலிருந்து விளக்கேற்றுவது எப்படி?
4. ஆகாய விமானங்கள் சமீபத்தில் இயற்றிய நலங்கள் எவை?
5. வைத்தியத்தில் விஞ்ஞானம் எப்படிப் பயன்படுகிறது?
6. பிறர்க்குத் தீங்கு செய்ய விஞ்ஞானம் எப்படி உதவும்?

### இலக்கணம்

தானே தனித்து வராமல் பெயர்ச்சொல்லோடும் வினைச்சொல் லோடும் சேர்ந்து வரும் சொற்கள் **இடைச்சொற்கள்** எனப்படும்.

1. தமிழன் தமிழ் **படித்தே** ஆகவேண்டும்.

2. கந்தா, நீ கையில் வைத்திருப்பது திருக்குறளோ? நன்னூலோ?

3. காந்தியும் நேருவும் நாட்டுப் பற்றுடையவர்கள்.

முதல் வாக்கியத்தில் 'ஏ' என்ற இடைச்சொல் **படித்தே** என்ற வினைச்சொல்லோடு சேர்ந்து வந்தது.

இரண்டாம் வாக்கியத்தில் 'ஓ' என்ற இடைச்சொல் திருக்குறளோ? நன்னூலோ? என்று பெயர்ச்சொற்களோடு சேர்ந்து வந்தன.

மூன்றும் வாக்கியத்தில் 'உம்' என்ற இடைச்சொல் காந்தியும், நேருவும் என்று பெயர்ச்சொற்களோடு சேர்ந்து வந்தன. இவை வேறு பொருள்களிலும் வரும்.

### பயிற்சி

மேற்கண்ட மூன்று இடைச்சொற்களையும் வைத்து மூன்று வேறு தனித்தனி வாக்கியங்கள் எழுதிக் காட்டுக.

# 13. நாட்டுக்கு உழைத்த நல்லார்

1. சுதந்திர இந்திய நாட்டில் இன்று நாம் வாழ்கின்றோம். இந்த வாழ்வு நமக்கு வாய்த்தது எவர் முயற்சியால் என்பதை நாம் அறியவேண்டும். இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக அயல் ஆட்சியில் அடங்கியிருந்த நம்மை, இந்த இன்பநிலைக்குத் தகுதியுள்ள மக்கள் என்று உலகம் மதிக்கும்படிச் செய்த பெரியார் உதவியை நாம் மறக்கக் கூடாது. அவர் செய்த நன்றியை நினைத்து, ஒவ்வொரு நாளும் அவர் காட்டிய நெறியைப் பின்பற்றி, நாம் வாழ வேண்டும்.

2. இந்திய சுதந்திரத்தின் தந்தையார் என்று மதிக்கத்தக்க பெருமையுள்ளவர் **காந்தியடிகள்.** இவர் **கத்தியவார்** நாட்டில் **ராஜகோட்டு** என்னும் ஊரிற் குசராத்தியர் மரபிற் பிறந்தவர். **மோகனதாஸ் கரம் சந்து காந்தி** என்ற பெயர் பூண்ட இப்பெரியாரை இன்று அறியாத நாடு உலகில் இல்லை; இவர் பெயர் கேளாத மக்களும் இல்லை. நம் நாட்டில் உள்ள பல கோடி மக்களும் இவரை அறிவார்கள் என்று கூறுவது மிகையாது. அரசியல் துறையிலுழைக்கப் புகுந்த பெரியாருள் இவரைப்போல நாடெங்கும் அன்பு வெள் ளம் பரப்பிய புண்ணியர் வேறு எவரும் இலர். தெய்வ வுணர்ச்சி மிக்க இவர் மனம், சொல், செயல் என்ற மூன்றும் ஒற்றுமைப்பட வாழ்ந்த வாழ்வு உலகம் அறிந்ததொன்றும். இன்றளவும் எவரும் நினையாத வழியில் வலிமிக்க வல்லரசை எதிர்த்து நின்று போராடி, இன்று நாம் காணும் சுதந்திரத்தைப் பெற்றளித்த பெரியார் இவரே. மக்களுக்குள் மனவேற்றுமை

சிறிதும் இருத்தல் கூடாது என்று கருதி, இவர் எத்தனையோ முறை உயிர் இழக்கும்வரை பட்டினி கிடக்கவும் துணிந்தார். டில்லிமாநகரில் எல்லா மக்களும் கேட்கத் தெய்வவுண்மை விளக்க இவர் வந்த இடத்தே ஒருவன் இவரைக் கொன்றுவிட்டான். உடல் மறைந்தது என்றாலும், இவர் விதைத்த அன்புவிதை நம் நாட்டை விட்டு மறையாது; மறையலாகாது; மறைய விடக்கூடாது.

**3. வித்தல்பாய் பட்டேல், வல்லபபாய் பட்டேல்** என்னும் சகோதரர் இருவரும் குசராத்து நாட்டுக்கு உரியவரே. இவ்விருவரும் இங்கிலாந்தில் சட்டக்கல்வி பயின்று பாரிஸ்டர் பட்டம் பெற்றவர். உழைப்பில் இருவரும் இணையானவர். பம்பாய் நகரத்தில் நெடுங் காலம் நியாயவாதத் தொழில் நடத்திய வித்தல்பாய் பட்டேல், காங்கிரஸ் கட்சி நோக்கங்களை அறிந்து, அதன் பெருமக்களுள் ஒருவராய்ச் சேர்ந்து பல்லாண்டு உழைத்தார்; இந்திய சட்ட சபையில் தலைவராய் இருந்து எல்லா வகுப்பினரும் எல்லாக் கட்சியாரும் ஒருமுகமாகக் கொண்டாடும்படி அச்சபையை நடத்திய முறை நம் நாட்டுச் சரித்திரத்தில் நிலைபெறத்தக்க செயலாம். காங்கிரஸ் கருதிய வண்ணம் அவர் பதவியைத் துறந்து சிறை புகுந்து உடல் நலிந்து இறந்தார். இன்று நாம் பெற்ற பேற்றுக்கு அடிகோலி வைத்தவருள் அவர் ஒருவராவர். அவருடன் பிறந்த வல்லபபாய் பட்டேல் நம் இந்திய அரசியலில் பொறுப்பான பதவி வகித்தார். கிராம மக்களோடு நெருங்கிப்பழகி அவர்களுக்கு இருந்த குறைகளைப் போக்குவதிற் பல்லாண்டு ஈடுபட்ட அவர், ஐந்நூற்றுக்கு மேற்பட்ட



காந்தி



இரவிந்திரநாத தாகூர்



கோபால கிருஷ்ண கோகலே



மாளவியா

இந்திய சமஸ்தானங்களை வெகு குறுகியகால எல்லைக்குள் அடக்கி நம் நாட்டில் அரசியலோடு இணங்கும்படி செய்த புதுமையை நாம் என்றும் மறக்க இயலாது. காந்தியடிகளுக்கு அவர் வலக்கரம் என்பது உண்மை.

4 காங்கிரஸ் மகாசபை தோன்றிய காலம் முதலே அதிற்சேர்ந்து நம் நாட்டின் விடுதலைக்கு உழைத்த பெருமை **தாதாபாய் நௌரோஜி** என்ற பெரியார்க்கு உண்டு. அவர் பம்பாய் நகரில் நெடுங்காலம் வாழ்ந்தவர். பார்சி வகுப்பிற் சேர்ந்தவர்; இங்கிலாந்து சென்று அங்குள்ள பார்லிமெண்டு சபையில் இந்தியப் பிரதிநிதியாக இரண்டு முறை நின்று போராடி வந்தவர். சுயராஜ்யம் என்ற முழக்கத்தை இந்நாட்டில் முதல் முதல் எழுப்பிய பெரியார் அவரே. ஆங்கில ஆட்சியால் நம் நாட்டிற் பெருகிய வறுமையைப் பற்றி அவர் ஒரு சிறு நூலில் விளக்கியிருக்கிறார். காங்கிரஸ் தலைமை தாங்கி, அவர்பேசிய பேச்சுக்கள் மிக்க சுவையுள்ளவை.

5. பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த புனா நகரத்தில் நெடுங்காலம் வாழ்ந்து, நாட்டுப் பணி புரிந்த **பால கங்காதர திலகர்** என்ற பெரியார் பெருமை, நாம் நன்கு அறியத்தக்கதாம். அவர் ஆங்கில மொழியிற் சிறந்த பயிற்சி பெற்றவர்; சட்டக் கலையிலும் அழுத்தமான தேர்ச்சி பெற்றவர்; தமது மொழியான மகாராட்டிர மொழியிலே நல்ல பேச்சுத் திறமையும், எழுத்துத் திறமையும் படைத்தவர்; வடமொழிக் கல்வியின் கரை கண்டவர்; அரசியல் துறையில் என்றும் தீவிர வாதிப்படை முன்னணியிலே தலைமை பூண்ட பெரியார்; சில காலம் ஆங்கிலக் கலாசாலை ஆசிரியராய் இருந்து, பிறகு அதை விட்டு அரசியற் பணியில் இறங்கினார். செய்யாத

136188



வ. உ. சிதம்பரம் பிள்ளை



சித்தரஞ்சன தாசர்



இராஜகோபாலாச்சாரியார்



சத்தியமூர்த்தி

குற்றத்துக்காக நெடுநாள் விசாரிக்கப்பட்டு, கடுஞ்சிறை புக நேர்ந்தபோது, அவர் பேசிய நியாயவாதப் பேச்சு இன்றும் பயின்று இன்புறத்தக்கதாகும். ஆங்கில மொழியில் வேதங்களின் வாழ்விடம் **ஆர்ட்டிக்குக் கடல் நிலம்** என்ற கருத்து விளங்க ஒரு பெரிய ஆராய்ச்சி நூல் எழுதியிருக்கிறார்; கிழக்கின் பெருமை விளங்க மற்றொரு நூலும் எழுதியுள்ளார். '**கீதா ரகசியம்**' என்று சிறை வாழ்வின்போது அவர் எழுதிய பேருரை இன்று உலகம் மதிக்கும் பெருநூலாய் விளங்குகிறது. அவர் 'சுயராஜ்யம் எனது பிறப்புரிமை' என்று கூறி உயிர் விட்டார். இன்று நாம் பெற்ற பேறு அவர் தவத்தின் விளைவேயாகும்.

6. **கோபால கிருஷ்ண கோகலே** என்ற பெரியாரும் **புனா** நகரத்தில் வாழ்ந்தவரே. அவர் மிதவாதக் கொள்கையை ஆதரித்தவர்; ஆசிரியராகவே குறித்த காலம் வரையிற் குறைந்த ஊதியத்துக்கு உழைத்துப் புகழ் பூண்டவர்; ஆங்கிலம், கணிதம், சரித்திரம், பொருள் நூல் முதலிய எல்லாப் பாடங்களையும் ஒரே தன்மையாக மாணவர் உளம் கொள்ளப் போதிக்கும் திறமையுள்ளவர்; மிகவும் இளம் பருவத்திலிருந்து பம்பாய் சட்டசபையில் நாட்டு மக்களுக்காக உழைத்தவர்; பின்பு இந்திய சட்டசபையில் பல்லாண்டு நின்று, பணி இயற்றியிருக்கிறார். அங்கு அவர் பேசிய பேச்சுக்கள் அரசியல் அறிவும், பொருள்நூல் நுட்பமும், சரித்திரத் திட்பமும், நாட்டுப் பற்றும்கொண்டு விளங்குவதை நாம் இன்றும் அவற்றைப் படித்து அறியலாம். அவர் தென்னாப்பிரிக்காவிலே இந்தியர் அல்லற்படுவது கேட்டு, அதனை ஒழிக்கும் பொருட்டு, இந்தியப் பிரதிநிதியாய் அங்கு சென்று ஆவனசெய்து வந்தார். அப்பொழுது

காந்தியடிகள் அவரைத் தமது அரசியல் குரு என்றே ஏற்றுக் கொண்டார். இந்தியக் கைத்தொழில் வளர்ச்சிக் குரிய துறைகளிலும், ஆசாரச் சீர்திருத்தத்துறையிலும் அவர் நன்ருக உழைத்தார். இங்கிலாந்துக்கு இரண்டு மூன்றுமுறை போய், இந்தியர் வாழ்வைச் சீர்படுத்த முயன்ருர். அவர் தாபித்த '**இந்திய சேவக சங்கம்**' இன்று நன்ருக நாட்டுப் பணி புரிந்து வருகிறது.

7. காசுமீர நாட்டிலிருந்து இந்தியாவந்து புகுந்த பண்டிதர் குடிகள் சில உண்டு. **மாளவியா** குடும்பம் அவற்றுள் மிகவும் சிறந்த ஒன்ருகும். இக்குடும்பத்தின் தலைவராய் இருந்த **பண்டித மதன்மோகன மாளவியா** என்ற மாபெருங் கிழவர் காங்கிரஸ் தோன்றிய காலத்தில் இளங்காளையாய் அச்சபையிலே சேர்ந்து, உடலில் உயிர் இருந்தவரையில் கருத்து மாறுபட்டு, அதைவிட்டு விலகாமல் நின்ற பெருமையுள்ளவர். அகன்ற சட்ட அறிவும், அழுத்தமான அரசியலறிவும், பரந்த உலக அறிவும் படைத்த அப்பெரியார் நம் நாடு சுதந்திரம் பெறுவதைப் பார்க்க வேண்டும் என்றே இளைத்த உடலில் உயிர் வைத்திருந்தார்; சுதந்திர உதயம் வரும் நாளை எண்ணிக்கொண்டேயிருந்தார். இந்தியா விடுதலை அடையுமுன், அவர் பேரின்ப வாழ்வு பெற்ருர். சட்டசபைகளிலும் காங்கிரஸ் மாபெருங் கூட்டங்களிலும் எந்தப் பொருளைப்பற்றியும் எழுத்தும் குறிப்பும் இல்லாமலே பேசி, எதிராளிகள் மனத்தைக் கவரும் திறம்படைத்த அப்பெரியாரை நாம் என்றும் மறக்க முடியாது. அவர் செய்த அரசியற் பணியை நாம் மறந்தாலும், காசியில் அவர் நிறுவியிருக்கும் '**விசுவ வித்தியாலயம்**' என்னும் பல்கலைக்கழகம் அவர் பெருமையை என்றும் நினைப்பூட்

டும். ஒரு பெருங்காரியத்தின்பொருட்டு அவர் கையேந்திப் புறப்பட்டால், கோடிக் கணக்கில் பணம் வந்து குவியும் என்பதை அவ்வித்தியாலயமே விளக்குகின்றது. காந்தியடிகள் அவரை **'யாசக சக்கரவர்த்தி'** என்று புகழ்வது உண்டு. பண்டிதர் வகுப்பில் நேரு குடும்பமும் ஒன்று ஆகும். அக்குடும்பம் தேசத்துக்கு இயற்றிய சேவையைப்பற்றி முன்னொரு பாடத்திற் படித்தோம்.

8. வங்க நாட்டிலே தேசீய உணர்ச்சி அதிகம் உண்டு. பெரும் புலவரான **பங்கிம் சந்திர சட்டோபாத்தியாயர்** வந்தே மாதர கீதம் பாடி, **ஆனந்த மடம்** என்ற கதைக்குள் அமைத்து, அந்நாட்டில் எல்லோரையும் நாட்டுணர்ச்சி கொள்ளச் செய்தார். **இரவீந்தரநாத தாகூர்** என்ற புலவர் பாடிய **'ஜனகணமன'** என்ற கீதமும் தேசீய உணர்ச்சியை எழுப்புவதாய் உள்ளது. அரசியல் இயக்கத்தில் ஈடுபட்ட பெரியார்களுள் **உமேச சந்திர பானர்ஜி, அம்பிகாசரண முசும்தார், இராமானந்த சட்டர்ஜி** முதலிய நல்லார் பணி நினைக்கத்தக்கதாம். **சுரேந்திரநாத பானர்ஜி** என்ற பெரியவர் மிக்க நாவன்மை படைத்து, காங்கிரஸ் இயக்கத்துக்கு உறு துணையாய் நின்றவர். **விபினசந்திர பாலர்** என்பவரும் பெரும் பேச்சாளராய் இவ்வியக்கத்திலே சேர்ந்திருந்தவர்.

9. வங்க நாட்டாருள் இருவரை நாம் என்றும் மறக்க இயலாது. அவருள் ஒருவர் **சித்தரஞ்சன தாசர்;** மற்றவர் **சுபாஷ் சந்திரபோஸ்** என்பவர். தாசர் பெரும் பொருள் திரட்டும் நியாயவாதத் தொழிலை நாட்டுப் பணியின் பொருட்டே கைவிட்டவர். சுபாஷ் தமக்கு வரவிருந்த பெரிய உத்தியோகப் பதவியைத் துரும்பென உதறி, நாட்டு நலத்துக்கே உழைத்தவர். சித்தரஞ்சனர்

தம் தந்தையார் பட்ட பெருங்கடனை காலம் கடந்த பிறகும் கடன்காரரை அழைத்து வட்டியோடு கொடுத்துத் தந்தையார் பெயர்க்கு நேர்ந்த மாசு போக்கியவர். தம் செல்வத்தையெல்லாம் நாட்டுப் பணிக்கே கொடுத்துத் தமது மாளிகையையும் நாட்டுக்கு உதவியர். சுபாஷ்சந்திரர் இந்திய மக்கள் போர்த் தொழிலுக்குத் தக்கவரே என்பதை இந்திய தேசியப் படை திரட்டி, தலைமை வகித்து, போர் புரிந்து விளக்கியவர். இருவரும் காங்கிரஸில் நெடுநாள் உழைத்த பெருமை உடையவர்.

10. தமிழ் நாட்டிலும் இவ்வண்ணம் நாட்டுப் பற்றோடு உழைத்த பெரியார் பலர் உண்டு. தூத்துக்குடியிலே சுதேசி நீராவிக் கலக் கம்பெனி தாபித்து, நடத்த முயன்று, அதனாற் பெரும் பொருள் இழந்து, **கப்பல் ஓட்டிய தமிழர்** என்ற பெயர் பெற்ற **வ. உ. சிதம்பரம் பிள்ளை** என்றும் நம் நினைவுக்கு உரியவர். அவர் நல்ல குணம் எல்லாம் நிரம்பியவர்; ஏழை மக்களைக்கண்டு இரங்கும் இளகிய மனம் உள்ளவர்; ஊக்கம் மிக்க நாவன்மை படைத்தவர்; தமிழ் மொழியிலே சிறந்த புலமை பூண்டவர்; தேசத்தொண்டால் வறுமை அடைந்து, சிறை புகுந்து, பலவகைத் துன்பமும் அடைந்தவர். இன்று சுயராஜ்யம் வந்திருப்பதைப் பார்க்க இயலாது, அவர் மறைந்துவிட்டார்.

11. **ஹிந்து** என்ற ஆங்கிலத் தினசரிப் பத்திரிகையை முதலில் நடத்தி, பிறகு தம் அரசியற் கருத்துக்களைப் பொது மக்கள் எல்லோரும் அறிய, தமிழாற் சொல்ல வேண்டும் என்ற துணிவால், சுதேசமித்திரன் பத்திரிகை தோற்றுவித்துக் காரசாரமான கருத்துள்ள பொருள்களை அதன் தலையங்கமாகப் பல்லாண்டு எழுதிய **ஜி. சுப்பிர**

**மணிய அய்யரை** இன்று நாம் நினைக்க வேண்டும். காங்கிரஸ் இயக்கத்தில் ஆதிகாலம் முதல் ஈடுபட்ட பெருமை அவருக்கு உண்டு. உடல் நலம் குறைந்திருந்த தால் பிற்காலத்தில் அரசியற் கிளர்ச்சிகளில் அவர் நேராகக் கலந்து கொள்ளாவிட்டாலும், அவர் உணர்ச்சி எப்பக்கம் சாயும் என்பது காங்கிரஸ் வாதிகள் யாவரும் அறிந்த உண்மையாம். அவரே இன்று நாம் கொண்டா டும் தேசீய கவி சுப்பிரமணிய பாரதியை உலகம் அறிய முதலில் இடம் தந்தவர்.

12. சென்னைச் சட்ட சபையிலும், இந்திய சட்ட சபையிலும் மாகாண மாநாடுகளிலும், காங்கிரஸ் மாபெரும் கூட்டங்களிலும், தமது நாவின் வன்மை யாலும் அரசியலறிவாலும் உண்மையான நாட்டுப் பற்று லும் பிறர் மனத்தைக் கவரும்படி உழைத்த **சத்திய மூர்த்தி**யை இன்று நாம் நினைக்காதிருக்க முடியுமா? அரசாங்க இருக்கைகளில் சலுகைகளோடு அமர்ந்த அங்கத்தினர், அவர் வாதத்தினுற் பட்டபாடுகளைச் சட்ட சபை மண்டபங்களில் உள்ள தூண்கள் வாயிருந்தால் இன்று நன்கு எடுத்துரைக்கும். அவர் இளமை முதலே வறுமையில் மூழ்கியிருந்தும், ஆழ்ந்த அறிவு, ஓயாத உழைப்பு ஒப்புயர்வற்ற சொல்வன்மை, ஒரு கட்சியை முறைப்படி நடத்தும் திறமை முதலிய எல்லா நலன் களும் பொருந்தித் தமிழ் நாட்டுத்தேசீயத் தொண்டருள் தலை சிறந்து விளங்கினர். இன்று நாம் காணும் சுதந்திர இந்தியா அவர் கண்ணிற்படவில்லை.

13. இப்போது சென்னை மாகாண முதல் அமைச் சராக இருக்கும் **இராஜகோபாலாச்சாரியார்** செய்திருக் கும் தேசசேவை எளிதில் அளக்கத் தக்கதன்று. அவர் அறிவின் நுட்பமும், எதிரிகள் மயங்கப் பேசும் திறமும்,

நிர்வாக சக்தியும் வேறுஎவர்க்கும் வாய்ப்பது அருமையே. ஏழைமக்கள் துயரத்தை அறிந்து போக்க முயல்வதில் அவர்க்கு இணையாவார் காந்தியடிகள் ஒருவரே. நல்ல வருவாய் வந்த நியாயவாதத் தொழிலை விட்டு, அரசியல் தொழிலிலே புகுந்து, அவர் செய்துவரும் பணி எளி தென்று யாரே கூறத்துணிவார்! தமிழுக்கு அவர் செய்து வரும் பணியும் அளத்தற்கரியது. இத்தகைய பலரும் உழைத்த உழைப்பின் பயனே இன்று நாம் காணும் சுதந்திர நிலைமையாகும்.

### குறிப்புரை

வாய்த்தது – கிடைத்தது; நெறி – வழி; மிகை – குற்றம்; இணையானவர் - ஒப்பானவர்; நலிந்து – மெலிந்து; பேறு – பாக்கியம்; அடிகோலி – தொடங்கி; வறுமை – தரித்திரம்; தீவிரவாதி – சிறப்புற வாதம் இடுபவர்; மிதவாதம் – மெதுவாக வாதமிடுதல்; அல்லல் – துன்பம்; தாபித்த – நிலை நாட்டிய; மாசு – குற்றம்; நீராவிக் கலம் – கப்பல்; நாவன்மை – பேச்சுத்திறம்; நிர்வாக சக்தி – தொழிலைத் தாங்கும் ஆற்றல்.

### வினாக்கள்

1. இந்திய சுதந்திரத்தின் தந்தையார் என்பது யாரை? ஏன்?
2. பட்டேல் சகோதரர் நாட்டுக்குச் செய்த பணி என்ன?
3. தாதாபாய் நௌரோஜி என்ன தொண்டு இயற்றினார்?
4. திலகர் ஏன் மறவாது நினைக்கத் தக்கவர் ஆவார்?
5. கோகலே நாட்டுக்குச் செய்த சேவை யாது?
6. மாளவியா நிலையான செயலாகச் செய்திருப்பது என்ன?
7. சுபாஷ்சந்திரபோஸ் எச்செயலால் நினைக்கத்தக்கவர்?
8. சித்தரஞ்சனர் எக்குணத்தால் உயர்ந்தவர்?
9. சத்தியமூர்த்தி எத்துறையிலே நாட்டுக்கு உழைத்தார்?
10. கப்பல் ஓட்டிய தமிழர் யார்? அவர் எப்படி வாழ்ந்தார்?

### இலக்கணம்

பெயர்ச் சொல்லின் குணத்தையும், வினைச்சொல்லின் குணத்தையும், உணர்த்தி, அவற்றோடு சேர்ந்து வரும் சொல் **உரிச்சொல்** எனப்படும்.

(உ-ம்) 1. **கடி** நகர்

2. மழை **சாலப்** பெய்தது

இங்கு '**கடி**' என்னும் உரிச்சொல் நகர் என்னும் பெயரின் குணமாகிய காவல் தன்மையுள்ள நகர் என்னும் பொருளில் வந்தது.

'**சால**' என்னும் உரிச்சொல் பெய்தது என்னும் வினைச் சொல்லின் குணமாகிய மிகப் பெய்தது என்னும் பொருளில் வந்தது.

## பயிற்சி

1. 'கடி' என்னும் உரிச்சொல்லை வைத்து இரண்டு வாக்கியங்கள் வரைக.
2. சால என்னும் உரிச்சொல்லை வைத்து மூன்று வாக்கியங்கள் எழுதிக்காட்டுக.

# 14. உணவுக்கு உறுதொழில்

1. நம் உடம்பு உணவால் வளர்வதாம். 'சோற்ருல் எடுத்த சுவர்' என்று உடம்பைப்பற்றி நம் நாட்டார் உரைப்பது உண்டு. 'உண்டி முதற்றே உணவின் பிண்டம்' என்ருர் ஒரு பெரும் புலவர்.

'ஒருநாள் உணவை ஒழி என்ருல் ஒழியாய்;
இருநாளைக்கு ஏல் என்ருல் ஏலாய்;-ஒருநாளும்
என்னோ வறியாய்; இடும்பைகூர் என்வயிறே!
உன்னேடு வாழ்தல் அரிது!'

என்று ஔவையாரும் பாடியுள்ளார். நமக்கு மட்டுமே உணவு வேண்டும் என்பதன்றி, புல், பூண்டு, புழு, பூச்சி முதலிய எல்லா உயிர்களுக்கும் உணவு வேண்டும். மற்ற உயிர்களுக்கும் நமக்கும் ஒரு வேற்றுமை உண்டு: அவை தமக்கு வேண்டிய உணவு வகைகளை, வாழும் இடங்களில், அங்கங்கே தேடிப் பெறுகின்றன. நாம் அப்படித் தேடுதல் இயலாது. உலகத்தில் நம் தொகை மிகுந்து விட்டது. இயற்கையில் நமக்கு வேண்டிய உணவு நம் முயற்சி இல்லாமலே கிடைத்த காலம் ஒன்று இருந்திருக்கலாம். இப்பொழுது நம் முயற்சி இல்லாமல் உணவு ஒரு சிறிதும் நமக்கு அகப்படாது.

2. 'மக்கள் மனம்' என்ற பெருமை பூணும் நமக்கு உணவு தரத்தக்க தொழில் ஒன்றே உள்ளது. அது நிலத்தை உழுது பயிர் செய்யும் தொழிலேயாம். உழவுத் தொழில் தோன்றிய காலம் எது என்பது சரித்திர ஆராய்ச்சியால் எளிதில் அறிய இயலாதது. உலகத்து நூல்களுள் மிகவும் பழைமையான வேதங்களில் உழவுத்

தொழிலைப்பற்றிக் கூறியுள்ளது. எந்த நாட்டில் முதலில் உழவு தோன்றியது என்பதையும் நாம் அறுதியிட்டுரைக்க இயலாது. கரும்பு பயிரிடும் தொழில் ஆதியில் நம் நாட்டிலேதான் தோன்றியது என்ற வரலாறு ஒன்று பழைய தமிழ் நூல்களில் உண்டு. நெல்லும் பண்டைக் காலத்தில் நம் நாட்டுக்கே உரிய பயிராய் இருந்தது என்று நாம் நம்புகிறோம். நன்செய்ப் பயிர்களாகிய இவ்விரண்டும் பல்லாயிர ஆண்டுகளாக நம் நாட்டில் வளர்ந்து வருகின்றன. இன்று நெல்லிற் பலவகை உண்டு. கரும்பிலும் சிலவகை உண்டு. புன்செய்ப் பயிர்களும் பல வகைப்படும்.

3. இயற்கை நலம் மிக்க நம் நாட்டில் மலையுண்டு; கடல் உண்டு; காடுகளும் நிரம்ப உண்டு; வேண்டுமளவு மழையும் பெறலாம். பெய்த மழை ஆறுகளாக ஓடி வீணே கடலுக்குப் போகாமற் காக்கத்தக்க முயற்சிகளே வேண்டும். காலத்தில் மழை பெய்ய வேண்டும்; வேண்டுமளவு பெய்ய வேண்டும்; இந்த இரண்டு நிலைமையும் ஒத்துக்கொள்ளாவிட்டாற் பயிர்த் தொழில் பயன்படாமற்போம். 'ஆடிப் பட்டம் தேடி விதை' என்பது தமிழ் நாட்டுப் பழமொழியாம். ஆடி மாதத்தில் நிலத்தில் விதைக்க வேண்டும் என்றால், அதற்கு முன்பே நிலம் ஈரம் பெற்றிருக்க வேண்டும். நாற்றங்கால்களில் நாற்றுக்கள் தலையெடுத்து வளர்ந்து, பயிர் செய்யத் தக்க பருவம் அடைந்த பிறகும், மழை வளம் வேண்டுமளவுக்குக் கிடைக்காவிட்டால், நாற்று நட இயலாமற் போகலாம். நட்ட நாற்றுக்கள் மழை முகம் காணாமல் வாடினால், உழவன் மனம் வாடாமல் என்ன செய்யும்? நிலத்தில் நட்ட நாற்று பால் பிடித்துக் கதிர்

உருவம் பெறும்வரையில் நன்செய்க்கு நிறைந்த தண்ணீர் வேண்டும். இத்தண்ணீர் வரவு குறையுமானால், நன்செய்ப்பயிர் செழித்து வளராமல் அழிந்துபோய்விடும்.

4. ஆற்று வாய்க்காற் பாசனமும், குளத்து நீரோட்டப் பாசனமும் அமைந்த சோழநாட்டு நிலங்களில் விளைவு பெரும்பாலும் குறைவதில்லை. தென் பாண்டி நாட்டிலும், பாண்டி நாட்டிலும், சோழ நாட்டுக்கு அடுத்தபடியாக மதிக்கத்தக்க நெல் விளைவு உண்டு. சேர நாட்டில் இந்த அளவுக்குச் சிறிது குறைவாகவே நெல் விளைகிறது. கொங்கு நாடு என்ற பகுதியில் சில இடங்களில் ஆற்று நீர் வளம் உண்டு. பெரும் பகுதியில் மழையை எதிர்பார்த்துப் பெருங் கிணறுகளை வெட்டி, பயிர் செய்வதே வழக்கமாய் இருக்கிறது. கொங்கு நாட்டு வேளாளர் நல்ல உழைப்பாளர்; ஆதலால் கிணற்று நீர் இறைத்தே நெல், சோளம், கேழ்வரகு முதலியவைகளை பயிர் செய்து வாழ்கின்றனர். தமிழகத்தில் சில ஊர்களில் ஆற்று வரவும் இல்லை; கால மழையும் வாய்ப்பதில்லை; மக்கள் உழைப்பும் குறைவாய் இருந்தால் நிலங்கள் வீணே கிடக்காமல் என்ன செய்யும்?

5. ‘உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?’ என்றார் பட்டினத்தார். உழைப்பு உழவனது இயற்கை. சோம்பல் அவனிடம் புகுந்து கொண்டால், அவன் வறுமையால் வாடுவதேயன்றி, அவனை நம்பியே உணவுக்குக் கையேந்தி நிற்கும் பல மக்களைப் பட்டினி போட்ட பாவத்துக்கும் ஆளாகிறான். உலகத்தில் எவ்வளவு தங்கம் வெள்ளி இருந்தும் என்ன பயன்? எத்தனை நவமணிகள் குவிந்தும் என்ன பயன்? உணவுக்கு உரிய உழவுத் தொழில் நன்கு நடைபெறாவிட்டால்,

மனித இனம் உயிர் வாழ்வதே அரிதாய்விடும். மாளிகையில் வாழ்ந்தாலும், வெயிலில் மக்களுக்கு ஒதுங்க இடம் இல்லாத குடிசையில் வாழ்ந்தாலும் உணவுக்கு வேண்டுவது உழவுத் தொழில் ஒன்றே

6. உழவுக்கு உரிய கருவிகளிற் சிறந்தது கலப்பையாம். பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த நம் முன்னோர் உழவுக்கு நடத்திய கலப்பையையே இன்றும் நம்மால் நடத்தப்படுகிறது. மற்ற நாடுகள் இப்படிப் பழமை பாராட்டுகின்றனவா என்று நாம் பார்க்க வேண்டும். மேல்நாட்டார் கலப்பையிற் புதுப்புது அமைப்பு அமைத்து விட்டார்கள். மனிதன் மெய் வருந்தாமலே அகன்ற இடத்தை விரைவில் ஆழமாக உழுது கொடுக்கத் தக்க கலப்பைகளும் தோன்றியுள்ளன. இன்றும் நாம் பழைய கறுப்பனே கறுப்பன் என்று இருந்தால், அயல்நாட்டார் விளைவிப்பதுபோல நிரம்பிய பலனை நாமும் நம் நிலங்களில் விளைத்துப் பார்க்க முடியுமா? ருஷிய நாட்டில் பல குடும்பங்களுக்குப் பொதுவாக உள்ள நிலங்கள் உண்டு. அதனால் அங்கு நிலங்கள் நீண்டு அகன்று எவ்வகைப் பொறிகளையும் இயக்கத் தக்க இடமுள்ளவையாய் இருக்கின்றன. நம் நாட்டு நிலங்கள் மிகச் சிறு சிறு அளவில் துண்டாடப்பட்டிருப்பதால், பாட்டுக்குத் தக்க பலன் தாராமற் கெடுகின்றன.

7. மனிதனுக்கு வேண்டுவது அரிசி ஒன்று தானா? சோற்றுக்கு உதவும் தானியங்கள் சில உண்டு. கூழுக்கு உதவும் தானியங்கள் சில உண்டு. எண்ணெய் தரும் விதைகள் சில உண்டு. காய்கள் தரும் செடிகள் சில உண்டு. கீரைகள் தரும் செடிகள் சில உண்டு. பழங்

கள் தரும் மரங்கள் பல உண்டு. உடைக்கு வேண்டும் பருத்தி தரும் செடியும் உண்டு. இவை எல்லாமே பயிர்த் தொழிலால் வளரவேண்டுபவை. இவற்றை வளர்ப்பதற்கு மக்கள் முயற்சி மிகவும் வேண்டும். ‘இன்ன பயிர்க்கு இன்ன நிலம் வேண்டும்; இன்ன காலம் இன்ன பயிர்க்குத் தக்கது’ என்ற உண்மைகளை யெல்லாம் உழவன் அறிய வேண்டும். ‘ஒரு படிப்பும் இல்லாதவன், உழவுத் தொழிலுக்குத் தக்கவன்’, என்று எண்ணிய பழையகால எண்ணம் மாறவேண்டும்.

8. நிலத்தைப் பற்றிய அறிவு, உரங்களைப்பற்றிய அறிவு, பயிர் வகைகளைப் பற்றிய தெளிவான அறிவு முதலிய உழவுக்குரிய அறிவு வகைகள் நிரம்புவதற்கு நல்ல கல்வி வேண்டும். கற்ற உழவன் நிலத்தில் இறங்கி மெய் வருந்தி உழைக்கக் கூசலாகாது. மெய் வருந்தி உழைக்கக் கூசி நிற்பவன் உழவுத் தொழிற்குரிய சிறந்த கல்வியைக் கற்றுக்கொண்டது வீணுகவே முடியும். இனி நம்நாடு உணவுக்குறையற்ற நாடாக வேண்டும் என்ற எண்ணம் கொண்டே அறிவு நலம் பெற்ற எல்லாரும் உழைக்க வேண்டும். நெல்லும், எள்ளும், கனி வகைகளும், பருத்தியும், கடலையும், துவரையும், கோதுமையும், கரும்பும் நம் நாட்டில் நிறைய உண்டாக நாமே உழைக்க வேண்டும்.

9. எவ்வகைப் பயிரைச் செய்தாலும் நாட்டுக்கு அதனுல் விளையும் பயனை அறிந்தே செய்யவேண்டும். அயல் நாடுகளோடு வியாபாரப் போக்கு வரவு கொள்ள உதவும் பயிர்த்தொழில் சில உண்டு. சணல் செடியாக வளர்ந்து நமக்கு எவ்வகை உணவுக்கும் உதவாமல் கோணிகள் தைக்க உதவுகிறது. சணற்பயிர் நம்

நாட்டில் நமக்கு வேண்டும் அளவிற் சிறந்திருந்தது. பிற நாட்டிற்கும் ஏற்றுமதி செய்யும் நிலையும் இருந்ததால் உலகத்தில் சணல் நம் நாட்டிலேதான் மிகுதியாய் வளர்ந்தது. இப்பொழுது இந்தியா இந்துஸ்தான் பாகிஸ்தான் என இரண்டு பிரிவாகப் பிரிந்ததால், கோணித் தொழிற் சாலைகள் இந்தியாவில் மிகுதியாய் இருந்தும் அவற்றுக்கு வேண்டியவரை பயிராகும் நிலங்கள் நம் பகுதியில் இல்லாமற் போய்விட்டன. இந்தக் குறையை எப்படியும் நம் முயற்சியால் நாம் போக்கவேண்டும். போக்காவிட்டால், நம் நாட்டுச் செல்வ நிலைக்குக் குறைவு உண்டாகும்.

10. நிலக்கடலை, தேங்காய், எள்ளு, ஆமணக்கு முதலிய எண்ணெய் வித்துக்கள் நம் நாட்டில் நன்கு பயிராகின்றன. இவற்றின் பிண்ணுக்குகளைக்கூட அயல் நாட்டார் விலை கொடுத்து வாங்கிப் போகிறார்கள். தமிழ் நாட்டில் மிகுதியாய்ப் பயிராகும் எண்ணெய்ப் பயன் தரும் தாவரங்கள் தமிழ் நாட்டார்க்கு முதலில் வேண்டுமளவு பலன் தரவேண்டும். பிறகு வியாபார சரக்காக அயல் நாடு போவதிற் குற்றம் இல்லை. நம் சென்னை மாகாணத்தில் நிலக்கடலை முப்பத்தேழு லட்சம் ஏக்கருக்குமேற் பயிராகிறது. எள்ளும் ஏழு லட்சம் ஏக்கருக்குமேற் பயிராகிறது. இந்த இரு பயிருமே நம் மாகாணத்தின் செல்வ நிலைக்கு உற்ற துணையாய் நிற்கும் பெருமை உடையவை. உணவுப் பொருள்களிற் பல வகையாகப் பயன் படும் எண்ணெய்களை உதவும் பயிர்களை நாம் மிகுதியாய் பயிரிடுதல் வேண்டும்.

11. மிகவும் மலிவாய் இருந்த கடலை நெய், தேங்காய் நெய், எண்ணெய் என்ற மூன்றும் மிகவும் விலையேறி

விட்டன. கடலை நெய் மிகவும் மட்டம் என்று கருதப் பட்ட காலம் போய்விட்டது. கடலை நெய்யிற் பெரும் பகுதி இப்பொழுது வனஸ்பதி என்ற பெயர்பெறும் புதுப்பண்டம் செய்ய உதவுகிறது. கடலைப்பிண் ணுக்கும் எள்ளுப்பிண்ணுக்கும் கால் நடைகளுக்கு நல்ல உணவாகும். எள்ளுப்பிண்ணுக்கு, பாற் பசுக்களுக்கு நல்ல உணவு என்பதை நாம் அறிய வேண்டும். தேங்காயும் தேங்காய் நெய்யும் உணவுக்கு உதவுவதேயன்றி, நம் அழுக்கைப் போக்கும் சோப்புச் செய்யவும் உதவுகின்றன. இந்தப் பிண்ணுக்கும் மாடு களுக்கு நல்ல உணவாம். ஆமணக்கு நெய் பொறிகளில் துருவொழிக்கும் வகையில் மிகவும் உதவுகிறது. அதைச் சுத்தப்படுத்தி நம் உடல் நலத்துக்குப் பயன் படுத்துகிறோம். தேங்காய் நெய்யும், ஆமணக்கு நெய் யும் நல்ல தைலமாகும் காட்சியும் பார்க்கிறோம். இப்படி பலவகையில் உதவும் பயிர்களை வளர்ப்பது நம் முதற் கடமையன்றோ?

### குறிப்புரை

உண்டி – உணவு, பிண்டம் – தொகுதி, ஏல் – ஏற்றுக் கொள், இடும்மைகூர் – துன்பம் மிகுந்த, அறுதிவிட்டு – முடிவு செய்து, இயலா மல் – முடியாமல், வறுமை – தரித்திரம், இயக்கத்தக்க – செலுத்தத் தக்க, மலிவு – விலை குறைவு, பொறிகள் – இயந்திரங்கள்.

### வினாக்கள்

1. உணவுக்கு உறுதொழில் யாது? காரணம் என்ன?
2. மற்ற உயிர்களுக்கும் மனிதனுக்கும் உணவு கிடைப்பதில் உள்ள வேற்றுமை என்ன?
3. நிலங்கள் வீணே கிடப்பது எந்த நாட்டில்?
4. உழவன் சோம்பலாற் பாவியாவது எப்படி?
5. கலப்பையை நாம் எப்படி அமைத்தல் வேண்டும்?
6. எண்ணெய் வித்துக்களை ஏன் விளைவிக்க வேண்டும்?

## இலக்கணம்

கந்தன் புத்தகங்களைப் படித்தான் — இது ஒரு முழு வாக்கியம்.

**கந்தன்** — பெயர்ச் சொல், உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கை இடம், எழுவாய் வேற்றுமை, படித்தான் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்தது.

**புத்தகங்களை** — பெயர்ச்சொல், அஃறிணை, பலவின்பால், பன்மை எண், படர்க்கை இடம், இரண்டாம் வேற்றுமை, செயப்படுபொருள், படித்தான் என்னும் **வினை**முற்றைக் கொண்டு முடிந்தது.

**படித்தான்** — வினைமுற்று, உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கை இடம், இறந்தகாலம், கந்தன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாக வந்தது.

இவ்வாறே சொல்லின் இலக்கணங்களை வாக்கியங்களிலிருந்து அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

### பயிற்சி

இந்தப் பாடத்திலிருந்து நான்கு வாக்கியங்கள் எழுதி, மேற்கண்ட படி சொல்லிலக்கணங்களை வரைந்து காட்டுக.

# செய்யுட் பகுதி

## 1. நீதிச் செய்யுள்

### 1. திருக்குறள்

கடவுள்

1. பிறவிப் பெருங் கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்.

மழை

2. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

பெரியோர்

3. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலாதார்

அறம்

4. மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

இல்வாழ்வு

5. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

மக்கள்

6. மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.

அன்பு

7. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம்.

### விருந்து

8. வித்துமிடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.

### இன்சொல்

9. இன்சொல் இனிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்குவது.

### நன்றியறிவு

10. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று.

### நடு நிலைமை

11. தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப்படும்.

### அடக்கம்

12. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

### ஒழுக்கம்

13. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

### பொறுமை

14. ஒறுத்தார்க்கு ஒருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

### பயனில் சொல்லாமை

15. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

### ஒப்புரவு

16. ஊருணி நீர்நிறைந்தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு.

### ஈகை

17. நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.

### புகழ்

18. தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

### அருள்

19. அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. [லார்க்கு

### தவம்

20. உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.

### வாய்மை

21. வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்.

### இன்னா செய்யாமை

22. இன்னா செய்தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

### கொல்லாமை

23. தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை.

### நிலையாமை

24. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.

### துறவு

25. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

### மெய்யுணர்தல்

26. எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

### ஊழ்

27. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்.

### கல்வி

28. கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

### கல்லாமை

29. கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்.

### கேள்வி

30. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்.

### அறிவு

31. அறிவுடையா ரெல்லா முடையர் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்.

### குற்றம் கடிதல்

32. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

### பெரியார் துணை

33. அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

### தெரிந்து செய்தல்

34. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பதி ழுக்கு.

### வலி யறிதல்

35. ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை
போகா றகலாக் கடை.

### காலம் அறிதல்

36. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி யிடத்தாற் செயின்.

### சுற்றம் தழுவல்

37. சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.

### செங்கோன்மை

38. வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழும் குடி.

### கொடுங்கோன்மை

39. அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

### ஊக்கம்

40. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா னுழை.

### ஆள்வினை

41. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

### இடுக்கண் அழியாமை

42. இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப் பதில்.

### சொல் வன்மை

43. சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

### வினைத் திட்பம்

44. சொல்லுதல் யார்க்கு மெளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

### அவையறிதல்

45. அங்கணத்து ளுக்க அமிழ்தற்றால் தங்கணத்தர்
அல்லார்முற் கோட்டி கொளல்.

### நாடு

46. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு.

### பொருள்

47. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

### நட்பு

48. நவில்தோறும் நூல்நயம் போலும் பயில்தோறும்
பண்புடை யாளர் தொடர்பு.

### கூடா நட்பு

49. தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னார்
அழுத கண்ணீரு மனைத்து.

### பேதைமை

50. பேதைமை யென்பதொன்றி யாதெனின் ஏதங் [கொண்
டூதியம் போக விடல்.

### பெரியாரைப் பிழையாமை

51. எரியாற் சுடப்படினும் உய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.

### மருந்து

52. நோய்நாடி நோய்முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

### குடிமை

53. வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று.

### மானம்

54. தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை.

### பெருமை

55. பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

### சான்றாண்மை

56. இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

### பண்புடைமை

57. பண்புடையார் பட்டுண்டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

### நன்றியில் செல்வம்

58. நச்சுப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று.

### குடி செயல்

59. குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.

### உழவு

60. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்.

## குறிப்புரை

1. பிறவி – பிறப்பு, சேர்ந்தார் – நீந்துவார், சேராதா—நீந்தார்.
2. சார்பு – உதவி, எடுப்பது – உயர்த்துவது.
3. அரிய – அருமையான செயல், செய்கலாதார் – செய்ய இயலாதவர்.
4. மனத்துக்கண் – மனத்தில், மாசு – குற்றம், ஆகுலம் – ஆரவாரம்.
5. வையம் – உலகம், வாழ்வாங்கு – வாழும் முறைப்படி.
6. மெய் – உடம்பு, தீண்டல் – தொடுதல்.
7. என்பு – எலும்பு, இல்லது – இல்லாத உயிர்.
8. மிச்சில் – மிஞ்சிய உணவு, மிசைவான் – உண்பவன்.
9. ஈன்றல் – தருதல், எவன் – ஏன்.
10. நன்றி – உதவி, நன்றல்லது – தீங்கு.
11. தக்கார் – தகுதி உள்ளவர், எச்சம் – சந்ததி.
12. செல்வம் தகைத்து – செல்வம் போன்றது.
13. உலகம் – பெரியோர் சென்ற வழி.
14. ஒறுத்தார் – பிறரைத் தண்டித்தவர்,
    பொன்றும் துணையும் – சாகும் வரைக்கும்.
15. பயன் உடைய – பயன் தரத்தக்க சொற்கள்,
    சொல்லற்க – சொல்ல வேண்டா.
16. ஊருணி – ஊரார் உண்ண உதவும் குளம்,
    அற்று – அதுபோல, அவாம் – விரும்பும்.
17. நல்லாறு – நல்ல வழி, மேலுலகம் – சுவர்க்கம்.
18. தோன்றல் – பிறப்பது.
19. இல்லாகி யாங்கு – இல்லாதது போலவே.
20. நோன்றல் – தாங்குதல், உறுகண் – துன்பம், அற்றே – அவ்வளவே.
21. தீமையிலாத – சொல்வதால் தீமை விளையாத சொல்.
22. இன்னா – துன்பம், நன்னயம் – நல்ல உதவி.
23. நீப்பினும் – போக்க நேர்ந்தாலும்,
    நீக்கும் வினை – உயிர் போக்கும் செயல்
24. கூத்தாட்டு – நாடகம் ஆடுதல்,
    அவைக்குழாம் – சபைக் கூட்டம்.

25. யாதனின் – எதிலிருந்து, நீங்கியான் – நீங்கப் பெற்றானோ' நோதல் – வருத்தம்.

26. மெய்ப்பொருள் – உண்மை நிலைமை.

27. நுண்ணிய – நுட்பமான, கற்பினும் – கற்றாலும்.

28. புண் – புண் போல உள்ளதாற் புண் என்றார்.

29. நனிநல்லர் – மிகவும் நல்லர்.

30. செவிக்கு உணவு – செவியாற் பெறும் கேள்வி இன்பம்.

31. என் உடையரேனும் – வேறு என்ன செல்வம் உடையராய் இருந்தாலும்.

32. எரிமுன்னர் வைத்தூறு – நெருப்பின் முன் வைக்கோற் குவியல்.

33. தமராக் கொளல் – சுற்றத்தார் ஆக்குதல்.

34. கருமம் – செய்யத் தக்கது, இழுக்கு – குற்றம்.

35. ஆகாறு – வரும் வழி, இட்டிது – சிறிது, போகாறு – செலவாம் வழி. அகலாக்கடை – அகன்று போகாதிருந்தால்.

36. ஞாலம் – உலகத்தையே பெறவேண்டும் என்று.

37. சுற்றம் – உறவின் முறை எல்லாம்.

38. வான் – மழை, கோல் – செங்கோல்.

39. அல்லல் – துன்பம், ஆற்றாது – தாங்காமல்.

40. ஆக்கம் – செல்வம், அதர் – வழி, வினாய் – கேட்டு, உழை – இடம்.

41. ஊழ் – விதி, உப்பக்கம் – புறம்.

42. இடுக்கண் – துன்பம், நகுக – நகை செய்க,
ஊர்வது – மேற்செல்வது.

43. இகல் வெல்லல் – பகை வெல்வது.

44. சொல்லிய வண்ணம் – வாயாற் சொல்லியபடியே, செயல் – கையாற் செய்வது.

45. அல்கணம் – கழிநீர் வாய்க்கால், உக்க – சிந்திய,
தங்கணம் – தம் இனம், கோட்டி கொளல் – இனம் சேர்தல்.

46. உறுபசி – மிக்க பசி, பிணி – நோய்.

47. பொருளல்லவர் – மதிக்கத்தகாதவர்.

48. நவில்தோறும் – சொல்லும்தோறும், பயில்தோறும் – பழகும் தோறும்.

49. தொழுதகை – வணங்கிய கை, படை – கொல்லும் கருவி, ஒன்ருர் – பகைவர்.

50. ஏதம் – குற்றம், ஊதியம் – இலாபம்.

51. எரி – நெருப்பு, உய்வு – பிழைப்பு.

52. வாய் – வழி, வாய்ப்ப – பொருந்த.

53. வழங்குவது – பிறர்க்கு உதவுவது, பழங்குடி – பழைமையான குடிகளிற் பிறந்தார்.

54. மாந்தர் – மனிதர். இழிந்தக்கடை – இறங்கிய போது.

55. தொழில் வேற்றுமை – தொழிலால் வந்த வேற்றுமை.

56. சால்பு – சான்ருேர் குணம்.

57. பட்டு – இருப்பதால்.

58. நச்சப்படாதவன் – விரும்பப் படாதவன்,
நச்சுமரம – விஷம் தரும் மரம்.

59. குடிசெய்னன் – என் குடியை உயர்த்துவேன், மடிதற்று – ஆடையை இழுத்துக் கட்டிக்கொண்டு.

60. தொழுது – பிறரை வணங்கி.

## விஞக்கள்

1. இறைவன் அடி எதற்கு உதவும் ?
2. மழை கெடுப்பது எப்படி ? எடுப்பது எப்படி ?
3. எவர் சிறியர் எவர் பெரியர் ?
4. அறம் என்பது எது ?
5. மக்களால் வரும் இன்பங்கள் எவை ?
6. அன்பில்லாத உயிரை அறம் அழிக்கும் ? எதுபோல ?
7. எவன் நிலத்துக்கு விதை வேண்டாம் ?
8. ஒருவர் தக்கவர் என்று எதனுல் அறியலாம் ?
9. பணிவு செல்வர்க்கு எப்படிப் பெருமை தரும் ?
10. இறக்குமளவும் புகழ் பெறுவார் யார் ?
11. உலகம் விரும்பும் பெரியோன் செல்வம் எதற்கு ஒப்பாகும் ?
12. அவ்வுலகம் யார்க்கு இல்லை ? இவ்வுலகமோ ?
13. தவத்தின் உருவம் யாது ?
14. துன்பம் செய்தவரை எப்படி ஒறுக்கலாம் ?
15. கூத்தாடும் கூட்டம்போல் வருவதும் போவதும் எது ?
16. கண்ணுடையார் யார் ? மற்றவரோ ?

17. கல்லாதவர் நல்லவர் ஆவது எப்பொழுது ?
18. செவிக்குணவு எனபது எது ? அதன் சிறப்பு என்ன ?
19. எரிமுன்னர் வைத்திறுபோற் கெடுவது எது ?
20. வரவு செலவில் எந்த நெறியைப் பின்பற்றல் வேண்டும் ?
21. செல்வம் பெற்ற பயன் யாது ?
22. உலகம் எதை நோக்கி வாழும் ? குடிகளோ ?
23. செல்வத்தை அழிக்கும் படை எது ?
24. எவனிடம் செல்வம் வழிகெட்டு வரும் ?
25. இடுக்கணை வெல்ல எளிய வழி கூறு ?
26. அங்கணத்தில் வீழ்ந்த அமுதம் எது ?
27. நாடு என்பது எப்படி இருக்கும் ?
28. பொருளுக்கு உள்ள சிறப்பு என்ன ?
29. பண்புடையார் தொடர்பு எதற்கு ஒப்பாம் ?
30. பகைவர் கண்ணீர் எதற்கு அறிகுறியாம் ?
31. பேதமை என்பது யாது ?
32. பழங் குடியின் இயல்பு யாது ?
33. நிலை கெட்டவர் எதற்கு நிகராவர் ?
34. இன்னா செய்தவரை எப்படி ஒறுத்தலாம் ?
35. உலகம் இருப்பது எதனால் ?
36. நடுவூர் நச்சுமரம் எதற்கு நிகராம் ?
37. தெய்வம் எவனுக்கு உதவுமாம் ?
38. உண்மையாய் வாழ்பவர் யார் ?

## 2. நாலடியார்

புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள்தெரியார்
உய்த்தகம் எல்லாம் நிறைப்பினும் — புத்தகம்
போற்றும் புலவரும் வேறு; பொருள்தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு. 1

கல்வி கரையில; கற்பவர் நாள்சில;
மெல்ல நினைக்கிற் பிணிபல; — தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து. 2

— சமண முனிவர்

### குறிப்புரை

1. அகம் – வீடு. தேற்றும் – தெளிந்து தெளிவித்தல் செய்யும்.
2. அமைவுடைய – கற்கத் தக்கவை, குருகு – அன்னப் பறவை.

### வினாக்கள்

1. கல்வியின் சிறப்பை நாலடியார் எப்படிக் கூறுகின்றது ?
2. ஆராய்ந்து அமைவுடைய நூல்களே கற்கவேண்டும் என்று கூறக் காரணமென்ன ?

## 3. பழமொழி

'உரைமுடிவு காணுன் இளமையோன்' என்ற
நரைமுது மக்கள் உவப்ப — நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன்; **குலவிச்சை**
**கல்லாமற் பாகம் படும்.** 1

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும் — நல்லாய்!
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
**நுணலுந்தன் வாயாற் கெடும்.** 2

— முன்றுறையரையர்

### குறிப்புரை

1. இளமையோன்–கரிகாலன், குலவிச்சை–குலத்தின் வித்தை, பாகம் – பாதி, கரிகாலன் கிழ வேடம் பூண்டு வழக்குத் தீர்த்தான்.
2. நுணல்–தவளை, மணலுக்குள் இருந்து எதிரியை அழைக்கும்.

### வினாக்கள்

1. 'குலவிச்சை கல்லாமல் பாகம் படும்' இவ்வாறு வித்தை பயன்பட்டது யார்க்கு ?
2. "நுணலும் தன் வாயால் கெடும்" இந்தப் பழமொழி விளக்கும் கருத்தென்ன ?

## 4. அறநெறிச்சாரம்

பலகற்றேம் யாமென்று தற்புகழ வேண்டா;
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்;
சிலகற்ருர் கண்ணும் உளவாம் பலகற்ருர்க்(கு)
அச்சாணி யன்னதோர் சொல். 1

இன்சொல் விளைநிலஞ ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை யெருவட்டி
அன்புநீர் பாய்ச்சி யறக்கதி ரீன்பதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய் 2

— முனைப்பாடியார்

### குறிப்புரை

1. ஞாயிறு – சூரியன், கண் – ஏழாம் வேற்றுமையுருபு, அச்சு ஆணி – தேர் அச்சுக்கு உரிய கடையாணி.
2. பைங்கூழ் – பசிய பயிர், களை கட்டு – களை பிடுங்கி.

### விஞக்கள்

1. தற்புகழ்ச்சி கூடாது — என்பதை விளக்க முனைப்பாடியார் யாது கூறுகிருர் ?
2. அறப் பயிரை எப்படிப் பயிரிட வேண்டும் ?

## 5. நீதி நெறி விளக்கம்

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க; — தம்மினும்
கற்ருரை நோக்கிக் கருத்தழிக கற்றவெல்லாம்
எற்றே யிவர்க்குநா மென்று. 1

தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்; — தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்பம்
நயவாமை யன்றே நலம்? 2

— குமரகுருபரர்

## குறிப்புரை

1. மெலியார் – எளியவர், உடைமை – செல்வம், அழிக – வருந்துக, எற்றே – எம்மாத்திரம்.
2. வியப்பிப்பான் – பிறர் புகழ நினைப்பவன், நயவாமை – விரும்பாமை.

## வினாக்கள்

1. 'அகமகிழ்க' 'கருத்தழிக' யார் யாரை நோக்கி என்று குறிப்பிடுக.
2. விளக்கை நீர்விட்டு எரியச் செய்வது போன்றது எது ?

# 2. கதைச் செய்யுள்

## 1. கண்ணனும் சகதேவனும்

**கண்ணன்:**

தமையன் மார் கருத்துரைத்தார் செவியிற்கொண் [டேன்
தம்பிசக தேவா!நின் கருத்தும் சொன்னால்
அமையவே தூதுரையான் சொல்ல லாகும்;
அதற்கான வழியுரைப்பாய் இளைய கோவே! 1

**சகதேவன்:**

அடிபணியும் நெறிதெளியா அடிமை நாயேன்
அறிவறிந்த பெரியவர்முன் அரச நீதி
முடியவுணர்ந் தவன்போல மொழிவ துண்டோ?
முகுந்த!நின துளக்கருத்தே முடிக நன்றே! 2

**கண்ணன்:**

மூத்தவர்நால் வருமுரைத்த முறையை விட்டாய்
முழுப்பொறையும் எனக்கெனவே மொழியா [நின்றாய்
சாத்திரங்கள் பயின்றுணர்ந்த தம்பி! நீதான்
தனிநிலையில் உன் கருத்தைத் தகவே சொல்வாய். 3

**கதைத் தொடர்பு:**

எனவுரைத்துக் கண்ணபிரான் அழைத்துச் செல்ல
இளையமகன் அழகியதோர் மன்றம் புக்கு
மனநினைத்த கருத்தையெல்லாம் உரையா முன்னம்
மறையறியாப் பரம்பொருளை வணங்கி னனே. 4

**கண்ணன் :**

வணங்குகின்ருய் வாழ்த்துகின்ருய் பரவா நின்ருய்
மனநினைந்த கருத்தையெலா மறையா நின்ருய்
இணங்குகின்ருய் பிறருடனே யிணங்கி வாழ்ந்தும்
இணக்கமில்லா தவன்போன்றே இருப்பாய் நீயே. 5

அகநினைத்த வணமுரைத்தல் முறைமை யன்ருே?
அறிவுடையாய்! திறனுடையாய்! அகத்தே
[கொண்ட
மிகவுயர்ந்த கருத்தையெலாம் வெளியிட் டோத
வேண்டுகின்றேன் உரைப்பாயோ விரைவி
[லீங்கே? 6

நூற்றுவரு மைவருமா நுமக்குள் வந்த
நோய்தருமிப் பெரும்பகையின் நுடக்கத் தாலே
மாற்றலரா யுலகிலுள மன்ன ரெல்லாம்
வகையிரண்டாய்ப் பிரிந்துநின்ருர் அறிவாய் நீயே. 7

மன்னர்பலர் படைஞர்பல கோடி வீரர்
மாய்வதற்கே களங்குறுகி வாரா நின்ருர்.
என்னவகை புரிவதனுல் இவரை யெல்லாம்
இருநிலத்து வாழ்வுபெற இயற்ற லாமே? 8

வலியபெரும் பாரதப்போர் வாரா வண்ணம்
வகையுளதேல் மகனே!நீ வழங்கல் வேண்டும்;
மெலிவில்துயர் உலகமெலாம் பரவா முன்னே
விலக்கவொரு வழியறிந்தால் விளம்பு வாயே. 9

**சகதேவன் :**

கன்னனுக்கு முடிசூட்டி விசய னுவி
காலனுக்கே கையளித்துத் தேவி கூந்தல்
சின்னமுறக் களைந்துநின தடியிற் சேர்த்தே
சிறுதளையும் பூட்டிவிட்டாற் சமரம் நிற்கும். 10

அன்னசெயல் முடித்துவிட அருள்செய் வாயேல்
அமர்நிகழா தமர்நிகழா தறைந்தேன் ஐயா!
என்னவகை வேறுவினை யியற்றி னாலும்
எழும்பெரும்போர்; நிறுத்தவழி யில்லை யாலோ. 11

**கண்ணன் :**

மொழிந்தசெய லெலாமரிய; மொழிந்த நான்குள்
முன்னைமூன் றுமொருவாறு முடியு மேனும்
கழிந்தவொரு செயல்முடிக்க வென்னை யெங்ஙன்
கட்டுதியோ! தளையுளதோ? கழறு வாயே. 12

**சகதேவன் :**

நின்பெருமை நீயறியாய்; நிகமந் தானும்
நிகழ்த்துநெறி யறியாதே மயங்கா நிற்கும்
என்சிறுமை யானறிவேன்; எனினு மையா!
எளிதினுனைக் கட்டுகின்றேன் மறைவாய் நீயே. 13

**கதைத் தொடர்பு :**

மாயவனு மன்பனது மனத்தைக் காண்பான்
வடிவமொரு பதினாறு யிரமே பூண்டான்;
தூயவனு மவனுருவின் தோற்றந் தேறித்
தொல்லையுரு வடிபிடித்துத் தளைசெய் தானே. 14

**கண்ணன் :**

மனத்தாலே கழல்பிடித்துத் தளையா நின்றாய்
மகனேயுன் றிறமறிந்தே மகிழ்ந்தே னப்பா!
இனத்தாலே யுயர்வுடையாய் பெருமைக் கெல்லாம்
இடமாவாய் வேண்டுவதும் யாதோ
சொல்வாய். 15

**சகதேவன் :**

எமையுடையாய்! உலகுடையாய்! இணை
[ஒன்றில்லாய்
இனியெழும்பா ரதப்போரில் ஐவர் எம்மைக்
கமையுடனே குறைபொறுத்துக் காத்தல் வேண்டும்
காத்தலுன தியல்பன்றோ கருணை மாலே! 16

—கனகம்

## குறிப்புரை

'கண்ணனும் சகதேவனும்' என்னும் இச்சிறு கதைப் பகுதி பாரதத்தில் உத்தியோக பருவத்தில் கிருஷ்ணன் தூது செல்லும் வரலாற்றைப்பற்றி, புதுமுறையில் அமைந்தது. வில்லி பாரதத்தில் உள்ளபடியே அமைவது :

1. தமையன்மார் – தருமன் முதலிய நால்வர், தூதுரை – தூத வாசகம், இளையகோ – ஐவருள் இளையவனான அரசன்.
2. அடிமை நாயேன் – சகதேவன் தன்னை சிறுமைப்படுத்திப் பேசிய பேச்சு, 'முகுந்த நினதுளக் கருத்தே முடிக' என்றது சகதேவன் திறமையை விளக்கும் மற்ற எல்லாரும் தம் கருத்தை யுரைக்க, இவன் கண்ணபிரான் எண்ணியதே நடக்கும் என்பதை அறிவானாதலால், இப்படி உரைக்கின்றான்.
3. முழுப்பொறை – எல்லாப் பாரமும், தனி நிலை – பிரத்தியேகமாக.
4. கதைத் தொடர்பு காட்ட, இப்பாட்டு நேர்க்கூற்றாய் இல்லை.
5. 'இணங்குகின்றாய் இணக்கமில்லாதவன்போல இருக்கின்றாய்' என்றது சகதேவன் தத்துவஞானம் உள்ளவன் என்ற உண்மையை விளக்குவது.

6–7. மனத்தில் நினைத்தபடி சொல்ல வேண்டும் என்கிறான் கண்ணன். நூற்றுவர் – கௌரவர், ஐவர் – பாண்டவர், மாற்றலர் – பகைவர்.

8. களம் – போர்க்களம், இருநிலம் – உலகம்.
9. வழங்கல்–சொல்லல், விலக்க வழி விளம்புவாய் என்கிறான்.

10. காலன் – எமன், தேவி – திரௌபதை, தளை – விலங்கு, சமரம் – போர்.
11. அமர் – போர், அறைந்தேன் – சொன்னேன்.
12. எல்லாம் அரிய – எல்லாச் செயலும் செயற்கு அரியவை, கழிந்த ஒரு செயல் – எஞ்சி நின்ற என்னைக் கட்டும் செயல்.
13. நின் பெருமை நீ அறியாய் – இறைவனே வேதம் அருளியவன். இப்படிவம் இந்நிறம் இவ்வண்ணம் இவ்வுரு என்று தன்னைப் பற்றியே அவன் அங்கு உரைக்கவில்லை. ஆதலால், இறைவனாகிய கண்ணனைப் பார்த்துச் சகதேவன் இப்படி உரைத்தான். நிகமம் – வேதம்.
14. மாயவன் – கண்ணன், தூயவன் – சகதேவன்.
15–16. கண்ணன் சகதேவனுக்குத் தந்த வரம் ஐவரைக் காத்தல். கழல் – பாதம், தளையா நின்றாய் – கட்டுகின்றாய், கமை – பொறுமை.

## வினாக்கள்

1. கண்ணன் சகதேவனை நோக்கி என்ன கேட்கின்றான் ?
2. சகதேவன் பாரதப் போர் வராதிருக்கக் கூறும் உபாயங்கள் எவை ?
3. சகதேவன் கூறிய உபாயங்களுள் முடியாத உபாயம் எது?
4. அந்த உபாயம் எப்படி சகதேவனுக்குக் கைகூடிற்று ?
5. சகதேவன் வேண்டிய வரம் என்ன ?

## 3. சதகச் செய்யுள்

### 1. அறப்பளீசுர சதகம்

உடன் பிறப்பு :

கூடப் பிறந்தவர்க் கெய்துதுயர் தமதுதுயர்
கொள்சுகந் தஞ்சுகமெனக்
கொண்டுதாந் தேடுபொரு ளவர்தேடு பொருளவர்
[கொள்
கோதில்புகழ் தம்புகழெனத்
தேடுற்ற வவர்நிந்தை தம்நிந்தை தம்தவம்
தீதிலவர் தவமாமெனச்
சீவனென் றுடல்வே றிவர்க்கென்ன ஐந்தலைச்
சீறரவ மணிவாய்தொறும்
கூடுற்ற இரையெடுத் தோருடல் நிறைத்திடும்
கொள்கைபோற் பிரிவின்றியே
கூடிவாழ் பவர்தம்மை யேசகோ தரரெனக்
கூறுவது வேதருமமாம்;
ஆடிச் சிவந்ததெந் தாமரைப் பாதனே!
அண்ணலெம தருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே! 1

நற்சீடரியல்பு :

வைதாலு மேகொடுமை செய்தாலு மேசீறி
மாறு திகழ்ந்தாலுமே
மனதுசற் றுகிலுங் கோணது நாணது
மாதாபி தாவெனக்குப்
பொய்யாமல் நீயென்று மகிழ்வோடு பணிவிடை
புரிந்துபொரு ளுடலாவியும்

புனிதவுன் றனதெனத் தத்தம்செய் திரவுபகல்
போற்றிமல ரடியில்வீழ்ந்து
மெய்யாக வேபரவி யுபதேச மதுபெற
விரும்புவோர் சற்சீடராம்;
வினவே ரறும்படி யவர்க்கருள் செய்வதே
மிக்கதே சிகரதுகடன்;
ஐயா!பு ரம்பொடிபடச்செய்த செம்மலே!
அனக!எம தருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே! 2

— அம்பலவாணக் கவிராயர்

## 2. குமேரச சதகம்

### பிறப்பால் உயர்வில்லை :

சிங்கார வனமதி லுதிப்பினுங் காகமது
தீஞ்சொல்புகல் குயிலாகுமோ?
திரையெறியும் வாவியிற் பூத்தாலு மேகொட்டி
செங்கஞ்ச மலராகுமோ?
அங்கான கத்திற் பிறந்தாலு முயலான(து)
ஆனையின் கன்றுகுமோ?
ஆண்மையா கியநல்ல குடியிற் பிறந்தாலும்
அசடர்பெரி யோர்ஆவரோ?
சங்காடு பாற்கடல் பிறந்தாலும் நத்தைதான்
சாளக்கி ராமம்ஆமோ?
தடமேவு கடல்நீரி லேயுப்பு விளையினும்
சாரசர்க் கரையாகுமோ?
மங்காத செந்தமிழ் குறுமுனிக் குபதேசம்
வைத்தமெய்ஞ் ஞானகுருவே!
மயிலேறி விளையாடு குகனே!புல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே! 3

**இது செய்தார் இவர் :**

தந்தைதாய் வாக்யபரி பாலனம் செய்தவன்
 தசரதகு மாரராமன்;
தமையனருள் வாக்யபரி பாலனம் செய்தோர்கள்
 தருமனுக் கிளையநால்வர்;
சிந்தையி லுணர்ந்துகுரு வாக்யபரி பாலனம்
 செய்தவ னரிச்சந்திரன்;
தேகியென் றோர்க்கிலையெ னுவாக்ய பாலனம்
 செய்தவன் தானகன்னன்;
நிந்தைதவிர் வாக்யபரி பாலனம் செய்தவன்
 நீள்பலமி குத்தவனுமான்;
நிறையுடன் பர்த்தாவின் வாக்யபரி பாலனம்
 நிலத்தினில்ந ளாயினிசெய்தாள்;
மந்தைவழி கோயில்குள முங்குலவு தும்பிமுகன்
 மகிழ்தரவு கந்ததுணைவா!
மயிலேறி விளையாடு குகனே!புல் வயல்நீடு
 மலைமேவு குமரேசனே! 4

— குருபாத தாசர்

## குறிப்புரை

1. நிந்தை – இகழ்ச்சி, கோது – குற்றம். சீவன் ஒன்று உடல் வேறு – உயிர் ஒன்றே; உடம்பு வேருய் உளது, சீறரவம் – சீறுகின்ற பாம்பு, ஐந்தலை நாகம் ஐந்து தலைகளால் உணவு எடுத்து ஓர் உடம்பை நிரப்புவதுபோல உடன் பிறந்தவர் ஒத்து வாழவேண்டும் என்கிருா.

2. மாதா பிதா–தாய் தந்தையர். பொருள் உடல் ஆவி–தேடிய செல்வம், தன் உடம்பு, உயிர் என்ற மூன்றும்; தத்தம் – கொடுத்து விடுவது, நற்சீடர் – நல்ல சீடர், தேசிகர் – குருக்கள், புரம் – திரிபுரம், பொடிபட – பொடியாக (சாம்பராக)

3. சிங்காரம் – அழகு, தீஞ்சொல் – இன்சொல், திரை – அலை, வாவி – தடாகம், கஞ்சம் – தாமரை, கானகம் – காடு, நத்தை – நந்து வகை, சாளக்கிராமம் – பூசைக்குரிய பொருள், தடம் – அகற்சி, குறுமுனி – அகத்தியர்.

4. குருவாக்கிய பரிபாலனம் அரிச்சந்திரன் செய்தது – வசிஷ்டர் அவன் மெய்யன் என்று கூறிய வாக்குறுதியைக் காத்தது, விசுவாமித்திரர் தோல்வியுற அவ்வாதம் இடமாயிற்று. தேகி – கொடுங்கள், நிந்தை தவிர் வாக்கியம் – எஜமான வாக்கியம், பர்த்தா – நாயகன். நளாயினி நாயகன் சொல்லைக் காத்தாள்,

## வினாக்கள்

1. எப்படிப்பட்டவரைச் சகோதரர் என்று கூறலாம் ?
2. நல்ல சீடர் என்று எவரைக் கூறலாம் ?
3. பிறப்பால் உயர்வு ஏற்படாது என்பதற்கு ஆசிரியர் கூறும் எடுத்துக்காட்டுக்கள் எவை ?
4. (1) இராமனிடம் அமைந்த சிறந்த தன்மை எது ?
   (2) தருமனுக்கு இளையவரிடம் காணும் இயல்பு எது ?
   (3) அரிச்சந்திரனிடம் அமைந்த தன்மை எது ?
   (4) கண்ணன், நளாயினி இவர்களிடம் உள்ள இயல்புகள் எவை ?

## 4. சுதந்திரோதயம்

உதயம் எழுந்தது தாயே! — சுதந்திர
உதயம் எழுந்து படர்ந்தது தாயே!
இதயம் மகிழ்ந்தது தாயே! — உனதருள்
ஏந்திய மைந்தர் இனித்தலை குனியோம் (உதயம்)

அறத்தினுல் வெற்றியைக் கண்டோம்! — அன்னையே!
அன்னியர் ஆட்சி அகல்வது கண்டோம்!
திறத்தினுல் உரிமையைக் கொண்டோம்!—மெய்ம்மைச்
செயலினுல் தவத்தினுல் சிறைத்துயர் விண்டோம்!
(உதயம்)

சிறைக்களம் தவக்களம் செய்தோம் — அங்குனைச்
சிந்தனை யாலயம் சேர்த்துநெய் பெய்தோம்.
பொறைக்குணம் பொருந்தவே பூண்டோம்—அன்னையே!
புண்ணிய காந்தியாற் புவியர சாண்டோம். (உதயம்)

எண்ணித் துணிவன துணிந்தோம் — துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கெனப் பணிந்தோம்.
உண்ணிற்கும் உன்னையே தெரிந்தோம் — அன்னையே!
உனதருள் துணைக்கொண்டே உரிமைப்போர் புரிந்
தோம். (உதயம்)

அன்பையே யுலகினர்க் குரைப்போம் — அதனையே
அறிகிலார் உளத்தையுன் னருளினுற்கரைப்போம்.
இன்பையே யுயிர்களுக் கீவோம் — அவையெலாம்
எம்மைமெய் யன்பரா யேற்கவே வாழ்வோம்,
(உதயம்)

இனத்தினுற் பிணங்குதல் புரியோம் — மனிதரை
இழிந்தவர் உயர்ந்தவர் என்னவே பிரியோம்.

மனத்தினால் எவரையும் மதிப்போம் — உள்ள
மதத்திலே திடமுள்ள மனிதரைத் துதிப்போம்.
(உதயம்)

மொழிகளால் எவரையும் பகையோம் — எந்த
மொழியையும் இழிவெனப் பழிசெய்து நகையோம்.
வழிகளால் பன்மையை அறிவோம் — அவைகள்
வருமுடி விடத்திலே யொருமையே தெரிவோம்.
(உதயம்)

பிறர்தரும் சரித்திரம் படித்தோம் — அன்னை
பெருமைகள் மறையவே சிறுமைகள் பிடித்தோம்.
உறவினர் வரலாறு படிப்போம் — அன்னையே
உண்மையைத் தெளிவதில் திண்மையைப் பிடிப்
போம். (உதயம்)

தொழில்களிற் பிறர்கையே பார்த்தோம் — அந்தத்
துயர்தவிர் புதுத்தொழில் துறைகளைச் சேர்த்தோம்.
எழில்தரு கலைகளும் பயில்வோம் — இனியாம்
எங்கெந்தத் துறையிலும் ஏறவே முயல்வோம்.
(உதயம்)

கடலிலே கலங்களை விடுவோம் — எல்லை
காணரு வானத்தே கலங்களை விடுவோம்.
உடலிலே உயிரிலே எழுவோம் — உணர்வினில்
உருகியே யன்னைநின் திருவடி தொழுவோம்.
(உதயம்)

— கனகம்

### குறிப்புரை

1. சுதந்திரம் என்ற சூரியன் எழுந்ததாகப் பாடிய பாடல் இந்திய நாடு சுதந்தரம் பெற்றதால் உலகுக்கு வரும் நலங்களை விளக்குவது.

2. அன்னியர் ஆட்சி—ஆங்கில அரசியல், உரிமை—சுதந்திரம். விண்டோம் — ஒழித்தோம்.
3. சிறைச்சாலையைத் தவச்சாலையாகச் செய்தோம். அங்கு மனக் கோயிலில் வைத்து வணங்கினேம்.
6. இனத்தினுற் பிணங்குதல் — உலக மக்கள் பிரியும்முறை, உள்ள மதத்தில் — அவரவர் இருக்கும் மார்க்கத்தில்.
8. முன் படித்த சரித்திரங்கள் இந்திய மக்கள் சிறுமையே பேசின. இனி எழுதப்படுபவை உண்மைப் பெருமையை உரைக்கும்.
10. கடல் விடு கலம் — மரக்கலம், வானத்தில் விடும் கலம் — ஆகாய விமானம்.

## வினுக்கள்

1. சிறைக்களம் எப்படிப் பயன்பட்டது கூறுக ?
2. சுதந்திரோதயத்தில் திருக்குறள் கருத்து எங்கு வந்துள்ளது?
3. இன ஒற்றுமை வேண்டும் என்பதைத் தெரிவிக்கும் கண்ணி எது ?
4. மொழிப் பகை கூடாது என்பதைக் கூறும் பாடல் எது ?
5. 'திண்மையைப் பிடிப்போம்' எந்த வகையில் திண்மையைப் பிடிப்போம் என்கிறார் ?

சென்னை-600 008
136188

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்.

TB
031 (8)

RJR/1260